REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 நவம்பர் 26 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 281 | Friday 26, November, 2021 | 64 பக்கங்கள் | 30/-

நாட்டில் கொரோனா பரவல் அதிகரிப்பு

உயிரிழந்தோர் எண்ணிக்கை



14,232

நாட்டில் கொவிட் தொற்றுக்குள்ளாகி மேலும் 27 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார். 08

அரச ஊடக நிறுவனங்களை திறைசேரிக்கு சுமையில்லாது செயற்படுத்த திட்டம்

பாராளுமன்றத்தில் ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

அரச ஊடக நிறுவனங்கள் திறைசேரிக்கு சுமையாக இல்லாதவாறு செயற்படும் வகையில் விசேட செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும் என ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஊடகத் துறையை நவீனமயப்படுத்தி காலத்துக்குப் 08

மருத்துவ படிப்பு 22 வயதிலும் ஏனைய துறைகள் 20 வயதிலுமாக

பல்கலைக்கழக மாணவரது கல்வி முறை தாமதமாகாமல் இருப்பதை உறுதிசெய்யவும்

பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி தாமதப் படுத்தப்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (24) அலரி மாளிகையில் வைத்து வலியுறுத்தினார்.

மருத்துவ பட்டப் படிப்பினை 22 வயதில் நிறைவுசெய்வது மற்றும் 08

"அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருடனான சந்திப்பில் பிரதமர் வலியுறுத்து"



அத்தியாவசிய பொருட்களுடன்

ஆயிரக்கணக்கான கொள்கலன்கள்

விரைவில் விடுவிக்க நடவடிக்கை

நாட்டில் டொலர் தட்டுப்பாடு காரணமாக உருளைக்கிழங்கு, பருப்பு, பெரிய வெங்காயம், சீனி, நெத்தலி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய ஆயிரம் கொள்கலன்கள் 08

சர்வதேச நீதிமன்றம் முன்பாக நிறுத்த சிலர் பிரயத்தனம்

நாம் ஒருபோதும் எந்நாட்டின் முன்பாகவும் மண்டியிடோம்

எமது நாட்டின் சுயகௌரவத்தை விட்டுக்கொடுக்க மாட்டோம்

பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் G.L. பீரிஸ்

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

எமது நாட்டுக்கு எதிராக சாட்சியங்களை தேடி, சர்வதேச நீதிமன்றங்களின் முன்னால் நிறுத்தும் மனித உரிமை கவுன்ஸிலின் முயற்சியை ஏற்க முடியாது என தெரிவித்த வெளிவிவகார 08

மனித உரிமை கவுன்ஸிலை ஏற்கிறோம். ஆனால் எமது நாட்டை நோட்டமிடுவதை ஏற்க முடியாது

கட்டுநாயக்க விமான நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்தின் B பக்கேஜை நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க மற்றும் நாமல் ராஜபக்ஷ உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

கிண்ணியா தள வைத்தியசாலைக்கு நேற்று (25) விஜயம் செய்த கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், குறிஞ்சாக்கேணி படகு விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை சுகம் விசாரித்தபோது... (படம்: ரொட்டவெவ குறூப் நிருபர்)

நல்லாட்சி அரசாங்கமே காணாமற் போனோர் அலுவலக செயற்பாடுகள் சீர்குலைய காரணம்

பாராளுமன்றத்தில் சுரேன் ராகவன் MP ஆதாரங்களுடன் குற்றச்சாட்டு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகளை சீர்குலைத்தது கடந்த நல்லாட்சி அரசாங்கமே என ஆளும் கட்சி எம்.பி சுரேன் ராகவன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

காணாமற் போனோர் 450 பேரின் முறைப்பாடுகள் தமிழில் காணப்பட்ட நிலையில் 08

பிரதமர் அலுவலகத்தில்

ஷிராஸ் யூனுஸ் எனும் நபர் எவ்வித பதவிகளிலும் இல்லை

ஷிராஸ் யூனுஸ் எனும் நபர் பிரதமரின் முஸ்லிம் விவகார இணைப்பாளராக செயற்படுவதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவையாகும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஷிராஸ் யூனுஸ் எனும் குறித்த நபருக்கு பிரதமர் அலுவலகத்தில் எவ்வித பதவிகளும் வழங்கப்படவில்லையெனவும் 08

58,000 பட்டதாரிகளுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

41,000 ரூபா சம்பளமும் வழங்கப்படவுள்ளது

அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் (புதன் கிழமை) உரையாற்றி 08

ஒரு இலட்சம் km வீதிகள் நிர்மாணத்துடன்

3,000 சிறு பாலங்களை அமைக்கும் பணியும் ஆரம்பம்

ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் கிங்ஸ்லி

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதியின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்திற்கு அமைய ஒரு இலட்சம் கிலோமீட்டர் வீதிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் 08

03 பொருளாதார நெருக்கடி ஜனவரியில் முடிவுக்கு வரும்

மத்திய வங்கி ஆளுநர் அஜித் கப்ரால்

03 எலிக்காய்ச்சலால் இதுவரை 5,275 பேர்வரை பாதிப்பு

இவ்வருடம் ஜனவரி முதல் இத்தொகை பதிவு

குறிஞ்சாக்கேணியில் கடற்படை படகு சேவை

நேற்று முதல் முன்னெடுக்கப்படுகிறது

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை – குறிஞ்சாக்கேணி பகுதியில் படகு சேவை 08

விக்கல் வீராச்சாமி

முவ்வாரப் எம்பிக்கு ஊரில இருக்கிற சப்போட் பாத்து பழைய அரசியல்வாதிகள் எல்லாரும் திகைச்சு நிக்கினமாமே....

நல்லதை செய்தா நாலு பேர் கூட நிப்பினம் எண்டது உண்மைதான், சமூகத்துக்கு துடிப்பான இளம் தலைமை கிடைச்சிருப்பதில சந்தோசம்...!!!

ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிக்க புதிய வழிகாட்டல்கள்

ஜனாதிபதியின் செயலாளரினால் வர்த்தமானி வெளியீடு

ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கான புதிய வழிகாட்டுதல்கள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி ஜயசுந்தரவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி 08

அறநெறி பாடசாலைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பம்

இந்து சமய கலாசார பணிப்பாளர் அறிவிப்பு

கொரோனா காரணமாக மூடப்பட்டிருந்த நாட்டிலுள்ள இந்து அறநெறிப் பாடசாலைகளை எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் சுகாதார நெறிமுறைக் கிணங்க மீளத் திறக்குமாறு 08

03 பதவி விலகல் கடிதத்தை கையளித்தார் சமரசிங்க

அனைவரும் இணைந்து கொழும்பு நகரத்தை சுத்தமாக வைத்திருப்போம்!

உங்கள் கழிவுகளை பின்வரும் முறைமைக்கு அமைவாக பிரிந்திடுங்கள்.



உக்கும் கழிவுகள்

உங்கள் இல்லத்தில் சேரும் கழிவுகளில் நீங்கள் உரம் தயாரிக்கவில்லை என்றால் தயவுசெய்து அதை CMC யிடம் கையளிக்கவும்.

- சமையலறை காய்கறி கழிவுகள் மற்றும் பழக்கழிவுகள், எஞ்சிய கழிவுகள், தேங்காய் சக்கைகள், பயன்படுத்திய தேயிலை கழிவுகள், பைகள், முட்டை ஓடுகள், மாமிச கழிவுகள்.
- வீட்டுத்தோட்டத்தில் சேரும் குப்பைகள் மர இலைகள், பூக்கள்
- துண்டாக்கப்பட்ட இளநீர் மட்டைகள்

மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகள்

பின்வரும் பொருட்கள் சுத்தமாக இருக்கவேண்டும்.

- கண்ணாடிகள்
- கார்ட்போட் / கடதாசி
- சுத்தமான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- உலோகங்கள்
- சுத்தமான தேங்காய் சிரட்டைகள்
- சுத்தமான டின்கள்
- சுத்தமான யோகட் மற்றும் பிளாஸ்டிக் கோப்பைகள்
- மறுசுழற்சி செய்யக்கூடிய சமையலறை உபகரணங்கள்

மறுசுழற்சி செய்யமுடியாத கழிவுகள்

- மண்ணான பொலித்தீன் / பிளாஸ்டிக்
- சுகாதார நப்கின்கள்
- அழுக்கான யோகட் கோப்பைகள்
- பால் பேக்கட்டுகள்
- பயன்படுத்திய சஷே பேக்கட்டுகள் (ஷம்பூ, சோஸ், மைலோ மற்றும் பல)
- தலைமுடி
- ஷேவர் மற்றும் பிளேடுகள்
- சுத்தமற்ற டின்கள்
- செரமிக் பாத்திரங்கள்
- இறப்பர்
- மண் பாத்திரங்கள்
- மருந்துப் பொருட்கள்

திண்மக்கழிவு முகாமைத்துப் பிரிவு
கொழும்பு மாநகர சபை
வெப்: www.colombo.mc.gov.lk
தொ.பே: 0112 431 694

மாவட்டம் D2A
கொழும்பு கோட்டை மற்றும் புறக்கோட்டை

141, கிருல வீதி, கொழும்பு 05
ஈ-மெ: info@cleantech.lk
தொ.பே: 0112 368 768

cleantech because we care

42 වන ජාතික යෞවන සම්මාන

தேசிய இளைஞர் விருதுகள்

National Youth Awards

තාරුණ්‍යයේ අභිමානය - ශ්‍රී ලාංකේය බලාපොරොත්තුව

இலங்கை இளைஞர்களின் பெருமைமிகு திறமைகளை
மதிப்பிடுவது அரசின் தலையாய கடமையாகும்.

"தேசிய இளைஞர் விருதுகள் – 2020"

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,
மேதகு நாமல் ராஜபக்ஷ அவர்களின் தலைமையில்

வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு
நெலும் பொகுன மகிந்த ராஜபக்ஷ பிரதான திரையரங்கில்

තරුණ හා ක්‍රීඩා අමාත්‍යාංශය
இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சகம்
Ministry of Youth & Sports

தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம்
இலங்கை இளைஞர் கழகங்களின் சம்மேளனம்

SRI LANKA Youth

NYSC

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2021 நவம்பர் 26 வெள்ளிக்கிழமை

தொழுகை நேரம்

சுபஹ்	04.45
லுஹர்	11.59
அஸர்	03.21
மஃரிப்	05.51
இஷா	07.05

இன்றைய சுபதினம்

பிலவ வருடம் கார்த்திகை 10

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

ஈஸ்டர் தாக்குதலுக்கு நல்லாட்சி அரசே பொறுப்பு கூற வேண்டும்

புதிய களனி பால திறப்பு விழாவில் ஜனாதிபதி

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை உள்ளிட்ட அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயர் தொழில்நுட்பத்துடன் கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 'கல்யாணி பொன் நுழைவாயிலை' நேற்று முன்தினம் (24) இரவு திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தொடர் நடவடிக்கைகளுக்காக நீதியரசர் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆகியவற்றிடமும் கையளிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு வெளிப்படுத்தியுள்ள குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டத்தை நிறைவேற்ற முடியும். அதற்கு அவசியான மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் அரசாங்கத்துக்கு உள்ளது. அதனால் கோரிக்கைகளை முன்வைக்கும்போது கவனமாக இருப்பதுடன், மக்களை ஏமாற்ற வேண்டாம் என எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்ற சட்டங்களின் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்களின் சிவில் உரிமைகளை பறிக்க முடியும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எச்சரித்துள்ளார்.

அதோடு எங்களிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது,நாங்கள் நினைத்தால் கூச்சலிடுபவர்களின் அனைத்து உரிமைகளையும் இல்லாமல் செய்யலாம், நீங்கள் கேட்பது அதுதான் என்றால் நான் அதனை தருவேன்

08

பொருளாதார நெருக்கடி ஜனவரியில் முடிவுக்கு வரும்

மத்திய வங்கி ஆளுநர் அஜித் கப்ரால்

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலைமையினால் ஏற்பட்டுள்ள அழுத்தம் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் வீழ்ச்சியடையும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று பரவல் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் நாட்டின் சகல துறைகளும் வீழ்ச்சியை சந்தித்துள்ளன.

சுற்றுலா துறையினர் சந்தித்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் (24) மத்திய வங்கியின் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்

போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இராசி பலன்கள்

மேஷம்	செலவு
ரிஷபம்	பாராட்டு
மிதுனம்	தனம்
கடகம்	போட்டி
சிம்மம்	கோபம்
கன்னி	முயற்சி
துலாம்	நன்மை
விருச்சிகம்	நிறைவு
தனுசு	வெற்றி
மகரம்	பொறுமை
கும்பம்	மறதி
மீனம்	சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

பிரதான வீதிகளில் சட்ட விரோத கட்டடங்களை அகற்ற நடவடிக்கை

நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பொது மற்றும் பிரதான வீதிகளின் அருகில் காணப்படும் முறையற்ற, சட்டவிரோத கட்டடங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பிரேமசிறி தெரிவித்தார்.

அதற்கான சட்டம் உள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் அநாவசிய கட்டடங்களை நீக்குவதற்கான அதிகாரம் அமைச்சுக்கு உள்ளதாகவும் தெரிவித்தார்.

அவ்வாறு கட்டடங்களை அமைத்துள்ளவர்களுக்கு அறிவித்து, அவர்கள் குறித்த காலத்தில் கட்டடங்களை நீக்காவிட்டால் நீதிமன்றத்தை நாடி சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஒரே தடவையில் அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட முடியாவிட்டாலும் சட்டரீதியாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற சூம்தொழில் நுட்பம் ஊடான ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் விளக்கமளித்த அவர்:

அரசாங்கத்தின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய எதிர்வரும் மூன்று வருடங்களில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. திறைசேரி மூலமும் சர்வதேச நிதி நிறுவனங்கள் மூலமும் அதற்கான நிதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தெற்காசியாவில் சிறந்த வீதி கட்டமைப்பு இலங்கையிலேயே காணப்படுகின்றது.

அதற்கிணங்க கடந்த இரண்டு வருட காலத்தில்

08

சுதந்திரக் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் எந்த முரண்பாடும் கிடையாது

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

சுதந்திரக் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் எந்த முரண்பாடும் கிடையாது என சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாரிய முன்மாதிரியாக செயற்பட்டது பற்றியே இங்கு பேசப்பட்டதாக தெரிவித்த அவர் பாராளுமன்ற சம்பிரதாயங்களை பேணி எம்.பிகள் செயற்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

எம்.பி ஒருவர் பாரதூரமான விடயத்தை தெரிவித்திருந்தால் அவர் பற்றி தெரிவிக்கையில் அவருக்கு அறிவிக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பெயரை எங்கும் குறிப்பிடவில்லை. ஜனாதிபதி அலுவலக செலவுகள் மற்றும் வளப்பயன்பாடு நிலைமைகளை மாற்றி கோட்டாபய ராஜபக்ஷ முன்மாதிரியாக செயற்பட்டதை பற்றி இங்கு பேசப்பட்டது. அவர் செலவுகளை குறைத்தார்.அது தொடர்பில் அவரது அமைச்சு தொடர்பான விவாதத்தில் பேசப்பட்டது.

பொதுவாக பாராளுமன்ற சம்பிரதாயப்படி முன்னாள் ஜனாதிபதிகளை பெயரிட்டு உரையாற்றுவது கூட கிடையாது. சம்பிரதாயங்களுக்கு முரணாக நடந்து சிலர் பாராளுமன்ற கௌரவம் பற்றி பேசுகின்றனர். அரச தலைவர் பற்றி பேசுவதாக இருந்தால் சபா நாயகரிடம் அனுமதி

08

தேசிய இளைஞர் விருதுகள் விழா

இலங்கை இளைஞர்களின் பெருமைமிகு திறமைகளை மதிப்பிடுவது அரசின் தலையாய கடமையாகும்.

இக் கொள்கைக்கமைய தேசிய இளைஞர் விருதுகள் விழா இன்று நடைபெறுகிறது.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் இன்று நெலும் பொக்குன மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கில் 3.30 மணிக்கு நடைபெறும்.

பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் 03 ஊடக நிறுவனங்கள் இன்று சாட்சியம்

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் மூன்று ஊடக நிறுவனங்கள் இன்று (26) சாட்சியமளிக்கவுள்ளன.

அதற்கமைய, டெல்ஷான் ஊடக வலையமைப்பு, வொய்ஸ் ஒப் ஏசியா ஊடக வலையமைப்பு மற்றும் எம்.டீ.வீ. ஊடக வலையமைப்பு ஆகியன சாட்சியமளிக்கவுள்ளதாக குழுவின் செயலாளரும், பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

பாராளுமன்ற விசேட குழுவின் தலைவரும், சபை முதல்வருமான அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் பிற்பகல் 02.00 மணிக்கு குழு கூடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.நா. வின் விசேட அறிக்கையாளர் இலங்கை வருகை

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கைவரும் அடிமைத்துவத்தின் சமகால வடிவங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஒபொகாடா எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்.

இக்காலப்பகுதில் ஆடையுற்பத்திக் கைத்தொழில், தேயிலைப் பயிர்ச்செய்கை, சுற்றுலாத்துறை உள்ளடங்கலாகப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் தொழிலாளர்களின் நிலை தொடர்பில் அவர் ஆய்வுகளை மேற்கொள்வதுடன் தொழிலாளர்கள் தொடர்பான சட்டம் மற்றும் கொள்கைகளின் அமுலாக்கம் குறித்தும் மதிப்பீடுகளை மேற்கொள்வார்.

'நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பூர்த்திசெய்யப்படவேண்டிய, இலங்கையினால்

08

எலிக்காய்ச்சலால் இதுவரை 5,275 பேர்வரை பாதிப்பு

இவ்வருடம் ஜனவரி முதல் இத்தொகை பதிவு

இவ் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இம் மாதம் 17 ஆம் திகதி வரை நாட்டில் 5,275 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் 844 எலிக் காய்ச்சல் நோயாளிகள் பதிவாகியுள்ளதாக இப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த காலப் பகுதியில் இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான எலிக்காய்ச்சல் நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

இவர்களின் எண்ணிக்கை 706 ஆகும். மேலும் காலி மாவட்டத்தில் 643 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 600 பேரும், கேகாலை மாவட்டத்தில் 418 பேரும் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கை, எலிக் காய்ச்சல் நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 4.

2020 ஆம் ஆண்டில் 8,579 எலிக் காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சிறிதளவு குறைவடைந்துள்ளமையை காணக் கூடியதாக உள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

யுத்தத்தினால் இறந்தவர்களை நினைவு கூருவதில் தவறில்லை

சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

சிறுபான்மை மக்களுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தினால் அரசாங்கத்துக்கான சர்வதேச ஒத்துழைப்பு கிடைக்கப்போவதில்லை என பாராளுமன்றத்தில் தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல, யுத்தத்தினால் மரணமடைந்தவர்களை நினைவு கூருவதில் தவறேதும் கிடையாது என தெரிவித்தார்.

யுத்தத்தினால் மரணமடைந்தவர்களை நினைவு கூருவதற்கு சர்வதேச நாடுகளிலும் அனுமதி வழங்கப்பட்டுள்ள போது இலங்கையிலும் அவ்வாறு வழங்குவதில் எந்த தவறும் கிடையாது, ஜேவிபியினர் அவர்களது புரட்சியின் போது மரணமடைந்தவர்களை நினைவுகூர அனுமதி வழங்கப்பட்டுள்ளதிலும் எந்த தவறும் கிடையாது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அது தொடர்பில் இலங்கை பின்பற்றும் கட்டுப்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபையும் நிராகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்;

சிறுபான்மை மக்களுக்கு அவர்கள் நெருக்கடி இன்றி வாழ்வதற்கான சூழல் அவசியமாகும்.

08

பதவி விலகல் கடிதத்தை கையளித்தார் சமரசிங்க

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க தனது பதவியை இராஜினாமா செய்திருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

2021, நவம்பர் 25ஆம் திகதி (நேற்று) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பாராளுமன்ற ஆசனத்தை இராஜினாமா செய்திருப்பதாக இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1981ஆம் ஆண்டு ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 64 (1)ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு இது பற்றி அறிவித்துள்ளார்.

08

இம்முறை வானொலி அரச விருது வழங்கல் விழாவில் நியூஸ்பெஸ்ட் செய்தி முகாமையாளர் ஜெவ்ரி ஜெபதர்ஷன் சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான விருதினை பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது

நாட்டின் முன்னேற்றத்திற்காக

புலம்பெயர் இலங்கையர்களுக்கு அரசு முன்னுரிமையை வழங்குவது அவசியம்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

புலம்பெயர் இலங்கையர்களின் முழுமையான பங்களிப்பைப் பெறுவதற்கும் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் ஒட்டுமொத்த மூலோபாய வேலைத்திட்டத்தை அணுகுவதற்கும் மிக உயர்ந்த முன்னுரிமையை வழங்குமாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் கோரினார்.

வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களில் ஒப்பீட்டளவில் பெரும் வீதமாகும். இவர்களை நமது நாட்டின் சொத்தாக கருத வேண்டும்.

இந்த மக்களை நம் நாட்டின் வளர்ச்சியில் ஈடுபடுத்துவதற்கான திட்டம் அல்லது மூலோபாய திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் முழுப் பங்களிப்பைப் பெறுவதற்கு இந்தியா எவ்வாறு விசேட முன்னுரிமையுடன் செயல்படுகின்றது என்பதை காண்கிறோம்.

புலம்பெயர் மக்கள் சிங்களம், தமிழ்,முஸ்லிம் என வகைப்படுத்தப்படுவதை இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். இப்போது பிரிவினைவாத யுத்தம் முடிந்துவிட்டது. நாம் பிரிவினைவாத மனப்பான்மை மற்றும் எண்ணங்களிலிருந்து இப்போதாவது விடுபட வேண்டும்.

இலங்கைக்கு இந்த புலம்பெயர்ந்த இலங்கையர்களின் முழுமையான பங்களிப்பைப் பெறுவதற்கும் தாய்நாட்டின்

08

நாணய மாற்று

நாணயம்	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	141.33	147.58
கனடியன் டொலர்	155.57	161.73
யூரோ	221.98	230.51
ஜப்பான் யென்	1.7080	1.7768
சிங்கப்பூர் டொலர்	144.52	149.39
ஸ்டேலிங் பவுன்ஸ்	263.31	271.96
சுவிஸ் பிராங்க்	211.03	218.95
அமெரிக்க டொலர்	198.50	202.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	533.08	கட்டார் ரியால்	55.19
குவைத் டினார்	663.40	சவூதி ரியால்	53.57
ஓமான் ரியால்	522.01	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	54.71

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 10ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரபீஉனில் ஆகிர் பிறை 20

குறள் தரும் சிந்தனை

முதலிலார்க ஊதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை

கட்டடத்தைத் தாங்கும் தூண் போலத் தம்மைத் தாங்கி நிற்கக் கூடிய துணையில்லாதவர்களின் நிலை, முதலீடு செய்யாத வாணிபத்தில் வருவாய் இல்லாத நிலையைப் போன்றதேயாகும்.

உணர்ச்சியூட்டும் அரசியல் போக்கு மக்களுக்கு நன்மை தந்து விடாது!

அரசியல் வாழ்க்கையில் இறங்குவோரில் இரு வகையானோர் உள்ளனர். ஒரு தரப்பினர் மக்கள் சேவையையே குறிக்கோளாகக் கருதி, அர்ப்பணிப்பு சிந்தனையுடன் அரசியல் பாதையில் காலடி பதிக்கின்றனர். அவர்களுடைய நோக்கம் தூய்மையானது. அவர்களே உண்மையில் மக்களுக்கான சேவகர்களாவர்.

மற்றைய தரப்பினரின் சிந்தனைகளும், குறிக்கோள்களும் வேறுபட்டவையாகும். அவர்கள் தங்களது சுயநலனுக்காகவே அரசியல் பாதையைத் தெரிவு செய்கின்றனர். மக்கள் மத்தியில் புகழ் பெற வேண்டுமென்ற மாயையில் அவர்கள் சிக்கிக் கொண்டவர்களாவர். பணமும் புகழும் பெற வேண்டுமென்பதே அவர்களது குறிக்கோள் ஆகும்.

தங்களது பதவியை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கே அவர்கள் விரும்புகின்றனர். அதற்காக அவர்கள் எந்தவொரு குறுக்கு வழியிலும் செல்வதற்குத் தயங்குவதில்லை. அந்தக் குறுக்கு வழியின் விளைவாக தங்களது மக்கள் பாதிக்கப்படுவரென்ற அக்கறையும் அவர்களிடம் கிடையாது. தமது அரசியல் வாழ்வை தொடர்ந்தும் நிலைநிறுத்திக் கொள்வதே அவர்களது இலக்காக உள்ளது.

இவ்வாறான அரசியல்வாதிகளே மக்களை உருவேற்றும் வகையில் அபத்தமான கருத்துகளை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றனர். இனவாதம் அல்லது மதவாதம் மிகுந்த கருத்துகளை முன்வைத்து மக்களை உருவேற்றுவதன் ஊடாக தங்களுக்கான அரசியல் செல்வாக்கு எழுச்சியொன்றை உருவாக்கிக் கொள்ளலாமென அவர்கள் எண்ணுகின்றனர். அதன் மூலம் மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளலாமென்பதே அந்த அரசியல்வாதிகளின் நோக்கமாகும். அந்த உருவேற்றும் அரசியல் போக்கு அன்று தொடக்கம் இன்று வரை தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

இந்த அரசியல் போக்கு பெரும்பான்மை, சிறுபான்மை அரசியல் என்ற பேதமின்றி இரு தரப்பிலுமே தொடர்ந்தபடி வருகின்றது. எமது நாட்டின் சிறுபான்மையின அரசியல்வாதிகளும் இவ்வாறுதான் மக்களை உருவேற்றும் அரசியலை பின்பற்றி வருகின்றார்கள். அவர்களது சுயநலம் மிகுந்த அரசியல் போக்கு காரணமாக சிறுபான்மை இனங்களுக்கிடையேயும் முரண்பாடுகள் தொடர்கின்றன. சிறுபான்மை இனங்கள் என்றுமே ஐக்கியப்பட முடியாதிருக்கின்றது. அரசியல் ரீதியாக மாத்திரமன்றி தனிப்பட்ட முறையிலும் அவ்வப்போது முரண்பாடுகளும் மோதல்களும் தலைதூக்குகின்றன.

அதேசமயம், சிறுபான்மை இனத்துக்கும் பெரும்பான்மை இனத்துக்கும் இடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதும் முடியாத காரியமாக உள்ளது. சிறுபான்மையின அரசியல்வாதிகள் சிலர் வெளிப்படையாகத் தெரிவிக்கின்ற கருத்துகளால் அவர்களது இன மக்கள் உருவேற்றப்படுகின்றனர். அக்கருத்துகளால் பெரும்பான்மையின மக்கள் சீற்றத்துக்கு உள்ளாகின்றனர். காலப்போக்கில் இரு இனங்களுக்கும் இடையே சந்தேகங்களும் வன்மமும் வளர்ந்து கொண்டே செல்கின்றன. எமது நாட்டில் காலாகாலமாக நிலவி வருகின்ற சிக்கல் இதுவேயாகும்.

தமிழ் அரசியல் தரப்பிலும் இவ்வாறான உணர்ச்சியூட்டும் அரசியல் போக்கு தொடர்ந்தபடியே வருகின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளையோ அல்லது தேவைகளையோ முன்னிறுத்தி தமிழ் அரசியல்வாதிகள் குரலெழுப்புவதோ அல்லது சாத்வீக வழியில் போராடுவதோ தவறில்லை. அதற்கான உரிமை அரசியல்வாதிகளுக்கு இல்லாமலில்லை. ஆனால் தமது மக்களை தவறான வழியில் திசைதிருப்பும் வழியில் பொறுப்பற்ற விதத்தில் உணர்ச்சியூட்டும் விதத்தில் கருத்துகளைத் தெரிவிப்பதோ, மக்களைத் தூண்டுவதோ ஆரோக்கியமானதல்ல.

தமிழர் அரசியல் தரப்பில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பொறுப்பற்ற விதத்தில் கருத்து வெளியிடுகின்றனர். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் சாத்தியமாகாத ஆலோசனைகளை முன்வைக்கின்றனர். இறுதி யுத்தத்தின் போது புலிகளின் ஆயுதப் போராட்டம் முற்றாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டதென்பது உலகுக்கே தெரிந்த விடயம் ஆகும். ஆனால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட புலிகள் இயக்கத்தைப் போற்றுகின்ற விதத்தில் அந்த அரசியல்வாதிகள் தங்களது அரசியலைத் தொடர்ந்து வருகின்றனர்.

புலிகள் இயக்கத்தைப் போற்றிப் புகழ்வதனாலோ அல்லது புலிகளின் தலைவர்களது புகழ் பாடுவதனாலோ தமிழ் மக்களுக்கு எந்த நலனும் ஏற்பட்டு விடப் போவதில்லை. அந்த யதார்த்தம் தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி, அந்த அரசியல்வாதிகளுக்கும் நன்கு தெரிந்த விடயமாகும். முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போராட்டம் தொடர்பாக இன்று புகழ்ந்து கூறுவதோ, அப்போராட்டத் தலைவர்களைப் புகழ்ந்துரைப்பதோ யதார்த்தத்துக்கு ஒவ்வாத அரசியல் போக்கு ஆகும்.

தமிழ் மக்களின் மனோநிலையில் கடந்த பத்து வருட காலத்தில் நிறைய மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் இணக்கப்பாடான அரசியல் பாதையையே விரும்புகின்றனர். பெரும்பான்மை மக்களுடன் நல்லுறவோடு வாழ்வதற்கே அவர்கள் விரும்புகின்றனர். தமிழ் மக்களின் மனவிருப்புக்கு மாறான விதத்தில் தமிழர் அரசியல் பிரதிநிதிகள் அபத்தமான கருத்துகளைக் கூறி அரசியல் நடத்துவதை நிறுத்திக் கொள்வதே தமது மக்களுக்குச் செய்யும் கைங்கரியமாகும்.

editor.tkn@lakehouse.lk

சைவமும் தமிழும் அழிந்து விடாமல் காப்பாற்றிய நாவலர் பெருமானின் 142ஆவது குருபூசை நாளை

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் சைவமும், தமிழும் அழிந்து விடாமல் காப்பாற்றுவதில் அர்ப்பணிப்புடன் பாடுபட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் 142 ஆவது குருபூசை நாளை ஆகும். நல்லூர், நாவலர் மணிமண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை நிகழ்வு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாளை 27.11.2021 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மங்கல விளக்கேற்றல், விடைக்கொடியேற்றல் நிகழ்வுகளோடு ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள நாவலர் மணிமண்டப உத்தியோகத்தர் க.நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் குருபூஜை வழிபாடும் திருமுறை ஓதலும் இடம்பெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்கள் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில், தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகத் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க நிகழ்வு நடைபெறும். சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் 'நாவலர் பெருமானின் வாக்கும் வாழ்வும்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

தெல்லிப்பளை, பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளோடும் ஆக்கத்திறன் ஆளுமையை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வோடும் இடம்பெறவுள்ள இவ்வைபவத்தில் வரவேற்புரையினை அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.சுதாகரனும், நன்றியுரையினை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலட்சுமியும் நிகழ்த்தவுள்ளனர்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இவ்வழிபாட்டு நிகழ்வில் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைப்பதாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 142 ஆவது குருபூஜை நிகழ்வு நாடளாவிய ரீதியில் நாளை அனுஷ்டிக்கப்படுகின்றது. சைவத் தமிழர்களுக்கென்று மதிப்புமிகு அடையாளம் தந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். பல்துறை ஆளுமை மிக்க தீர்க்கதரிசனப் பார்வை கொண்ட பெருமகனார் ஆற்றிய அரும்பணி சைவத் தமிழுலகம் என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகாது. இத்தகு பெருமைமிகு பெருமானின் 142 ஆவது குருபூஜை நன்னாளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நாடளாவிய ரீதியில் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விழாவும் குருபூஜையும் சேர்ந்த நிகழ்வாக நாளை 27 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம், அகில இலங்கை இந்துமாமன்றம், இந்து வித்தியா விருத்திச் சங்கம், இலங்கை சைவ நெறிக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வின் விசேட அம்சமாக, கனடா, சைவ சித்தாந்த பீட இயக்குநர், சைவ சித்தாந்த அறிஞர், வைத்திய கலாநிதி, சிவத்திரு. இ.லம்போதரன் அவர்களின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தொடர்பான சிறப்புரை நிகழ்வும் ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை காரைதீவு பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன் தலைமையில் காரைதீவு ஸ்ரீகண்ணகை அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் திருமுன்னிலை வகிக்க, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, மாணவர்களின் கலை நிகழ்வுகளோடு காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாட்டின் பல இடங்களில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நிகழ்வுகள்; சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி மக்களை பங்கேற்குமாறு திணைக்களப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் வேண்டுகோள்

விசேடமாக முன்னெடுக்கப்படும் இந்த நிகழ்வுகளோடு வடக்கு , கிழக்கு மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூஜை நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக பணிப்பாளர் உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

அ.கனகசூரியர்...✍
(யாழ்ப்பாணம்)
வி.ரி.சகாதேவராஜா...✍
(காரைதீவு குறூப் நிருபர்)

டிஜிட்டல் வாழ்க்கைத் தர சேவைகளை மேம்படுத்தும் eChannelling நடவடிக்கை

இலங்கையின் மாபெரும் டிஜிட்டல் சேவைகளுக்கான முன்பதிவுச் சேவைகளை வழங்கும் நிறுவனமான eChannelling PLC, தேசத்தின் எதிர்கால டிஜிட்டல் வாழ்க்கை முறை மேம்பாட்டுக்காக விரிவாக்கத் திட்டங்கள், பங்காண்மைகள் மற்றும் தயாரிப்பு புத்தாக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டு இயங்க முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளது. SLTMOBITEL நிறுவனத்தின் துணை நிறுவனமாக இயங்கும் eChannelling PLC, நடப்பு ஆண்டின் மூன்றாம் காலாண்டில் உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்ததுடன், அதனூடாக எதிர்கால வளர்ச்சி மற்றும் தந்திரோபாய ரீதியிலான வர்த்தக நாம மீள அறிமுகத்துக்கு உறுதியான அடித்தளத்தை வடிவமைத்துக் கொண்டுள்ளது.

eChannelling, 2021, செப்டெம்பர் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்த காலாண்டில் ரூ. 47 மில்லியன் வருமானத்தை பதிவு செய்துள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 17 சதவீத அதிகரிப்பாகும். முதல் ஒன்பது மாத காலப் பகுதிக்கான வருமானம் ரூ. 134 மில்லியனாக பதிவாகியிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 41 சதவீத அதிகரிப்பாகும்.

நிறுவனத்தின் வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 16 மில்லியனாக பதிவாகியிருந்தது.

முன்னைய காலாண்டுடன் ஒப்பிடுகையில் இது 19 சதவீத வளர்ச்சியாகும்.

நிதியாண்டின் முதல் ஒன்பது மாத காலப் பகுதியில் நிறுவனத்தின் இலாபத்தன்மை 116 சதவீதம் உயர்ந்து, ரூ. 43 மில்லியனாக பதிவாகியிருந்தது. 2020 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியில் இந்தப் பெறுமதி ரூ. 20 மில்லியனாகும். eChannelling இன் தந்திரோபாய மாற்றங்கள், திரண்ட சேவைகள் போன்றவற்றினூடாக வளர்ச்சியை பதிவு செய்யும் ஆற்றல் உறுதியான மூன்றாம் காலாண்டு நிதிப் பெறுபேறுகளினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், புதிய வருமான வழிகளை கட்டியெழுப்பவும் ஏதுவாக அமைந்துள்ளது.

சுகாதார பராமரிப்பு சேவைகள் பல சவால்களுக்கு முகங்கொடுத்திருந்த ஆண்டில், நிறுவனம் வளர்ச்சியை பதிவு செய்து, சகல பங்காளர்களுக்கும் பெறுமதியை உருவாக்கும் வகையில் செயலாற்றியிருந்தது.

SLT குழுமத்தின் தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், "மொபிடெல் பிரைவட் லிமிடெட் நிறுவனத்தின் துணை நிறுவனம் எனும் வகையில், eChannelling PLC நிறுவனம், தேசத்தின் டிஜிட்டல் கட்டமைப்பில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தன்னை தயார்படுத்தியுள்ளது. நவீன தீர்வுகள் மற்றும் உயர் சேவை வழங்கல்களினூடாக டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவைகளில் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தல்களை ஏற்படுத்தி இந்த மாற்றத்துக்கு வழிகோலவுள்ளது.

மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் வகையிலமைந்த சேவைகளை வழங்குவதில் இரு தசாப்த கால பூர்த்தியை கொண்டாடும் eChannelling PLC, எதிர்காலமும் சிறப்பானதாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கின்றது. eChannelling இன் நவீன தீர்வுகளுக்கு SLTMOBITEL இன் தொழில்நுட்பங்கள் மற்றும் கட்டமைப்புகள் போன்றன பெருமளவு பங்களிப்பை வழங்குவதுடன், நாட்டின் சுகாதார பராமரிப்பு சேவைகள் மற்றும் இதர தொடர்புடைய சேவை நியமங்களின் வளர்ச்சிக்கு அதிகளவு பங்காற்றுகின்றன" என்றார்.

இரு தசாப்த காலமாக டிஜிட்டல் சுகாதார பராமரிப்பு சேவைகளில் eChannelling இன் மாற்றியமைக்கும் பயணத்தினூடாக, தந்திரோபாய பங்காண்மைகள் மற்றும் புத்தாக்கமான சேவை வழங்கல்களினூடாக அதிகளவு நாடப்படும் டிஜிட்டல் வாழ்க்கைத் தர சேவைகள் வழங்குநராக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ரொஹான் பெர்னான்டோ மேலும் தெரிவிக்கையில், "அண்மைய மூன்றாம் காலாண்டு நிதிப் பெறுபேறுகளினூடாக டிஜிட்டல் சேவைகளை மாற்றியமைப்பதில் eChannelling இன் தொடர்ச்சியான வெற்றிகரமான செயற்பாடுகள் சுகாதார பராமரிப்புத் துறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அனைவருக்கும் அணுகக் கூடிய வகையில் விரிவாக்கமடைவதை காண முடிகின்றது. தந்திரோபாய அடிப்படையிலான வர்த்தக நாம வழிகாட்டல் என்பது அதிகளவு அளவிடக் கூடிய மற்றும் துரித வளர்ச்சியை வியாபாரங்களுக்கு வழங்கும் என்பதை அறிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைவதுடன், உறுதியான தந்திரோபாயத் திட்டத்தினூடாக 2022 ஆம் ஆண்டு, eChannelling PLC க்கு விறுவிறுப்பான ஆண்டாக அமைந்திருக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்" என்றார்.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட முன்னணி தொழில்நுட்ப சார் நிறுவனங்களில் ஒன்று

SLT குழுமத்தின் தவிசாளர் ரொஹான் பெர்னான்டோ

மேலும், டிஜிட்டல் வாழ்க்கைத் தர சேவைகளில் eChannelling இன் அண்மைய விரிவாக்க செயற்பாடுகளினூடாக, தனது சேவை வழங்கல்களை பன்முகப்படுத்த முடிந்திருந்ததுடன், ஒப்பற்ற வாடிக்கையாளர் தன்னிறைவையும் வழங்கி, தொழிற்துறையில் புதிய நியமங்களை பதிவு செய்ய முடிந்துள்ளது.

2021 செப்டெம்பர் 30ஆம் திகதியன்று நிறுவனம் மொத்த சொத்துக்கள் வளர்ச்சியாக ரூ. 49 மில்லியனை எய்தியிருந்தது. இது 2020 டிசம்பர் 31ஆம் திகதியுடன் ஒப்பிடுகையில் 12 சதவீத வளர்ச்சியாகும். 2020 டிசம்பர் 31ஆம் திகதி காணப்பட்ட ரூ. 392 மில்லியன் என்பதுடன் ஒப்பிடுகையில், நிறுவனத்தின் மொத்த சொத்துக்கள் ரூ. 441 மில்லியனை எய்துவதாக அமைந்திருந்தது. சுகாதார பராமரிப்புத் துறையில் பரிபூரண e வணிக சேவைகளை வழங்கும் முதலாவது நிறுவனமாக eChannelling PLC திகழ்வதுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட முதல் தொழில்நுட்ப சார் நிறுவனங்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்க அனைவரும் ஒன்றுபட்டு பாடுபட வேண்டும்!

பெண்கள் பற்றியும் அவர்களின் சாதனைகள் பற்றியும் எல்லோரும் புகழ்ந்து பேசினாலும் இப்பெண்கள் படும் துன்ப துயரங்களை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. பெண்கள் தமது வீடுகளிலும் தொழில் நிலையங்களிலும் பொது இடங்களிலும் பல்வேறு உடல் உள நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றார்கள். இதுவே வன்முறையாக மாறுகின்றது.

பெண்கள் மீதான வன்முறை என்பது பெண்களின் சுதந்திரத்தை பலவந்தமாக பறிக்கும் அல்லது தடை செய்யும் செயலாகும். பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்முறை உலகெங்கும் தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ளது. உலகில் மூன்றில் ஒரு பெண் தனது வாழ்நாளில் அடிக்கப்பட்டோ வன்புணர்விற்கு வற்புறுத்தப்பட்டோ பிற வகையில் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டோ துன்புறுத்தப்படுகின்றாள். இவ்வாறு துன்புறுத்துபவர் வழக்கமாக அவருக்குத் தெரிந்தவராகவே உள்ளனர். அதனாலேயே பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு நாள் ஆண்டு தோறும் நவம்பர் 25 ஆம் திகதி (நேற்று) உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது. இது 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பின்னர் தொழிற்சாலைகளில் எட்டு மணித்தியால வேலை, சமஉரிமை, உழைப்பிற்கேற்ற ஊதியம் கேட்டு அமெரிக்க அரசிற்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து 1921ஆம் ஆண்டு முதல் மார்ச் 8ஆம் திகதியை மகளிர் தினமாக பிரகடனம் செய்தது. இதை தொடர்ந்து வந்த போராட்டங்கள் மூலம் இரு சகோதரிகள் அந்நாட்டு அரசினால் கொலை செய்யப்பட்டனர். அவர்களை நினைவு கூரவே நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசம்பர் 10ஆம் திகதி வரையான நாட்களை பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளுக்கு எதிராக உலகெங்கும் விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

பெண்களக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை உடல் ரீதியானது, உள ரீதியானது, பாலியல் ரீதியானது என நோக்க முடியும். பால் அடிப்படையிலான வன்முறைகள் எந்நேரத்திலும் எவருக்கும் ஏற்படக் கூடும். எனினும் ஒருசில பெண்கள் மற்றும் சிறுமியருக்கு இவ்வாறான பாதிப்புகள் அதிக அளவில் இடம்பெறும் சாத்தியம் உள்ளது. குறிப்பாக சிறுமியர் மற்றும் வயதான பெண்கள், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் பெண்கள், திருநங்கைகள், அகதிப் பெண்கள், சுதேசிய பெண்கள் அல்லது எச்.ஐ.வி. வைரஸ் தாக்கத்துடன் வசிக்கும் பெண்கள் மற்றும் மனிதாபிமான சிக்கல்களுடன் வசிக்கும் பெண்கள் வன்முறையால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

உடல் ரீதியான வன்முறைகளை நோக்கும் போது அடித்தல், துன்றுத்தல், சித்திரவதை செய்தல், காயப்படுத்தல், சூடு வைத்தல், பட்டினி போடுதல், வெளியில் தெரியாத வகையில் அடித்தல், பணத்துக்காக ஒருவருக்கு விற்றல் கடத்துதல், அதிக நேரம் வேலை வாங்குதல், பெண்களை ஒதுக்கி வைத்தல் என்பன அடங்கும்.

உள ரீதியான வன்முறை என்பது மனது நோகும்படி ஏசுதல், திட்டுதல், வசைபாடுதல், ஆசாபாசங்களுக்கு மதிப்பளிக்காது விடுதல், பேசாமல் செய்தல் என்பனவாகும். இதன் பாதிப்பு உடற் பாதிப்பு போன்று நேரடியாக வெளியில் தெரியாது. இதன் பாதிப்பு காரணமாக தற்கொலை வரை ஆபத்து செல்லும். உளரீதியான பாதிப்பானது நீண்ட கால வெளிப்பாடாக காணப்படும். பாலியல் ரீதியான வன்முறையை நோக்கும் போது இது விருப்பமின்றி ஒன்று சேர்தல், பாலின உறுப்புக்களை காட்டுதல், சேதப்படுத்தல், வன்புணர்வு மேற்கொள்ளுதல் போன்றவை அடங்கும்.

உடல், உள, பாலியல் ரீதியான வன்முறைகளால் உலகெங்கும் ஏராளமான பெண்கள் பாதிப்பு

பொதுவாக இவ்வாறான வன்முறைகள் ஏற்படுவதற்கு காரணமாக பல்வேறு காரணிகள் விளங்குகின்றன. பொருளாதார நெருக்கடி, வறுமை, குடும்பச் சுமை, குடும்பங்களில் அதிக பிள்ளைகள் காணப்படுதல், பாலியல் தேவையை பூர்த்தி செய்ய முடியாமை, தொழில் இன்மை, அதிக கடன் சுமை, அதிக வட்டிக்கு கடன் பெறுதல், நுண்கடன் பெறுவதில் ஆர்வம் காட்டுதல் போன்ற காரணங்களாலும் கணவன், மனைவி இடையே ஏற்படும் முரண்பாடுகள் மற்றும் வருமானத்துக்கு ஏற்ப செலவு செய்யாமல் ஆடம்பர வாழ்வில் அதிக அக்கறை செலுத்துதல் போன்ற காரணங்களினால் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு நாள் நேற்று (25.11.2021) அனுஷ்டிப்பு

இவ்வன்முறைகளில் பொதுவாக இல்லத்து வன்முறைகள் அல்லது குடும்ப வன்முறைகள் என்பது நாளுக்கு நாள் எம் சமூகத்தில் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றன. குடும்ப வன்முறைகள் நீதிமன்றம் மற்றும் பொலிஸ் நிலையங்கள், மத்தியஸ்த சபை ஆகியவற்றில் வரும் முறைப்பாடுகளை காணும் போது சமூகத்தின் நிலைமையை நாம் கண்கூடாக காணமுடியும்.

இத்தகைய வன்முறைகள் ஏற்படுவதற்கு பிரதான காரணம் சமூகம் பெண்களை இழிந்தவர்களாக நோக்குவதுடன் அவர்களை கட்டுப்படுத்தும் உரிமைகளையும் அதிகாரத்தையும் ஆண்களுக்கு கொடுத்துள்ளதும் ஆகும். பெண் தனது கட்டுக்கோப்புக்குள் இருக்க வேண்டும் என்ற ஆசையின் வெளிப்பாடு ஒருவிதமான வன்முறைகளாக வெளிப்படுகின்றன.

இவற்றில் குடும்ப வன்முறை என்பது விசேடமாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதன் பாரதூரம் கருதியே 2005ஆம் ஆண்டு 34ம் இலக்க சட்டத்தை இலங்கைப் பாராளுமன்றம் இயற்றியுள்ளது. இவ்வாறு வீட்டு வன்முகளால் பாதிக்கப்படும் நபர் அதிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக தங்கள் பிரிவிற்குரிய நீதவான் நீதிமன்றத்தை நாடி பாதுகாப்புக் கட்டளையை பெற்றுக் கொள்ள முடியும். இவ்விண்ணப்பத்தை பாதிக்கப்பட்ட நபர் தாக்கல் செய்யலாம். சிறுவர்கள் பாதிக்கப்படுவதாயின் பெற்றோர் பாதுகாவலர்களினால் அல்லது பிள்ளை யாருடன் வசிக்கின்றதோ அவரால் தாக்கல் செய்யப்பட முடியும்.

இத்தகைய வன்முறைகள் குடும்பத்தில் மாத்திரமன்றி தொழில் நிலையங்கள், பொது இடங்கள் மற்றும் பொதுமக்களுக்கு சேவை வழங்கக் கூடிய வைத்தியசாலைகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் என பல்வேறுபட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளில் இடம்பெறுகின்றன. ஆண்களுக்கு மட்டும் அவசியம் எனக் கருதி பெண்களை இடைநடுவே கல்வியை தொடர முடியாமல் ஆக்குவதும் இவற்றில் ஒன்றாகும்.

தொடர்ச்சியாக இவ்வாறான வன்முறைகள் அதிகரிப்பதற்கு காரணம் சட்டத்தை இறுக்கமாக கடைபிடிக்காமையும் சட்டத்தை அமுல்படுத்துவதில் உள்ள சிக்கல்களும் பெண்களுக்கான முறைப்பாடுகளை பதிவு செய்வதில் தாமதங்கள் ஏற்படுவதாலும் ஆகும்.

ஒவ்வொரு பெண்ணும் தனக்கான உரிமைகளையும், அதற்காக நாட வேண்டிய இடங்களையும் தெரிந்திருப்பது கட்டாயமாகும். இவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைகளை குறைக்க முடியும். அரசாங்கமும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் பல்வேறு திருத்தச்சட்டங்கள் மூலம் சட்டங்களை காலத்துக்கு ஏற்ப மாற்றியுள்ளது. இளவயது திருமணங்கள் குறைக்கப்பட்டு குடும்ப வன்முறைகளை இல்லாதொழிக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதுதவிர 24 மணி நேர சேவையாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் பதிவு செய்யப்படுகின்றன. இதற்காக 1938, 118 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டு உடனடியாக தீர்வு வழங்கப்படுகின்றது.

பல்வேறு நடவடிக்கைகள் மூலம் வன்முறைகளில் இருந்து பெண்களை பாதுகாப்பதற்கு அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தன்னாலான ஒவ்வொரு முயற்சிகளையும் எடுத்துள்ளன. பெண்கள் தனக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிக்கு குரல் கொடுக்க வேண்டும். குற்றம் செய்யும் நபரை தண்டனை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இது சமூகத்தின் எதிர்கால நலனுக்கு இன்றியமையாத அம்சமாக அமையும். துணிந்து நின்று தங்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கும் முயற்சியில் பெண்கள் ஒன்றுபட்டு நின்று செயற்பட வேண்டும்.

ஏ.எம்.கஸ்பியா வீவி...✍
(B.A), சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர், பிரதேச செயலகம், கல்முனை

கொவிட் தொற்றுக்குள்ளான கமல் எவ்வாறு உள்ளார்?

தடுப்பூசி செலுத்தும் எண்ணிக்கை குறைவாக உள்ள நாடுகளில் மட்டுமே கொரோனா உயிரிழப்பவர்கள் அதிகமாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ள தமிழக அமைச்சர் மா. சுப்பிரமணியன், நடிகர் கமல்ஹாசனுக்கு ஏற்பட்ட கொரோனா பாதிப்பு குறித்தும் முக்கிய தகவலைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

"60 நாட்களாக கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை குறைந்து வந்த நிலையில், தற்போது கொரோனா பாதிப்பு உயர்ந்துள்ளது. தடுப்பூசி செலுத்தாமல் இருப்பதே கொரோனா தொற்று உயர்வுக்குக் காரணம். எனவே தடுப்பூசி செலுத்தப் பொதுமக்கள் முன்வர வேண்டும். 7 நாட்களில் சிங்கப்பூரில் 14 ஆயிரம் பேர் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 74 பேர் உயிரிழந்துள்ளனர்.

7 நாட்களில் இங்கிலாந்தில் 75% பேர் தடுப்பூசியைச் செலுத்தியுள்ளனர். ஆனால் 2.84 இலட்சம் பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 1,029 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேபோல் ரஷ்யாவில் 44% பேர் தடுப்பூசி செலுத்தியுள்ளனர். 7 நாட்களில் 2.57 லட்சம் பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 8,739 பேர் உயிரிழந்துள்ளனர். உக்ரைன் நாட்டில் 30% பேர் தடுப்பூசி செலுத்தியுள்ளனர். அதில் 1.11 இலட்சம் பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் 4,451 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம், தடுப்பூசி போடாத நாடுகளில் உயிரிழப்பு அதிகமாக உள்ளது தெளிவாகத் தெரிகிறது.

சென்னையில் குடிசை பகுதிகள் மற்றும் நடுத்தர மக்கள் வசிக்கும் பகுதிகளில் முகக்கவசம் அணிவோர் எண்ணிக்கை குறைந்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆனால் சென்னையில் உள்ள மால்களில் 51% பேர் முகக்கவசம் அணிகின்றனர். இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்தியதால்தான் நடிகர் கமல்ஹாசனுக்கு கொரோனா தொற்று உறுதியானாலும் பெரிய அளவில் பாதிக்கவில்லை. இதனால் தான் பொது இடங்களில் வருவோருக்குத் தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டுள்ளது" என்று அவர் கூறினார்.

கமல் கொவிட் தொற்று காரணமாக ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு கமலுக்குச் சிறப்பு மருத்துவ வல்லுநர்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவரது உடல்நிலை தொடர்ந்து சீரான நிலையிலேயே உள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அறியாமைதான் காரணம்

நமது நாடு சின்னஞ் சிறிய நாடு என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதும் கற்றோர் அறிந்ததொன்றே. கல்வியறிவு நிரம்பப் பெற்ற நாடாகவும், அது வளர்ச்சிபெற்றது என்பதும் உண்மை. எமது தீவில் பல்லின மக்கள் பல நூற்றாண்டு காலமாக இந்நாட்டு குடிமக்களாக வாழ்ந்து வருகின்றனர் என்பதை அறிந்திராத அஞ்ஞானிகள் சிலரும் உள்ளனர்.

தமிழகத்தில் உள்ளவர்கள் சிலர் கூட இலங்கையில் இருந்து சென்னை செல்லும் தமிழர்களை, சிங்களவர்கள் என நினைக்கின்றனர். 1986 இல் முதற் தடவையாக நான் சென்ற பொழுது, என் பெயரை சிவகுமாரன் என்று கூறிய போதும், "உங்களுக்குத் தமிழில் பேச முடியுமா?" என்று வினவினார்கள். நான் ஒரு தமிழன் என்று கூறிய போதும், உங்கள் நாட்டில் சிங்கள மக்கள்தான் வாழ்கின்றனர். அதனால்தான் அப்படிக் கேட்டோம்" என்றார்கள்.

அறியாமைதான் அதற்குக் காரணம்.

★ ★ ★

கேரளமும், தமிழகமும் ஒன்றாய் இருந்த பொழுது, அங்கு வசித்தவர்கள் அனைவரையும் 'மலபாறிகள்' என்று கொலனியவாதிகள் அழைத்ததாகவும், அவர்களோ இலங்கையில் வேரூன்றிய வடக்கு, கிழக்கு மக்கள் என்றும் அவர்கள் வெவ்வேறு சாதிகளைப் பிறப்பில் கொண்டவர்கள் என்றும் சில அரசியல் அபிப்பிராயலாளர்கள் கூறி வருகின்றனர். இது ஆராயத்தக்கது. போதிய சான்றுகள் நம்மிடையே இல்லை.

யாழ்ப்பாண பேச்சு வழக்குக்கும், மலையாளப் பேச்சுவழக்குக்கும் தொடர்பு இருப்பதை நாம் அறிவோம்.

கிழக்கில், கேரளத்துக்கும் தொடர்பு இருப்பதையும் நாம் உணர்வோம்.

இப்படிப் பல சங்கதிகள் உள்ளன. பின்பு மேலும் நாம் சில செய்திகளைப் பரிசீலிப்போம்.

கே.எஸ்.சிவகுமாரன்...✍

இந்தியா இப்போது பெண்களின் தேசம்!

இந்தியாவில் தற்போது 1000 ஆண்களுக்கு 1020 பெண்கள் இருப்பதாக மத்திய சுகாதாரத் துறை சார்பாக நடத்தப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இது இந்திய மக்கள் தொகையில் நடைபெற்ற மிகப் பெரிய மாற்றமாக கருதப்படுகிறது. 2019-2021 என்ற மூன்று வருடங்களில் இரண்டு கட்டமாக இந்த மதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது. மொத்தம் 22 மாநிலங்களில் இந்த மதிப்பீடு எடுக்கப்பட்டது. 650,000 பேரிடம் 707 மாவட்டங்களில் மொத்தமாக மதிப்பீடு இரண்டு கட்டமாக எடுக்கப்பட்டது.

அதன்படி இந்தியாவில் 1000 ஆண்களுக்கு 1020 பெண்கள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது சிறிய அளவிலான மதிப்பீடு. மொத்த இந்தியாவின் இறுதி மக்கள் தொகை விபரம் கிடையாது. மொத்தமாக தேசிய அளவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்கும் போது எத்தனை ஆண்களுக்கு எத்தனை பெண்கள் இருக்கிறார்கள் என்ற விபரம் தெரிய வரும். ஆனால் இப்போது வெளியாகி இருக்கும் இந்த தேசிய குடும்ப மற்றும் சுகாதார மதிப்பீட்டு முடிவுகள் இந்தியாவின் மக்கள் தொகை குறித்த ஒரு இமேஜை கொடுத்துள்ளன. அதன்படி இந்தியாவில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் இந்தியாவை இனியும் பெண்கள் குறைவான நாடு என்று வர்ணிக்க முடியாது. 1990, 1990களில் இந்தியாவில் 1000: 927 பெண்கள் மட்டுமே இருந்தனர். இந்த நிலையில் தேசிய குடும்ப மற்றும் சுகாதார மதிப்பீட்டில் முதன் முறையாக இந்தியாவில் ஆண்களை விட பெண்கள் அதிகம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெண் குழந்தைகள் பிறப்பு மீதான கண்ணோட்டம் மாறி உள்ளமை இதன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதே சமயம் இந்தியாவில் ஆண்களின் வாழ்நாள் 66.4 சதவீதமாகவும், பெண்களின் வாழ்நாள் 69.6 சதவீதமாகவும் உள்ளது. இதற்கு ஒரு காரணமாக பார்க்கப்படுகிறது. இந்த மதிப்பீட்டின் படி இந்தியாவில் இப்போது 26.5% பேர் 15 வயதுக்கு குறைந்தவர்கள். 10 வருடத்திற்கு முன் இது 34.9% ஆகி இருந்தது. இதனால் இந்தியா இனியும் மிகவும் இளமையான நாடு கிடையாது. இந்தியாவில் இருப்பவர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக வயது அதிகரித்துக் கொண்டே செல்கிறது. வடஇந்தியாவை காட்டிலும் தென்னிந்தியாவில் வயது குறைவானவர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், தென்னிந்தியாவில் குழந்தைகள் பிறப்பு வெகுவாக குறைந்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

திறமை மிகுந்த இளைஞர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கான வழிகளை தேடுகின்றோம் - அமைச்சர் நாமல் ராஜபக்ஷ

Uber Entrepreneurship Challenge 2021 இல் புதுமையான வணிக கருத்தாக்கங்களை அங்கீகரிக்கும் முகமாக 10 வணிக பங்குதாரர்கள், ஒட்டுநர் பங்குதாரர்கள் மற்றும் கூரியர்களுக்கு ஆட்பற்ற ஹோட்டல் தங்குமிடங்கள், ஸ்மார்ட் கைத்தொலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் உள்ளடங்கலான பல தரப்பட்ட பரிசுகளை Uber வழங்கியுள்ளது. இதன் விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு பார்க் ஸ்ட்ரீட் மியூல் இல் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராக வருகை தந்து வெற்றி பெற்ற வர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இத்தொழில்துறையில் முதன்முதலாக இடம்பெற்ற இச்சவால் போட்டியானது இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும், இப்போட்டியானது வணிகர்கள், ஓட்டுநர்கள் மற்றும் விநியோகத்தர்கள் உள்ளடங்கிய பங்குதாரர்களுக்கு தமது தொழில் முனைவோர் மனப்பான்மை மற்றும் புத்தாக்க திட்டங்களை வெளிப்படுத்த ஒரு தளத்தை வழங்கியது. இப்போட்டியில், உள்ளூர் தரவர உட் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சப்மரீன் வகைகள் மற்றும் தொராட்டாக்கல் வகைகள் ஆகியவற்றின் தனித்துவமான செய் முறைக்காக, வணிகர் பிரிவின் வெற்றியாளராக ஷானவி டயஸ் தெரிவுசெய்யப்பட்டார். அவருக்கு *Heritance Kandalama* வில் 2 முழு இரவுகள் தங்குவதற்கான வாய்ப்பு மற்றும் *Samsung Galaxy S7 Tab* ஆகியவையும் வழங்கப்பட்டன. மேலும், *Uber* தளத்தின் மூலம் சேவைகளை விரிவுபடுத்தும் கருத்தாக்கத் திற்காக நிமேஷ் சந்தருவன் ஒட்டுநர்/கூரியர் பிரிவில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். அவருக்கு புத்தம் புதிய *Mahindra Centuro* மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் நாமல் ராஜபக்ச "இலங்கையில் நிறமைக்கும் புதிய சிந்தனை இறனுக்கும் எவ்வித பற்றாக்குறை யும் இல்லை. ஆகையால், நம் நாட்டு மக்கள், குறிப்பாக இளைஞர்கள், அவர்களின் கனவுகளை நிறைவேற்றுவதற்கும், தேசத்தை வலுப் படுத்துவதற்குமான வாய்ப்புகளை வழங் குவதற்கான வழிகளை நாங்கள் தொடர்ந்து தேடுகிறோம். இவ்வகையான *Startup* முயற்சி களுக்கு உகந்த கலாசாரத்தை உருவாக்குவது இந்த பணியின் ஒரு முக்கிய பகுதியாகும். *Uber Entrepreneurship Challenge* என்பது இந்த நோக்கத்திற்கு ஏற்ற ஒரு முன்முயற்சியாகும். எனவே, இனமும் புதிய வாய்ப்புகளை உரு வாக்கும் நிறுவனங்களுடன் இணைந்து செய லாற்ற முடிந்ததில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி யடைகிறோம்" எனக் குறிப்பிட்டார்.

இந்த முன்னெடுப்பு தொடர்பாக *Uber Sri Lanka* வின் பொது முகாமையாளர் பாஸ்வா டட்லானி கருத்து தெரிவிக்கையில், "*Uber* மற்றும் *Uber Eats* ஆகிய தளங்களில் புது மையான சிந்தனையுடைய தொழில்முனை வோரை அங்கீகரிப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மாறிவரும் உலகில், விரைந்து செயல்படக் கூடிய வணிகங்கள் வாழ்க்கை யையும் சமூகங்களையும் மாற்றக் கூடியன வாக இருக்கின்றன. எங்கள் பங்குதாரர்கள் எங்கள் செயல்பாடுகளின் மையத்திலே உள் ளனர், அவர்களின் வாழ்க்கையையும் வணிக செயல்பாடுகளையும் மேலும் மேம்படுத்த உதவும் வழிகளை நாங்கள் எப்போதும் தேடு கிறோம். உள்நாட்டில் தொழில் முனைவோர் கலாசாரத்தை மேம்படுத்துவதற்கு இணைந்து செயல்படுவதற்கு ஏற்ற விதமாக இந்த வாய்ப்பை எங்களுக்கு வழங்கியதற்காக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சிற்கு எனது மனப்பூர்வமாக நன்றி னைத் தெரிவிக்க விரும்புகிறேன்" என்றார்.

UNION BANK — 2021 செப்டம்பர் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள்

நிதி நிலைமைக்கூற்று (ரூ.'000)

திகதியில் உள்ளபடி	வங்கி 30.09.2021 ரூ.000	வங்கி 31.12.2020 (கணக்காய்வு செய்யப்பட்டது)	வங்கி மாற்றம் %	குழு 30.09.2021 ரூ.000	குழு 31.12.2020 (கணக்காய்வு செய்யப்பட்டது)	குழு மாற்றம் %
சொத்துக்கள்						
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்	2,986,597	2,405,091	24	3,059,285	2,832,540	8
இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதிகள்	1,893,003	722,727	162	1,893,003	722,727	162
வங்கிகளிலுள்ள வைப்புக்கள்	1,705,517	15,747	10731	1,706,015	15,747	10734
நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்	591,809	-	100	835,328	240,736	247
பொதுநி நிதியியல் சாதனங்கள்	23,936	38,189	(37)	23,936	38,189	(37)
நியாய அல்லது நட்பு ஊடான நியாய பெறுமதியில் நிதி சொத்துக்கள்	4,535,070	7,143,403	(37)	4,544,926	7,180,220	(37)
நியாய அல்லது நட்பு ஊடான நியாய பெறுமதியில் குறுந்துரைக்கப்பட் நிதி சொத்துக்கள்	-	-		-	-	
மதிப்பீடு செய்யப்பட் நிதியில் சொத்துக்கள் - வாடிக்கையாளருக்கான உடன்கள் மற்றும் முற்பணங்கள்	69,708,265	67,517,674	3	75,893,292	73,776,668	3
மதிப்பீடு செய்யப்பட் நிதியில் சொத்துக்கள் - உடன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள்	15,128,528	21,168,076	(29)	14,917,344	20,509,495	(27)
ஏனைய அனைத்துமுள்ளங்கிய வருமானம் ஊடாக நியாயபெறுமதியில் குறித்துரைக்கப்பட் நிதியில் முதலீடுகள்	16,565,718	19,385,038	(15)	16,592,708	19,397,252	(14)
நடப்பு வரிச் சொத்து	-	-		-	-	
காணி ஆதனத்தில் முதலீடு	-	-		95,060	106,890	(11)
உப நிறுவனங்களிலான முதலீடுகள்	894,934	882,478	1	-	-	
நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள்	1,255,448	1,314,234	(4)	1,595,775	1,661,555	(4)
ஆதனம் மற்றும் இயந்திர உபகரணங்கள்	1,372,862	1,317,789	4	1,574,229	1,523,305	3
ஒத்திவைக்கப்பட் வரிச் சொத்துக்கள்	246,115	-	100	575,297	445,436	29
ஏனைய சொத்துக்கள்	1,774,039	1,032,828	72	1,856,716	1,119,602	66
மொத்தச் சொத்துக்கள்	**118,681,841**	**122,943,274**	**(3)**	**125,162,914**	**129,570,362**	**(3)**
பொறுப்புக்கள்						
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	7,361,261	9,980,590	(26)	7,368,512	9,168,079	(20)
பொதுநி நிதியியல் பத்திரங்கள்	26,629	8,313	220	26,629	8,313	220
நியாய அல்லது நட்பு ஊடான நியாய பெறுமதியில் குறுந்துரைக்கப்பட் நிதி பொறுப்புக்கள்	-	-		-	-	
மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்	5,935,037	10,205,564	(42)	5,765,017	10,100,553	(43)
வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை	85,259,296	82,383,852	3	89,559,626	87,104,192	3
ஏனைய கடன்பட நிதிகள்	-	-		1,892,061	2,347,634	(19)
பொதுநி நிதியியல் சாதனங்கள்	-	-		-	-	
ஏனைய கடன்பட நிதிகள்	-	-		-	-	
நடப்பு வரிப் பொறுப்புக்கள்	288,167	262,689	10	330,460	471,398	(30)
ஒத்திவைக்கப்பட் வரிச் பொறுப்புக்கள்	-	53,841	(100)	294	54,135	(99)
ஏனைய ஏற்பாடுகள்	-	-		-	-	
ஏனைய பொறுப்புக்கள்	1,845,182	1,958,408	(6)	2,217,718	2,251,102	(1)
மொத்தப் பொறுப்புக்கள்	**100,715,572**	**104,853,257**	**(4)**	**107,160,317**	**111,505,406**	**(4)**
பங்கு மூலதனம்						
அறிக்கையிடப்பட் மூலதனம்	16,334,782	16,334,782	-	16,334,782	16,334,782	-
பங்கு உத்தரவாதங்கள்	65,484	65,484	-	65,484	65,484	-
நியதிச்சட்ட ஒதுக்க நிதியம்	234,922	204,227	**15**	259,543	228,847	13
பணியாளர் பங்குநிலை திட்ட ஒதுக்கம்	23,500	23,500	-	23,500	23,500	-
விற்பனைக்குள்ள ஒதுக்கம்	(378,950)	217,840	**(274)**	(375,308)	230,076	(263)
நிறுத்திவைக்கப்பட் வருமானங்கள்	1,686,531	1,244,184	**36**	1,454,657	951,674	53
வங்கியின் பங்குதாரர்களுக்குச் சாட்டத்தக் மொத்தப் பங்குநிலை	**17,966,269**	**18,090,017**	**(1)**	**17,762,657**	**17,834,363**	**-**
கட்டுப்படுத்தாத உரிமைகள்	**-**	**-**		**239,940**	**230,593**	**4**
மொத்தப் பங்கு மூலதனம்	**17,966,269**	**18,090,017**	**(1)**	**18,002,597**	**18,064,956**	**-**
மொத்தப் பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்	**118,681,841**	**122,943,274**	**(3)**	**125,162,914**	**129,570,362**	**(3)**
எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடன்படுகைகள்	**36,394,414**	**39,892,776**	**(9)**	**34,629,795**	**40,038,808**	**(14)**
சாதாரண பங்கொன்றின் நிகர சொத்துப் பெறுமதி (ரூபா)	**16.58**	**16.70**		**16.39**	**16.46**	
விஞ்ஞாபனத் தகவல்கள்						
ஊழியர்களின் எண்ணிக்கை	1,211	1,275				
கிளைகளின் எண்ணிக்கை	67	67				

தொடர்வு செய்யப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகள் (ஒழுங்கு முறை அறிக்கையின் படி)

கூறு	வங்கி 30.09.2021	வங்கி 31.12.2020	குழு 30.09.2021	குழு 31.12.2020
ஒழுங்குபடுத்தல் மூலதன போதுமை				
பொது பங்கு பிரிவு 1 (பாசெல் III)	13,751,223	15,415,491	14,958,429	16,024,248
அடுக்கு 1 மூலதனம் (பாசெல் III)	13,751,223	15,415,491	14,958,429	16,024,248
மொத்த மூலதனம் (பாசெல் III)	14,414,655	15,680,987	15,753,059	16,677,537
ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதம் (%)				
பொது பங்கு பிரிவு 1 மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 6.5%)	14.50%	16.66%	14.88%	16.34%
பிரிவு 1 மூலதன விகிதம் பாசெல் III (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 8%)	14.50%	16.66%	14.88%	16.34%
மொத்த மூலதன விகிதம் பாசெல் III (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 12%)	15.20%	16.95%	15.67%	17.00%
கடன் மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 3%)	10.44%	10.23%	10.72%	10.14%
ஒழுங்குபடுத்தல் நிறைவத்தன்மை				
நிதிச்சட்ட நிறவத் சொத்துக்கள்				
உள்நாட்டு வங்கியியல் பிரிவு ரூ. '000	21,744,444	26,629,637		
வெளிநாட்டு நாணய வங்கியியிற்பிரிவு , USD '000	19,666	18,585		
சட்டப்படியான நிறவத்சொத்துக்கள் விகிதம் % (ஆகக்குறைந்த தேவைப்பாடு – 20%)				
உள்நாட்டு வங்கியியல் பிரிவு	24.23%	29.08%		
வெளிநாட்டு நாணய வங்கியியல் பிரிவு	22.46%	21.93%		
பணப்புழக்க பாதுகாப்பு விகிதம், ரூபாய்க்கு(%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 100%)	591.34%	861.13%		
பணப்புழக்க பாதுகாப்பு விகிதம், சகல நாணயங்களுக்கு(%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 100%)	303.60%	459.60%		
நிகர நிலையான நிற விகிதம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 100%)	114.62%	121.05%		
சொத்துக்கள் தரம் (கடன்கள் மற்றும் வருமதிகளின் தரம்)				
மொத்தச் செயற்படா முற்பண விகிதம் % (தொங்கு வட்டி நீங்கலாக)	5.79%	6.05%		
நிகர செயற்படா முற்பண விகிதம் % (தொங்கு வட்டி மற்றும் ஏற்பாடு நீங்கலாக)	2.98%	3.54%		
குறைபாட்டுக்குட்பட் கடன்களின் (நிலை 3) விகிதம் (%)	4.50%			
குறைபாட்டுக்கான ஏற்பாட்டின் (நிலை 3) மீதான நிலை 3 கடன்களின் விகிதம் (%)	35.50%			
இலாபத்தன்மை				
வட்டி இலாபம் %	3.40%	3.16%		
சொத்துக்கள் மீதான வருமதி (வரிக்கு முன்) %	0.88%	0.77%		
சொத்துக்கள் மீதான வருமதி (வரிக்குப் பின்) %	0.68%	0.47%		
உரிமைப் பங்கிலிருந்து வருமானம (வரிக்குப் பின்) %	4.54%	3.24%		

உரிமை மாற்றங்களின் கூற்று (ரூ.'000)

வங்கி	அறிக்கையிடப்பட் மூலதனம்	பங்கு உத்தரவாதங்கள்	நியதிச்சட்ட ஒதுக்க நிதியம்	பணியாளர் பங்குநிலை திட்ட ஒதுக்கம்	விற்பனைக்குள்ள /FVOCI ஒதுக்கம்	நிறுத்திவைக்கப்பட் வருமானங்கள்	மொத்தப் பங்கு மூலதனம்
2020 ஜனவரி 1இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**175,400**	**51,426**	**44,549**	**838,815**	**17,510,456**
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்							
காலப்பகுதிக்கான நிகர இலாபம்	-	-	-	-	-	550,281	550,281
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	-	261,415	-	261,415
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	-	**261,415**	**550,281**	**811,696**
பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குநிலையில் நேரடியாகக் காட்டப்பட்டது							
பணியாளர் பங்குநிலை திட்டத்தின் நியாய பெறுமதி	-	-	-	4,758	-	-	4,758
காலப்பகுதியிலான பரிமாற்றங்கள்	-	-	27,514	-	-	(27,514)	-
பங்குதாரர்களுக்கான பங்கு இலாபம்	-	-	-	-	-	(151,698)	(151,698)
2020 செப்டம்பர் 30இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**202,914**	**56,184**	**305,963**	**1,209,884**	**18,175,212**
2021 ஜனவரி 1இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**204,227**	**23,500**	**217,840**	**1,244,184**	**18,090,017**
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்							
காலப்பகுதிக்கான நிகர இலாபம்	-	-	-	-	-	613,905	613,905
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	-	(596,790)	-	(596,790)
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	**-**	**-**	**-**	**-**	**(596,790)**	**613,905**	**17,115**
பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குநிலையில் நேரடியாகக் காட்டப்பட்டது							
காலப்பகுதியிலான பரிமாற்றங்கள்	-	-	30,695	-	-	(30,695)	-
பங்குதாரர்களுக்கான பங்கு இலாபம்	-	-	-	-	-	(140,863)	(140,863)
2021 செப்டம்பர் 30இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**234,922**	**23,500**	**(378,950)**	**1,686,531**	**17,966,269**

உரிமை மாற்றங்களின் கூற்று (ரூ.'000)

குழு	அறிக்கையிடப்பட் மூலதனம்	பங்கு உத்தரவாதங்கள்	நியதிச்சட்ட ஒதுக்க நிதியம்	பணியாளர் பங்குநிலை திட்ட ஒதுக்கம்	விற்பனைக்குள்ள /FVOCI ஒதுக்கம்	நிறுத்தி வைக்கப்பட் வருமானங்கள்	பங்குதாரர்களின் மொத்தப்பங்கு மூலதனம்	கட்டுப்படுத்தாத உரிமைகள்	மொத்தப் பங்கு மூலதனம்
2020 ஜனவரி 1இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**200,020**	**51,426**	**56,785**	**490,129**	**17,198,626**	**240,645**	**17,439,271**
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்									
காலப்பகுதிக்கான நிகர இலாபம்	-	-	-	-	-	583,866	583,866	(7,917)	575,949
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	-	261,416	-	261,416	(953)	260,462
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	-	**261,416**	**583,866**	**845,281**	**(8,870)**	**836,411**
பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குநிலையில் நேரடியாகக் காட்டப்பட்டது									
பணியாளர் பங்குநிலை திட்டத்தின் நியாய பெறுமதி	-	-	-	4,758	-	-	4,758	-	4,758
காலப்பகுதியிலான பரிமாற்றங்கள்	-	-	27,514	-	-	(27,514)	-	-	-
பங்குதாரர்களுக்கான பங்கு இலாபம்	-	-	-	-	-	(151,698)	(151,698)	-	(151,698)
2020 செப்டம்பர் 30இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**227,534**	**56,184**	**318,201**	**894,783**	**17,896,968**	**231,775**	**18,128,743**
2021 ஜனவரி 1இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**228,847**	**23,500**	**230,076**	**951,674**	**17,834,363**	**230,593**	**18,064,956**
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்									
காலப்பகுதிக்கான நிகர இலாபம்	-	-	-	-	-	665,946	665,946	6,581	672,527
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	-	(605,384)	8,595	(596,789)	2,766	(594,023)
மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	-	-	-	-	**(605,384)**	**674,541**	**69,157**	**9,346**	**78,503**
பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குநிலையில் நேரடியாகக் காட்டப்பட்டது									
காலப்பகுதியிலான பரிமாற்றங்கள்	-	-	30,695	-	-	(30,695)	-	-	-
பங்குதாரர்களுக்கான பங்கு இலாபம்	-	-	-	-	-	(140,863)	(140,863)	-	(140,863)
2021 செப்டம்பர் 30இல் இருந்த மீதி	**16,334,782**	**65,484**	**259,543**	**23,500**	**(375,308)**	**1,454,657**	**17,762,657**	**239,940**	**18,002,597**

அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் கூற்று ரூ. ('000)

முடிவடைந்த காலப்பகுதிக்கான	வங்கி 30.09.2021 ரூ.'000	வங்கி 30.09.2020 ரூ.'000	வங்கி மாற்றம் %	குழு 30.09.2021 ரூ.'000	குழு 30.09.2020 ரூ.'000	குழு மாற்றம் %
காலப்பகுதிக்கான இலாபம்	**613,905**	**550,281**	**12**	**672,527**	**575,949**	**17**
அடுத்துவரும் காலப்பகுதிகளில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்த வேண்டிய ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்:						
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடான நியாயப் பெறுமதியில் கடன் சாதனங்கள்						
காலப்பகுதிக்கான நியாயப் பெறுமதியில் தேறிய மாற்றம்	(809,936)	364,455	(322)	(810,677)	362,510	(324)
எதிர்பார்த்த கடன் இழப்புக்கான ஏற்பாடுகளில் மாற்றம்	-	-		-	-	
கழி: மேற்குறிப்பிடப்பட்டதற்கான வருமான வரி விளைவு	204,930	(102,047)	301	204,930	(102,047)	301
பங்குநிலை முதலீட்டாளர்களின் இலாபப் பங்கு, வரி நீங்கலாக	(378)	(992)	62	-	-	
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடான நியாயப் பெறுமதியில் நிதி முதலீடுகளின் தேறிய இலாபம் அல்லது நட்டம்	**(605,384)**	**261,417**	**(332)**	**(605,747)**	**260,463**	**(333)**
அடுத்துவரும் காலப்பகுதிகளில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்த வேண்டிய ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்:						
வரையறுக்கப்பட் பயன் ஓய்வூதிய திட்டத்தின் உண்மையான இலாபம் / (நட்டம்)	-	-		-	-	
ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடான நியாயப்பெறுமதியில் மூலதன உபகரணங்களிலான மீள் மதிப்பீடு இலாபம் / (நட்டம்)	-	-		15,425	-	100
கழி: மேற்குறிப்பிடப்பட்டதற்கான வருமான வரி விளைவு	-	-		(3,702)	-	(100)
பங்குநிலை முதலீட்டாளர்களின் இலாபப் பங்கு, வரி நீங்கலாக	8,594		100	-	-	
இலாப நட்டக்கணக்கிற்கு மீள் வகைப்படுத்தப்படாத மொத்த உருப்படிகள்	**8,594**	-	**100**	**11,723**	**-**	**100**
வரிகள் நீங்கலாக காலப்குதியின் ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	**(596,790)**	**261,416**	**(328)**	**(594,023)**	**260,463**	**(328)**
காலப்பகுதிக்கான மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்	**17,115**	**811,696**	**(98)**	**78,503**	**836,411**	**(91)**
பகிர்ந்தளிக்கத்தக்கது:						
தலைமைக்கம்பனியின் உரிமையாளர்களுக்கு	17,115	811,696	(98)	69,157	845,281	(92)
கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு	-	-		9,346	(8,870)	205
காலப்பகுதிக்கான மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம், வரி நீங்கலாக.	**17,115**	**811,696**	**(98)**	**78,503**	**836,411**	**(91)**

வருமானக்கூற்று ரூ.('000)

முடிவடைந்த காலப்பகுதிக்கான	வங்கி 30.09.2021 ரூ.000	வங்கி 30.09.2020 ரூ.000	வங்கி மாற்றம் %	குழு 30.09.2021 ரூ.000	குழு 30.09.2020 ரூ.000	குழு மாற்றம் %
மொத்த வருமானம்	**8,230,614**	**10,558,798**	**(22)**	**9,496,592**	**11,834,106**	**(20)**
வட்டி வருமானங்கள்	6,764,082	8,823,072	(23)	7,871,980	9,972,199	(21)
கழி : வட்டிச் செலவினங்கள்	3,685,718	5,776,256	(36)	4,175,566	6,465,667	(35)
தேறிய வட்டி வருமானம்	**3,078,364**	**3,046,816**	**1**	**3,696,414**	**3,506,532**	**5**
கட்டணம் மற்றும் தரகு வருமானம்	760,479	606,799	25	861,019	676,765	27
கழி : கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள்	148,338	139,950	6	163,723	144,099	14
தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்	**612,141**	**466,849**	**31**	**697,296**	**532,666**	**31**
இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட் நிதிபத்திரங்களிலிருந்து நிகர ஆதாயம்/இழப்பு	192,310	424,638	(55)	194,051	427,693	(55)
நிதியியல் முதலீடுகள் மூலமான இலாபம் / நட்டம்	195,926	586,769	(67)	196,654	587,345	(67)
இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட் நிதிபத்திரங்களிலிருந்து நிகர ஆதாயம்/இழப்பு	-	-		-	-	
ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய)	317,818	117,519	170	372,887	170,104	119
மொத்த தொழிற்பாட்டு வருமானம்	**4,396,559**	**4,642,591**	**(5)**	**5,157,302**	**5,224,340**	**(1)**
கழிக்குக: கடன்கள் மற்றும் ஏனைய கடன்படுகைகளுக்கான சீரிழப்பு	575,632	561,728	2	738,008	726,204	2
தேறிய தொழிற்பாட்டு வருமானம்	**3,820,927**	**4,080,863**	**(6)**	**4,419,294**	**4,498,136**	**(2)**
கழி : ஊழியர்சார் செலவினங்கள்	1,351,139	1,356,923	(0)	1,554,349	1,545,348	1
தேய்மானம் மற்றும் கடனிறப்பு	495,346	498,952	(1)	540,344	543,860	(1)
ஏனைய செலவினங்கள்	883,414	999,271	(12)	1,000,002	1,102,588	(9)
மொத்த தொழிற்பாட்டு செலவீனங்கள்	**2,729,899**	**2,855,146**	**(4)**	**3,094,695**	**3,191,796**	**(3)**
தேறிய தொழிற்பாட்டு இலாபம்	**1,091,028**	**1,225,717**	**(11)**	**1,324,599**	**1,306,340**	**1**
பங்குநிலை முதலீட்டாளர்களின் இலாபப் பங்கு, வரி நீங்கலாக	10,834	(19,798)	155	-	-	
நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி கூட்டு வரிக்கு (வெ. கூ. வ) முன் இலாபம்	**1,101,862**	**1,205,919**	**(9)**	**1,324,599**	**1,306,340**	**1**
கழி : நிதியியல் சேவைகள் மீதான பெ.கூ.வ	306,785	328,471	(7)	344,221	346,373	(1)
வரிக்கு முன் இலாபம்	**795,077**	**877,448**	**(9)**	**980,378**	**959,967**	**2**
கழி : வரிச் செலவினங்கள்	181,172	327,167	(45)	307,851	384,018	(20)
வரிக்கு பின்னரான இலாபம்	**613,905**	**550,281**	**12**	**672,527**	**575,949**	**17**
பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:						
தலைமைக்கம்பனியின் உரிமையாளர்களுக்கு	613,905	550,281	12	665,946	583,866	14
கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு	-	-		6,581	(7,917)	183
காலப்பகுதிக்கான இலாபம்	**613,905**	**550,281**	**12**	**672,527**	**575,949**	**17**
இலாபத்தில் பங்கொன்றின் சம்பாத்தியம்						
பங்கொன்றின் அடிப்படை சம்பாத்தியம்	0.57	0.51	12	0.61	0.54	14
பங்கொன்றின் நீர்த்த சம்பாத்தியம்	0.57	0.51	12	0.61	0.54	14

காசுப்பாய்ச்சல்கள் கூற்று ரூ. ('000)

	வங்கி 30.09.2021	வங்கி 30.09.2020	குழு 30.09.2021	குழு 30.09.2020
தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சல்கள்				
வட்டி வருமதிகள்	5,867,842	7,242,828	6,540,706	8,404,488
பெறப்பட்ட கட்டணங்கள் மற்றும் தரகுப்பணம	612,140	466,849	697,296	532,666
வட்டிக் கொடுப்பனவுகள்	(4,362,505)	(5,505,930)	(4,828,624)	(6,373,710)
ஏனைய தொழிற்பாட்டு நட.வடிக்கையிலான பெறுவனவுகள்	718,369	1,135,267	775,908	1,191,482
ஏனைய தொழிற்பாட்டு நட.வடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள	(2,303,413)	(2,877,811)	(2,686,071)	(3,181,952)
தொழிற்பாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு முன் தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்)	**532,433**	**461,203**	**499,215**	**572,974**
தொழிற்பாட்டுச் சொத்துக்களில் அதிகரிப்பு / (குறைவு)				
இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதி	(1,170,276)	1,282,006	(1,170,276)	1,282,006
வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய கடன்கள், முற்பணங்கள்	(2,440,872)	6,943,923	(2,699,494)	7,728,129
ஏனையவை	(698,606)	(137,749)	(679,322)	(207,946)
	(4,309,754)	8,088,180	(4,549,092)	**8,802,189**
தொழிற்பாட்டுப் பொறுப்புக்களில் அதிகரிப்பு / (குறைவு)				
வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை	3,469,976	5,285,341	3,081,597	4,213,724
மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்	(4,286,435)	(6,025,103)	(4,351,443)	(6,145,129)
ஏனையவை	114,726	518,028	341,942	578,441
	(701,733)	(221,734)	(927,904)	**(1,352,964)**
வருமான வரிகு முன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து /(அவற்றில் பயன்படுத்திய) தேறிய காசு	**(4,479,054)**	**8,327,649**	**(4,977,781)**	**8,022,199**
செலுத்தப்பட்ட ஓய்வுகால அனுகூலக் கொடுப்பனவுகள்	(10,648)	(12,156)	(11,404)	(12,908)
செலுத்திய வருமான வரி	(249,586)	(15,853)	(430,183)	(16,463)
**தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து / (அவற்றில் பயன்படு

புலம்பெயர்...

03ஆம் பக்க தொடர்...

முன்னேற்றத்திற்காகவும் ஒட்டு மொத்த மூலோபாய வேலைத்திட்டத்தை அணுகுவதற்கும் மிக உயர்ந்த முன்னுரிமையை வழங்குமாறு வலியுறுத்த விரும்புகிறேன்.

கடந்த ஒக்டோபர் மாதம் வெளிவிவகார அமைச்சரிடம் நான் எழுப்பிய கேள்விக்கு அவர் வழங்கிய பதிலில் நான் திருப்தி அடையவில்லை. அதில் பாலஸ்தீனத்தை பற்றி குறிப்பிடப்படவில்லை. அன்றைய பலஸ்தீன ஒத்துழைப்புக் குழுவின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இருந்தார். அவருக்கு துரோகம் இழைக்கும் வகையில் செயற்படுகின்றனர். நம் நாடும் பல தசாப்தங்களாக காலனித்துவ நாடாக இருந்தது. இன்று உலகில் எஞ்சியிருக்கும் கடைசி காலனித்துவ நாடாக பாலஸ்தீனம் இருக்க வேண்டும் என்றார்.

யுத்தத்தினால் இறந்தவர்களை...

03ஆம் பக்க தொடர்...

குறிப்பாக கொரோனாவினால் மரணமடையும் முஸ்லிம் சடலங்களை 150 கிலோ மீற்றருக்கு அப்பால் கொண்டு சென்று அடக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது எவ்வாறு நியாயமாகும்?

முஸ்லிம் சமூகத்தினர் பௌத்த மக்களுடன் மிக நெருக்கமான உறவுகளை கொண்டுள்ளவர்கள். கடந்த காலங்களில் அவர்கள் இலங்கைக்கு வந்த போது ஆண்கள் மட்டுமே இங்கு வந்தனர். அவர்கள் இங்குள்ள சிங்கள பெண்மணிகளையே திருமணம் முடித்தனர். அவ்வாறான ஒரு நெருங்கிய தொடர்பு உள்ளது. எல்லாக் காலத்திலும் அவர்கள் ஒத்துழைப்பு எமக்கு கிடைத்து வருகிறது. அதே போன்று இலங்கையின் தேசிய கீதம் தமிழிலும் பாடப்பட்டப்போது சர்வதேச ரீதியில் எமது நாடு பெரும் நம்பிக்கைக்கு உட்பட்டது. எனினும் அந்த செயற்பாடு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவை அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ள நிலையில் அங்கு தெரிவிக்க வேண்டிய பதிலை அரசாங்கம் தயார் செய்து கொண்டு செல்ல வேண்டும் என்பதை நான் வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்துக்கொள்கின்றேன். இதுவரை நாட்டுக்கு எதிராக அங்கு எந்த தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை எனினும் இம்முறை நாட்டுக்கு எதிராக அங்கு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டால் அவ்வாறு நடக்கலாம் என்பதால் நாம் முன்னேற்பாடாகவும் தயாராகவும் செயல்படுவது சிறந்ததாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.நா. வின் விசேட...

03ஆம் பக்க தொடர்...

ஏற்றுக்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் தொடர்பான முன்னேற்ற கரமான நகர்வுகள் குறித்து அறிந்துகொள்வதற்கு நான் பெரிதும் விரும்புகின்றேன்' என்று ரொமோயா ஒபொகாடா தெரிவித்துள்ளார்.

தென் கிழக்கு பல்கலைகழக வளாகத்தில் டிஜிட்டல் தொழில்நுட்பம் தொடர்பான ஐ.சி.ரி.ஏ. வின் கிழக்கு மாநாடு இன்று

டிஜிட்டல் தொழில்நுட்பம் தொடர்பான விழிப்புணர்வையும் அதன் பயன்பாட்டையும் கிழக்கு பிராந்தியத்தில் மேம்படுத்துவது தொடர்பில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் (ஐ.சி.ரி.ஏ) தொழில்நுட்ப அமைச்சு, தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, தொடர்பாடல் பங்குதாரர்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறை பங்காளர்களின் பங்குபற்றுதலுடன் ஏற்பாடு செய்துள்ள ஒரு நாள் பிராந்திய மாநாடு இன்று 26 ஆம் திகதி தென் கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறுகின்றது.

இலங்கையின் தேசிய டிஜிட்டல் மேம்பாட்டு திட்டமானது பிராந்திய பங்காளர்களுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தில் தொழில்நுட்ப கொத்தணிகளை அமைக்கும் சூழலை உருவாக்குவதற்கான அறிவை மேம்படுத்துவதே இம்மாநாட்டின் பிரதான நோக்கமாகும்.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவரகம் ஏற்பாடு செய்து முன்னெடுத்துவரும் பிராந்திய மட்ட மாநாடுகளில் இது நாலாவது மாநாடாகும். இம்மாநாட்டின் ஊடாக கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்கள் குறித்து விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதோடு இம்மாநாட்டில் புதிய தொடர்பாடல்களை விரிவுபடுத்துதல், தற்போதுள்ளதொடர்பாடல்களைமேலும் பலப்படுத்துதல், தேசிய டிஜிட்டல் மயமாக்கலின் பயணப்பாதைக்கான திட்டமிடல் என்பன தொடர்பிலான கருத்துகளும் முன்வைக்கப்பட உள்ளன.

தெதுரு ஓயாவின் 08 வான் கதவுகள் திறப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

தெதுரு ஓயாவின் 8 வான் கதவுகள் நேற்று திறக்கப்பட்டுள்ளதாக நீர்பாசணத் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறித்த நீர்த்தேக்கத்தின் நீரின் அளவு அதிகரித்துள்ளமையால் இவ்வாறு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. இவ்வாறு குறித்த நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், செக்கனுக்கு 28000 கன அளவு நீர் வெளியேற்றப்படுகிறது.

3000 சிறு பாலங்களை...

வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 5000 சிறு பாலங்கள் நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதுடன் அதில் 3000 பாலங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 250 பாலங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவற்றுக்கான திட்டங்கள் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய முறைப்படி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று சூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாடளாவிய ரீதியில் ஒரு இலட்சம் கிலோமீட்டர் வீதிகளை நிர்மாணிப்பதே அரசாங்கத்தின் இலக்கு. அத்துடன் மேம்பாலங்கள், வீதிகள் ஊடான பாலங்கள் சிறிய பாலங்கள் என ஆயிரக்கணக்கான பாலங்களை அமைப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று இரண்டு வருடங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில் சுபீட்சத்தின் நோக்குகொள்கை திட்டத்தின்கீழ் வீதி அபிவிருத்தி தொடர்பில் மேலும் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பிரேமசிறி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சர்தா வீரக்கோன் ஆகியோரும் கலந்துகொண்டு விளக்கமளித்தமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

நாம் ஒருபோதும்...

அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கைக்கு எதிராக மறைந்திருந்து முன்வைக்கப்பட்டுள்ள ஆதரமற்ற 120,000 சாட்சிகளை இறைமையுள்ள நாட்டுக்கு எதிராக பயன்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாம் எந்த நாட்டின் முன்பாகவும் மண்டியிட மாட்டோம். எமது நாட்டின் சுயகௌரவத்தை பெருமையை விட்டுக்கொடுக்கவும் மாட்டோம். மனித உரிமை கவுன்ஸிலை ஏற்கிறோம். ஆனால் இலங்கையை பின்தொடர்ந்து எமது நாட்டுக்கு எதிராக சாட்சியங்களை தேடி சர்வதேச நீதிமன்றங்களின் முன்னால் நிறுத்தும் முயற்சியை ஏற்க முடியாது.

இலங்கைக்கு மாத்திரம் விசேட பொறிமுறை கொண்டுவருவதை ஏற்க முடியாது. ஐ.நா சம்பிரதாயங்களுக்கு இது முற்றிலும்முரணானது. செப்டம்பர் மாதம் நடைபெற்ற அமர்வில் இலங்கைக்கு எதிராக 120,000 சாட்சிகள் இருப்பதாக மனிதஉரிமை ஆணையாளர் தெரிவித்தார்.அந்த சாட்சியங்களின் உண்மைத்தன்மை பற்றி அறியும் உரிமை எமக்குள்ளது. யார் இந்த சாட்சியங்களை வழங்கினார்கள். ஆதரமற்ற மறைந்திருந்து முன்வைக்கும் சாட்சியங்களை பயன்படுத்தி இறைமையுள்ள நாட்டுக்கு எதிராக பயன்படுத்த ஐ.நாவிற்கு முடியாது.

மனித உரிமை கவுன்ஸில் உயரதிகாரிகள் இருவர் ஜனவரியில் இலங்கை வருகின்றனர். நாம் எதனையும் மறைக்க மாட்டோம். அவர்கள் இங்கு வந்து நாட்டின் எந்த இடத்திற்கும் செல்லலாம்.

ஐ.நா சம்பிரதாயங்களின் படி எமது நாட்டு நிறுவனங்களுக்கு சுந்திரமாக செயற்பட இடமளிக்க வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழு, காணமல் போனோர் அலுவலகம் போன்ற பல நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவற்றில் பாரிய முன்னேற்றம் உள்ளன. சிவில் அமைப்புகளை நாம் துரோகிகளாக கருதவில்லை. அவர்களின் ஆலோசனைகளை ஏற்கிறோம். எமது செயற்பாடுகளை பெற வரும் சனிக்கிழமை அவற்றை சந்திக்கிறோம்.

ஜி.எஸ்.பி சலுகை தொடர்பில் விமர்சனம் முன்வைக்கப்பட்டது. ஆனால் பயங்கரவாத தடைச்சட்டம் 42 வருடங்கள் பழைமையானது. அதனை ஒருபோதும் வாபஸ் பெற மாட்டோம். அழுத்தங்களுக்கு நாம் தலைசாய்க்க மாட்டோம்.பயங்கரவாத தடைச்சட்டத்திற்கான திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.இது தொடர்பில் வெளிநாட்டு தூதுதுகரங்களை அறிவூட்டுவோம். இந்தியாவை எதிரியாக கருதுவதாக பொன்னம்பலம் எம்.பி தெரிவித்தார்.அதில் எந்த உண்மையும் கிடையாது.பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினாலும் நாட்டின் வெளிநாட்டு கொள்கை தொடர்பில் ஒன்றுபட்டு இருக்க வேண்டும்.தேசிய உடன்பாட்டின் படி உலகிற்கு முன்வைக்கப்படுவதே இது. இந்தியாவை ஒருபோதும் எதிரி நாடாக கருதவில்லை என்று குறிப்பிட்ட அவர் நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை குறுகிய நோக்கில் பார்க்காது தேசிய கோணத்தில் நோக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கமே...

அதனை மொழிபெயர்ப்பு செய்வதை கூட அன்றைய அரசாங்கம் தட்டிக்கழித்ததாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

காணாமற்போனோர் அலுவலகம் 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் 2017 ஆம் ஆண்டிலேயே அதன் செயற்பாடுகள் சீர்குலைக்கப்பட்ட தாகவும் அதில் முக்கிய பங்கு தற்போதைய எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்லவினது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்கள் தொடர்பான வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

அரசாங்கம் சிறந்த வெளிநாட்டு கொள்கையை கொண்டுள்ளது. அதற்கிணங்க எமது தாய் நாட்டில் உள்ள அனைத்து இன, மத மக்களினதும் அபிப்பிராயத்தை பெற்றுக்கொண்டு சுயாதீனமான கொள்கையொன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எமது வெளிநாட்டு அமைச்சின் செயற்பாடுகள் நவீனமயப்படுத்தப் பட வேண்டியது காலத்தின் தேவையாகும். 67 வெளிநாட்டுத் தூதரகங்கள் பல்வேறு நாடுகளிலும் இயங்குகின்ற நிலையில் அதன் செயற்பாடுகள் எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு பலம் சேர்க்கும் செயற்பாடாக அமைய வேண்டும். ஒவ்வொரு வெளிநாட்டு தூதரகம் மூலமாகவும் வருடாந்தம் 50 மில்லியன் அமெரிக்கன் டொலர் முதலீடுகளை இலங்கைக்கு பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயற்பாடுகள் மக்களுடன் நெருங்கிய தாக அமைய வேண்டும். அடிமட்டத்தில் உள்ள மக்களும் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் அரசாங்கம் கொண்டுள்ள கருத்தை தெரிந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜெனிவா மனித உரிமைப் பேரவை தொடர்பில் குறிப்பிடும்போது ஜெனிவாவுக்கு அரசாங்கம் வழங்கும் பதிலை மார்ச் மாதம் வரை தாமதிக்காமல் ஏற்கனவே அதனை தயார் செய்து கொள்ள வேண்டும்.அது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துவது அவசியம்என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரச ஊடக நிறுவனங்களை திறைசேரிக்கு...

பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்கும் வகையில் அவர்களுக்கு சிறந்த பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்காக பட்டய ஊடக கற்கை நிறுவனம் ஒன்றை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவித்த அவர்,அதன் முதற்கட்ட நடவடிக்கைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வெகுசன ஊடக அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் மீதான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர்:

ஊடகவியலாளர்கள் பல்வேறு குறைபாடுகள் மற்றும் சவால்களை எதிர்நோக்கும் நிலையில் அவர்களுக்கான முறையான பயிற்சிகள் இல்லாமை பெரும் குறைபாடாக உள்ளது. அதற்கிணங்க அனைத்து ஊடகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஊடகவியலாளர்களின் செயற்பாட்டினால் ஏற்படும் நன்மைகளை விட தீமைகளே அதிகமாக காணப்படுகின்றன.

அவற்றை கருத்தில் கொண்டு பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் ஊடாக சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்குவதே எமது நோக்கம். எமது பாட விதானங்களில் ஊடகம் தொடர்பில் விடயங்கள் இருந்தாலும் அது தொழில் ரீதியான ஊடகவியலாளர்களை உருவாக்குவதாகவே அமைந்துள்ளது.

ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் உள்ள அதிகாரம் தொடர்பில் குறிப்பிடும்போது உலகில் நான்காவது அரசாங்கமாக ஊடகங்கள் குறிப்பிடப்படுகின்றன.

நான் ஊடகத்துறை அமைச்சு பொறுப்பேற்று 98 நாட்கள் நிறைவடைந்துள்ளன. இராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருடன் இணைந்து நாம் இந்த குறுகிய காலத்தில் பல திட்டங்களை முன்வைத்துள்ளோம்.

ஜனாதிபதி விருது விழாவை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அத்துடன் ஊடகவியலாளர்களின் தொழில் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் அசிதிசி காப்புறுதி திட்டம் ஒன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

எதிர்வரும் டிசம்பர் 2ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இடம்பெறும் விசேட நிகழ்வில் அந்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. அதற்கான நிதி இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக மாணவரது கல்வி...

ஏனைய அடிப்படை பட்டப் படிப்புகளை 20 வயதில் பூர்த்தி செய்வது தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்துடன் நேற்று இடம் பெற்ற சந்திப்பின்போது முன்வைத்த முன்மொழிவு தொடர்பில் கவனம் செலுத்தி பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார். கல்வி அமைச்சு மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியன ஏற்கனவே இது தொடர்பில் கவனம் செலுத்தி திட்டமிட்டபடி பரீட்சைகளை நடத்தி, காலதாமதமின்றி பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு வருவதாக இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியர்கள் உள்ளிட்ட தொழில் வல்லுனர்களிடமிருந்து வருமான வரி அறவிடுவதில் நல்லாட்சி அரசாங்கக் காலப்பகுதியில் காணப்பட்ட கொள்கைக்கு மாறாக மஹிந்த ராஜபக்ஷ யுகத்தின் வரி கொள்கையை அமுல்படுத்துமாறு அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் சார்பில் விசேட வைத்திய நிபுணர் அனுருத்த பாதெனிய இச்சந்திப்பின் போது கேட்டுக் கொண்டார்.

12 சதவீதமாகக் காணப்பட்ட வருமான வரி நல்லாட்சி அரசாங்கத்தினால் 24 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தொழில் வல்லுனர்கள், வர்த்தகர்களாக கருதப்பட்டு அம்மட்டத்தில் வரி அறவிடப்படுவதாகவும் வைத்தியர் அனுருத்த பாதெனிய சுட்டிக்காட்டினார். இப்பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் நடவடிக்கை முன்னெடுப்பதற்கு அதனுடன் தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடலொன்றை தயார்ப்படுத்துமாறு பிரதமர் இதன் போதுசம்பந்தப்பட்டஅதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அரச சேவையாளர்களின் சம்பளம் தொடர்பில் காணப்படும் பிரச்சினையை தீர்ப்பதில் அது குறித்து நிதி அமைச்சு, அரசாங்க நிர்வாக அமைச்சுடன் இணைந்து தேசிய சம்பளக் கொள்கையின் அடிப்படையில் சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய சம்பளம் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்குமாறு அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் வைத்தியர்கள் இதன்போது பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இந்த சந்திப்பில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, பிரதமரின் சிரேஷ்ட உதவி செயலாளர் பிரியங்க நாணயக்கார, தேசிய சம்பள ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரானி சேனாரத்ன, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் விசேட நிபுணர் வைத்தியர் அனுருத்த பாதெனிய மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்முனை அல் மஸ்பாஹ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம். ஐ. அப்துல் றசாக் இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 க்கு பதவி உயர்வு பெற்றதை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதி அதிபர் ஐ. எல். எம். ஜின்னாஹ் தலைமையில் இடம்பெற்றது. ஆசிரிய நல்ன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். புவனேந்திரன் பிரதம அதிதியாக கலந்துக் கொண்டார். படம் துறைநீலாவணை நிருபர்

ஈஸ்டர் தாக்குதலுக்கு நல்லாட்சி...

03ஆம் பக்க தொடர்...

எனவும் ஜனாதிபதி எச்சரித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

மீண்டும் அந்த குற்றங்களில் அவர்கள் ஈடுபடுவதை தடுப்பதற்காக அவசியம் என்றால் எங்களால் நடவடிக்கை எடுக்க முடியும். நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்பு குறித்து எந்தவித அக்கறையும் கொண்டிருக்கவில்லை என தெரிவித்த அவர், இறுதியில் அவர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்கதவறியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.அதோடு அவர்கள் புலனாய்வுசேவையை அழித்தனர். யுத்தவீரர்களை சிறையில் அடைத்ததன் மூலம் இராணுவத்தினரின் மனோநிலையை சிதைத்ததாகவும் ஜனாதிபதி சாடினார்.

முன்னைய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் யார் காரணம் என்பதை தெளிவாக தெரிவிக்கின்றன எனவும் குறிப்பிட்ட கோட்டாபய, ஜனாதிபதி முதல் பிரதமர் வரை முழு அமைச்சரவையும் காரணம் என அந்த ஆணைக்குழுக்கள் தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

பிரதான வீதிகளில் சட்ட...

03ஆம் பக்க தொடர்...

சிறந்த பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.கொழும்பு நகரம் உள்ளிட்ட நகர்ப்புறங்களில் நிலவும் வாகன நெரிசலை கட்டுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள சுற்றுவட்டாரங்களில் விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் நவீன சமிக்ஞை விளக்குகளை பொருத்துவது தொடர்பிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

சுதந்திரக் கட்சிக்கும்...

03ஆம் பக்க தொடர்...

பெற்றுத்தான் பேசப்படும். சுதந்திரக் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் எந்த முரண்பாடும் கிடையாது. யாராவது அவ்வாறு அர்த்தம் கற்பிக்க முயன்றால் அது தவறானது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாரிய முன்மாதிரியை காட்டி வருகிறார். வெளிநாடு செல்கையில் அதிகாரி அல்லாத ஒருவரை அழைத்துச் செல்வதாக இருந்தால் தனிப்பட்ட ரீதியில் செலவிட்டார். 5 பேருக்கு குறைவானவர்களையே அழைத்துச் சென்றார். அவர் முன்மாதிரியாக நடந்திருப்பதை பற்றியே இங்கு பேசப்பட்டது.எனவே அரசியல் ரீதியில் கட்சிகள் இடையிலான பிரச்சினையாக இதனை காண்பிக்க முயலக்கக் கூடாது. பாரதூரமான விடயம் எதுவும் நடக்கவில்லை என தெரிவித்தார்.

பதவி விலகல் கடிதத்தை ...

03ஆம் பக்க தொடர்...

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்படவுள்ளதை அடுத்தே அவர் இவ்வாறு தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார் என்பதுக் குறிப்பிடத்தக்கது.

ஆயிரக்கணக்கான...

கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளர்.

சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலை எல்லையற்ற வகையில் அதிகரித்துள்ளமைக்கு இதுவே காரணம் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறு தேங்கியுள்ள அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஷிராஸ் யூனுஸ் எனும்...

பிரதமர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. இவ்வாறான நிலையில் பிரதமருக்கு எதிராகவும், பொதுஜன பெரமுனவிற்கு எதிராகவும் குறித்த நபர் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றமையை பிரதமர் ஊடகப் பிரிவு வன்மையாக கண்டிப்பதாக பிரதமர் அலுவலகம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

58,000 பட்டதாரிகளுக்கு...

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிகள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

நிரந்தர நியமனம் வழங்கப்படுவோருக்கு மாதாந்தம் 41 ஆயிரம் ரூபாய் சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட சுமார் 58,000 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளை...

வெளியாகியுள்ளது. அதில், 14 பிரிவுகளும், 8 உப பிரிவுகளும் அடங்குகின்றன. ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்படுபவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் தொடர்பான விபரங்கள் அந்த வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், வருடாந்தம் 10க்கும் மேற்படாதவாறு ஜனாதிபதி சட்டத்தரணிகள் நியமிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. பதவிவழி அடிப்படையில், அரச சட்ட அதிகாரிகளை ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கும்போது, இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அறநெறி பாடசாலைகள்...

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அறநெறிப் பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு வசதியாகப் பெற்றோர், அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தினர், பொறுப்பான உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

உரிய சுகாதர நடைமுறைகளைக் கட்டாயம் பின்பற்றவேண்டும். எனவே, இந்த விடயத்தில் சகலரும் கவனம் செலுத்துமாறும் பணிப்பாளர் உமாமகேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

குறிஞ்சாக்கேணியில்...

முன்னெடுக்கப்படுவதாக கடற்படை தெரிவித்துள்ளது. ஒரே நேரத்தில் 20 பேர் வரை பயணிக்கக்கூடிய வகையில் இந்தப் படகு சேவை முன்னெடுக்கப்படுவதாக கடற்படை குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, திருகோணமலை – குறிஞ்சாக்கேணி மிதப்பு பாலம் கவிழ்ந்து அனர்த்தத்திற்குள்ளான சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட, அந்தப் பாலத்தின் உரிமையாளர் உட்பட 3 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் திருகோணமலை பிரதான நீதிவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் (24) பிரசன்னப்படுத்தப்பட்டனர்.இதன் போது குறித்த மூன்று பேரையும் அடுத்த மாதம் 8 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நாட்டில் கொரோனா...

அதன்படி, நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14,232 ஆக நேற்று அதிகரித்தது.

அத்துடன், நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மொத்த தொற்று நபர்களின் எண்ணிக்கை 559,605 ஆக நேற்று முன்தினம் அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொவிட் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 528,400ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடன் இணக்கச் சபைத் திணைக்களத்தின் பணிகள்

நீதிச் சுகந்திரத்தை பலப்படுத்தி சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாத்து நீதியை நிலைநாட்டும் செயற்பாட்டை வினைத்திறனுடன் கூடிய நவீன தொழிநுட்பத்தைக் கொண்ட நீதிமன்றத் தொகுதியைத் தாபிப்பதற்கு கௌரவ நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி அவர்களின் ஆலோசனைக்கு அமைய நீதி அமைச்சின் செயலாளர் எம். எம். பீ. கே. மாயாதுன்னெ அவர்களின் வழிகாட்டலின் கீழ் நீதி அமைச்சு நீதிபதிகளையும், நீதிமன்றங்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தல், காலாவதியான சட்டங்களைத் திருத்தம் செய்து இற்றைப்படுத்தல், நீதிமன்றத் தொகுதியை டிஜிட்டல் மயப்படுத்தல், தற்காலத்துக்கு உகந்தவாறு நீதிமன்றத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பிணக்குகளைத் தீர்க்கும் மாற்றுப் பொறிமுறையை வலுப்படுத்தல் ஆகிய ஆறு உபாய மார்க்கங்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருகிறது.

நீதி அமைச்சின் கீழுள்ள இரு நிறுவனங்களான மத்தியஸ்த சபையும், கடன் இணக்கச் சபையும் பிணக்குகளைத் தீர்க்கும் மாற்றுச் செயற்பாட்டில் செயலாற்றி வருகின்றன. மத்தியஸ்த நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு மத்தியஸ்த சபைகளின் அமர்வுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல். அத்துடன் காணிச் சச்சரவுகளுக்காக ஒன்பது விசேட மத்தியஸ்த சபைகள் 07 மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 07 மாவட்டங்களில் தாபிக்கப்படவுள்ளன. நிதிப் பிணக்குகளுக்காக 05 மாவட்டங்களில் தள மத்தியஸ்த சபைகள் தாபிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முக்கியமாக மத்தியஸ்த சபைகளின் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கும், கடன் இணக்கச் சபையின் நடவடிக்கைகளை மென்மேலும் மக்களிடையே கொண்டு செல்வதற்கும், அதன் அலுவலக எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நீதி அமைச்சு செயலாற்றி வருகின்றது.

அதற்கமைய கடன் இணக்கச் சபையினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மென்மேலும் விரிவாக்கி தென் மாகாணத்தில் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு நெருங்கிய சேவையை வழங்கும் நோக்கில் காலி கடன் இணக்கச் சபை அலுவலகம் கௌரவ நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி அவர்களின் தலைமையில், கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் வைத்திய ரமேஷ் பதிரண அவர்கள் மற்றும் கௌரவ கடலோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் மொகான் த சில்வா அவர்கள் உள்ளிட்ட காலி மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பங்குபற்றலில் 2021.11.26 ஆம் திகதி திறந்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் புதிய அலுவலகம் காலி மாவட்டத்தினுள் தாபித்ததன் பின் தென் மாகாணத்தின் மாத்தறை மற்றும் அம்பாநதோட்டை ஆகிய மாவட்டங்களின் மக்களுக்கும் அத் திணைக்களத்தின் சேவையைப் பெற்றுக் கொள்ளும் வசதி கிட்டுகிறது. கடன் இணக்கச் சபையினால் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தொடர்பாகத் தேவையான தகவல்களைத் தலைமை அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 0112697911, காலி அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 0912237431 அல்லது கம்பஹா அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 0332060668 ஊடாக பெற்றுக் கொள்ள முடிவதுடன், எதிர்வரும் காலங்களில் இதன் வடமேல் மாகாண அலுவலகத்தை குருணாகலையில் தாபிப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடன் இணக்கச் சபையின் கம்பஹா அலுவலகம் 2/11, விஜய வீதி, கம்பஹா எனும் இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

1941 இலக்கம் 39 ஐக் கொண்ட கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கடன் இணக்கச் சபை தாபிக்கப்பட்டுள்ளதுடன், 1999 இலக்கம் 29 ஐக் கொண்ட (திருத்தம் செய்யப்பட்ட) சட்டத்துக்கு அமைய கடன் கொடுக்கல் வாங்கலுக்காக மாத்திரமே அறுதியுறுதியின் மீது செய்யப்பட்ட உரித்துரிமை தொடர்பில் இத் திணைக்களம் தலையிட்டு கடனாளிக்கு சலுகை அளிப்பதற்கு ஏற்புடையதாக ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

நிலவும் பொருளாதார நெடிக்கடி காரணமாகவே எவரெனும் ஒருவர் தமக்குச் சொந்தமான அசையாத சொத்துக்களை கடன் ஈட்டுறுதியாக அல்லது நிச்சயித்த அறுதியுறுதியைப் பிணையாக வைத்துக் கடனைப் பெறுகின்றார். அவ்வாறில்லாத எவரும் தாம் வசிக்கும் காணியையோ அல்லது தனக்குச் சொந்தமான வேறெதும் சொத்துக்களையோ பிணையாக வைத்து கடனைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது மிகவும் தெள்ளத் தெளிவான விடயமாகும். ஒருவர் அவ்வாறு தனக்கு அல்லது தனது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக உள்ள காணியையோ அல்லது வேறு ஏதேனும் சொத்தையோ ஈடாக வைத்து பணத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டார். அவசரமாகத் தேவைப்படும் நிதித் தேவைக்கேற்ப அவ்வாறு ஈடாக அல்லது பிணையாக ஏதேனுமொரு சொத்தை வைத்து கடன் தொகையைப் பெற்றுக் கொண்டு அக் கடனை அடைக்க முடியாது சிலவேளைகளில் தாம் வசிக்கும் ஒரேயொரு சொத்தும் அறுதியாகிப் போன ஏராளமானோர் எமது நாட்டில் உள்ளனர். அத்துடன் நிலவும் பொருளாதார நெடிக்கடியின் காரணத்தால் தமது சொத்தை ஈடாக அல்லது பிணையாக வைப்போரிடமிருந்து அநியாய வட்டி அறவிடப்படுவதுடன், கடன்பட்டோரிடமிருந்து பல்வேறு காரணங்களைக் காட்டி கட்டணங்கள் வசூலிப்பவர்கள் எமது நாட்டினுள் ஏராளமாக உள்ளனர்.

அவ்வாறு பல்வேறு நியாயமற்ற காரணங்களினால் பாதிக்கப்பட்ட எமது நாட்டின் ஆயிரக்கணக்கான அப்பாவி பொது மக்களுக்கு தாம் முகம் கொடுத்துள்ள அழுத்தத்தை நீதிமன்றத்துக்கோ அல்லது வேறு ஏதேனுமொரு சட்ட நிறுவனத்திற்கோ கொண்டு சென்று உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்களிடம் பணம் இல்லை. அவ்வாறாயின் சொத்தை ஈட்டு அறுதியாக அல்லது அறுதியுறுதியாக அல்லது உறுதியளித்துள்ள அறுதியாக பிணையாக வைத்துக் கடன் பெற்றுக் கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் அம் மக்களுக்கு உதவி புரிவதற்கே கடன் இணக்கச் சபைத் திணைக்களம் தாபிக்கப்பட்டுள்ளது.

காணிகள், வயல் நிலங்கள், தோட்டந்துறவுகள், வீடு, சொத்துக்கள், உறுதியளித்துள்ள அறுதியுறுதி, ஈட்டுறுதியின் மீது பிணையாக வைத்துப் பெற்றுக் கொண்ட கடன்கள் தொடர்பில் அல்லது அவ்வாறான பாதுகாப்பான கடன் தொடர்பில் கடன்பட்டுள்ள பொதுமக்கள் அந்தக் கடனிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கு கடன் இணக்கச் சபை ஏதேனுமொரு நிவாரணத்தை வழங்குகின்றது. கடன்பட்டோர் சுரண்டப்படுவதற்கான வாய்ப்புக்கள் இதன் மூலம் இல்லாது போகின்றது. இங்கு சட்டத்தரணிகளின் தலையீடு இன்றி சுயவிருப்பின் பேரில் ஒப்பந்தங்களுக்கு வர முடியும். எனினும் நியாயமான முன்மொழிவுகளை கடன்கொடுத்தவர் ஏற்றுக் கொள்ளாது விடில் கடன்பட்டோருக்கு சான்றிதலை வழங்குவதற்கு கடன் இணக்கச் சபைக்கு அதிகாரம் உண்டு. இச் சான்றிதழ் வழக்கு நடவடிக்கைகளின் போது கடன்பட்டோருக்கு நன்மை பயக்கும். இச் சான்றிதழ் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படுமாயின் கடன் தொகையைச் செலுத்துவதற்கு அதிகபட்சத்தின் கீழ் 10 வருட காலக் கெடு வழங்குவதற்கும், வட்டியை குறைந்த சதவீதமாகக் குறைப்பதற்கும், வழக்கு விசாரணைக்கான கட்டணங்களை கடன்பட்டவரிடமிருந்து அறவிடாமல் இருப்பதற்கும் கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

> **“நீதி அமைச்சின் கீழுள்ள இரு நிறுவனங்களான மத்தியஸ்த சபையும், கடன் இணக்கச் சபையும் பிணக்குகளைத் தீர்க்கும் மாற்றுச் செயற்பாட்டில் செயலாற்றி வருகின்றன. மத்தியஸ்த நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு மத்தியஸ்த சபைகளின் அமர்வுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல். அத்துடன் காணிச் சச்சரவுகளுக்காக ஒன்பது விசேட மத்தியஸ்த சபைகள் 07 மாவட்டங்களின் தாபிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 07 மாவட்டங்களில் தாபிக்கப்படவுள்ளன. நிதிப் பிணக்குகளுக்காக 05 மாவட்டங்களில் தள மத்தியஸ்த சபைகள் தாபிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

கடன் இணக்கச் சபையிடம் முறைப்பாடுகளை அனுப்பி வைக்கும் போது பொதுமக்களுக்குத் தேவையான விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் இல 35 ஏ, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08 எனும் இடத்தில் அமைந்துள்ள கடன் இணக்கச் சபையின் தலைமை அலுவலகத்திலோ அல்லது அழத. பழஎ.டம எனும் இணையத் தளத்தின் ஊடாகவோ தரவிறக்கம் செய்ய முடிவதுடன், தேவையான தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவங்களை தமக்குரிய காணி பதிவு அலுவலகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட காணிப் பதிவாளர் சான்றுப்படுத்திய கடன் கொடுக்கல் வாங்கலுக்குரிய உறுதியின் பிரதியையும் (கடன் ஈடாக வைத்து வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ள அறுதிகள் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காக எழுதப்பட்ட அறுதியுறுதிகள்) மற்றும் கொடுக்கல் வாங்கலுக்குரிய உறுதி சான்றுப்படுத்தப்பட்ட திகதி முதல் இது வரையான காலத்துக்குரிய காணிப் பதிவு அலுவலகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இரு மடித் தாளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியையும் இணைத்து கடன் இணக்கச் சபையின் தலைமை அலுவலகத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

கடன் இணக்கச் சபையின் மூலம் தமக்கு அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக தீர்மானங்களை எடுக்கும் போது கடன்பட்டவருக்கு கிடைத்த அல்லது கடனாகப் பெற்றுக் கொண்ட தொகையின் சரியான அளவு, கடன் தொகைக்குச் சேர்க்கப்பட்ட வட்டியின் நியாயத் தன்மை, கடன் தொகை தொடர்பில் செலுத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள வட்டியின் அளவு, வட்டியாக அல்லது கட்டணமாக தற்போது செலுத்தியுள்ள தொகையின் அளவு, கடன் தொகை செலுத்தும் போது அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள விசேட நிபந்தனைகள், கடனாளிக்கு பணத்தைச் செலுத்துவதற்கான இயலுமை மற்றும் கருதக் கூடிய விடயம் என சபை எண்ணும் வேறு விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படும்.

கடன் இணக்கச் சபையின் ஆரம்ப விசாரணைகளின் பின்னர் கடன் கொடுத்தவரும், கடனாளியுமான இரு தரப்பினரும் இறுதி விசாரணைக்கு அழைத்து ஐவர் அடங்கிய நடுவர் சபையின் முன்னிலையில் இடம்பெறும் விசாரணையில் இரு தரப்பினரும் முன்வைக்கும் விடயங்களை சபையினர் ஆராய்ந்த பின்னர் கடனாளிக்கு சலுகை வழங்கும் விதத்தில் தவணை அடிப்படையில் நியாயமான காலப் பகுதியினுள் கடன் தொகையை அடைப்பதற்கான வழியொன்றை முன்வைப்பதுடன், சகல விண்ணப்பங்கள் தொடர்பிலும் ஒரே விதத்தில் அல்லாது அந்தந்த விண்ணப்பங்களின் தன்மைக்கேற்ப, தரப்பினரின் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் மீதும் கவனத்தைச் செலுத்தி கடனாளி, கடன் கொடுத்தவர் ஆகிய இரு தரப்பினரதும் இணக்கத்துடன் நியாயமான முறையில் தீர்த்து வைப்பதற்கு சபை செயலாற்றும்.

கடன் இணக்கச் சபையிடம் விண்ணப்பப் படிவங்களை முன்வைக்கும் போது அவ் விண்ணப்பப் படிவங்களுடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் நன்கு வாசித்து அதற்கமைய சரியாகவும், தெளிவாகவும் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையிலே சபை செயற்படுவதால் விண்ணப்பப் படிவங்களை தெளிவாகப் பூர்த்தி செய்து அனுப்புவது அவசியமாகும். விண்ணப்பப் படிவத்துடன் உரிய உறுதியின் மூலப் பிரதியையோ அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பிரதியையோ சமர்ப்பித்தல் கட்டாயமாவதுடன், மிகவும் விரைவாக சமர்ப்பிப்பதன் மூலம் இந் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்திக் கொள்ள முடியும்.

முக்கியமாக கடன் இணக்கச் சபையின் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம் நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்படும் கடன் இணக்கச் சபையால் தீர்த்து வைக்கக் கூடிய சிக்கல்களை தீர்த்து வைப்பதற்கு முடிவதுடன், அது நீதிமன்றத்தில் தற்போது உள்ள வழக்கு விசாரணைகளின் தாமதங்களைக் குறைப்பதற்கும் உறுதுணையாக அமைகிறது.

தலைமை அலுவலகம்
இல 35 ஏ, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை, பொரல்ல, கொழும்பு 08.
தொலைபேசி/ தொலைநகல்
011 269 7911
மின்னஞ்சல் முகவரி
debtconciliation@gmail.com
இணையத் தளம் moj.gov.lk

காலி அலுவலகம்
45 ஏ, கிரிப்ஸ் வீதி, காலி
தொலைபேசி/ தொலைநகல்
091 223 7431

கம்பஹா அலுவலகம்
2/11, விஜய வீதி, கம்பஹா
தொலைபேசி/ தொலைநகல்
033 206 0668

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 நவம்பர் மாதம் 26ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

மக்கள் மயமான 'கல்யாணி பொன் நுழைவாயில்'

"கல்யாணி பொன் நுழைவாயில்" ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (24) மாலை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

பலஸ்தீன் தொடர்பான எமது கொள்கையில் எந்த மாற்றமும் கிடையாது

ராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய

சபை நிருபர்கள் லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

கடந்த ஆட்சியைப் போன்று ஜனாதிபதிக்கோ நாட்டுக்கோ தெரியாமல் எந்த ஒப்பந்தமும் செய்ய மாட்டோம். இவ்வாறு ராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்தார்.

வரவுசெலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பலஸ்தீன் தொடர்பான எமது கொள்கையில் எந்த மாற்றமும் கிடையாது.

வெளிவிவகாரம் மற்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சுக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது, கொன்சியூர் பிரிவில் உள்ள பிரச்சினைகளுக்கு ஓரிரு வாரங்களில் தீர்வு வழங்கப்படும். ஐ.தே.க எம்.பி ஒருவரின் உறவினருக்கு சொந்தமான கம்பனிக்கே இங்குள்ள கனிணி கட்டமைப்பு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

எமது வெளிநாட்டு கொள்கை தொடர்பில் அச்சம் கொள்ளத்தேவையில்லை. ஜனாதிபதிக்கோ நாட்டுக்கோ தெரியாமல் எந்த ஒப்பந்தமும் செய்ய மாட்டோம். மங்கள சமரவீர ஒப்பந்தம் கைச்சாத்திடுகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனவுக்கோ அமைச்சரவைக்கோ தெரிந்திருக்கவில்லை. அமெரிக்காவுடன் இணை அணுசரனையுடன் முன்வைத்த யோசனையில் இருந்து விலகுவதாக முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்தன அறிவித்திருந்தார்.

பலஸ்தீன் தொடர்பான கொள்கையில் மாற்றமுள்ளதா என இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் வினவியிருந்தார். ஆனால் அதில் எந்த மாற்றமும்இல்லை.

2016 இல் மங்கள சமரவீர யுனெஸ்கோவில் இஸ்ரேலுக்கு எதிராக பிரேரணையில் வாக்களிக்க வேண்டாம் என மங்கள சமரவீர அறிவித்திருந்தார். அதனால் பலஸ்தீன் தொடர்பான கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவும் மங்கள சமரவீரவும் கொண்டு சென்ற கொள்கையையா ஐ.ம.ச முன்னெடுக்கிறது.

இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் (ஐ.ம.ச).

ஐ.தே.கவில் இருந்து பண்டாரநாயக்க விலகி தனிக் கட்சி ஆரம்பித்தார். அவர் அந்த கட்சியின் செயற்பாடுகளுக்கு பொறுப்பு கிடையாது.ஐ.ம.ச என்பது புதிய அரசியல் கட்சி என்றார். நீங்கள் ஆட்சிக்குவந்த அனைத்து காலங்களிலும் சர்வதேசத்துடன் பிரச்சினை ஏற்படுத்திக் கொண்டுள்ளீர்கள்.

லக்ஸ்மன் கிரியெல்ல ஐக்கிய மக்கள் சக்தி எம் பி

ஐநா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான யோசனைகளை எதிர்கொள்வதற்கு இப்போதிருந்தே அரசாங்கம் தயாராக வேண்டும்.

ஹர்ச டி சில்வா எம்.பி (ஐ.ம.ச)

ஐரோப்பிய ஒன்றியத்தில் ஜி.எஸ்.பி சலுகையை ரத்து செய்வது தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. ருவண்டாவில் இருந்து பாடம் கற்க வேண்டும். அந்த நாட்டில் நல்லிணக்க செயற்பாட முன்னெடுக்கப்பட்டு வேகமாக அந்த நாடு முன்னேறி வருகிறது. நல்லிணக்க ஆணைக்குழு மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் முன்வைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை. கடந்த அரசில் அது செயற்படுத்தப்படாதது குறித்து கவலை அடைகிறோம்.

இம்ரான் மஹ்ரூப் எம்.பி (ஐ.ம.ச)

ராஜாங்க அமைச்சர் கிண்ணியா விவகாரம் தொடர்பில் தெரிவித்த குற்றச்சாட்டை மறுக்கிறேன். பாலப் பாதை அமைக்க அனுமதி வழங்க நானும் தொடர்புபட்டிருந்தால் முதலில் எனது வீட்டை தான் தாக்கியிருப்பார்கள். கிண்ணியா நகர சபை தலைவர் ரியாஸ் எனது உறவினர் என்றார். அவர் எனது உறவினரல்ல. இந்தப்பிரச்சினைக்கு அரசியல் நோக்கமின்றி தீர்வு காண வேண்டும். நகர சபைத் தலைவர் பாலம் பாதைக்கு அனுமதி வழங்கியதாகவும் கூறப்பட்டது. இந்த சம்பவம் நடக்காதிருந்தால் குறிஞ்சங்கேணி விவகாரம் பேசப்பட்டிருக்காது.

யார் இதற்கு அனுமதி வழங்கியது என கிண்ணியா பிரதேச சபைத் தலைவர் கூறியுள்ளார். பாலம் பாதை தயாரிக்கப்பட்டு வருகிறது. அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நான் அரசாங்கத்தை விமர்சிக்கவில்லை. இதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டது தொடர்பில் நன்றி தெரவித்திருந்தேன்.

ராஜாங்க அமைச்சர் நிமல் லங்சா

6 பேர் இறந்துள்ளனர். சாவுகளை விற்றுப்பிழைக்க வேண்டாம் என்று கோருகிறேன். படகு சேவைக்கு நகர சபைத் தலைவர் தான் அனுமதி வழங்கினார். அவர் உங்கள் மைத்துனர் அல்லது மாமாவா? யார் என்று கூறுங்கள் . மக்கள் இறந்ததற்கு அனுமதி வழங்கிய உங்கள் உறவினர் தான் பொறுப்புக்கூற வேண்டும். நாம் இந்த விபத்துக்குள்ளான படகிற்கு அனுமதி வழங்கவில்லை. மக்கள் பயணிக்கக் கூடிய பாலப்பாதைக்குத் தான் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார்.

செல்வம் அடைக்கலநாதன் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம் பி)

நாட்டினதும் மக்களினதும் பிரச்சினைகளை நேர்மையுடனும் உண்மையுடனும் வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்கள் விசாரணைக்கு அழைக்கப்படும் நிலை மாற்றம் பெற வேண்டும். அது விடயத்தில் ஊடகத்துறை அமைச்சர் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த கொரோனா வைரஸ் சூழ்நிலையிலும் ஊடகவியலாளர்கள் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்புக்கு உள்ளானார்கள். சாதரணமாக மக்களுக்கு வழங்கப்பட்ட 5000 ரூபா கொடுப்பனவு கூட அவர்களுக்கு வழங்கப்பட வில்லை. அதேவேளை அவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை பெற்றுக் கொடுப்பது அவர்களுக்கான வீட்டுத் திட்டம் அல்லது வீட்டுக் கடன்களை பெறக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் ஊடகத்துறை அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். உயிரைப் பணயம் வைத்து சில சமயங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் அவர்களது உரிமைகள் தொடர்பிலும் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

அதேபோன்று சிரேஷ்ட ஊடகவியலாளரான தனபாலசிங்கம் மற்றும் வவுனியா ஊடகவியலாளரான பொன்னையா போன்றவர்கள் மிகவும் சுகவீனமான நிலையில் உள்ளனர். அவர்களது குடும்பங்களும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளன. அவர்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்

கடந்த காலங்களில் நாட்டின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்த பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டும் காணாமல் போயுமுள்ள நிலையில் அவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. படுகொலை செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்களின் குடும்பங்களின் நிலை மிக மோசமாக உள்ளது. அது தொடர்பில் ஊடகத்துறை அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

ரவூப் ஹக்கீம் எம்.பி(ஐ.ம.ச)

ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்கம் பதில் வழங்க வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் உள்ளன. சந்தேக நபர் பொலிஸ் பிடியில் இருந்து தப்பிச் சென்று சுட்டுக் கொல்லப்படுகின்றார்.

கொரோனா தொற்று நிலையில் இறந்தவர்கள் கட்டாயப்படுத்தி தகனம் செய்யப்பட்டார்கள். ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவின் கைது பற்றி பல சர்வதேச அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. சட்டத்தரணிகள் திணைக்களத்திற்கு விரும்பியபடி செயற்பட இடமளிக்கப்பட்டுள்ளது.

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை.

ST&IS

மக்கள் வங்கி

மலியதேவ - 226 வது கிளை

PEOPLE'S BANK

பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், ஓதர பற்று, பெலிகல் கோரளேயில், வரக்காபொல பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட, வரக்காபொல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல.345 மண்கெதர கிராம சேவை அதிகாரி பிரிவில், மண்கெதர கிராமத்தில் அமைந்துள்ள, பாலமகாவ அஸ்வெத்துமே கும்புர" அதாவது தற்போது தோட்டம்" என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் திரு. ஜி.பி. திசாநாயக்க அவர்களால் 2016 ஜுன் 28 ஆம் அளந்து தயாரிக்கப்பட்ட 7789 ஆம் இலக்க A வரைபடத்தில் 02 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: ஏ-00 : ரூ.00 : ப-25.5

அதிலுள்ள மரங்கள், பழ வகைகள் , கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பாதை உரிமையுடன் (பதிவிலக்கம் K54/138 - கேகாலை)

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், ஓதர பற்று, பெலிகல் கோரளேயில், வரக்காபொல பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட, வரக்காபொல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல.345 மண்கெதர கிராம சேவை அதிகாரி பிரிவில், மண்கெதர கிராமத்தில் அமைந்துள்ள, "பாலமகாவ அஸ்வெத்துமே கும்புர" அதாவது தற்போது தோட்டம் என அழைக்கப்படும், அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் திரு. ஜீ.பி. திசாநாயக்க அவர்களால் வரையப்பட்ட, 2016 ஜுன் 28 ஆம் அளந்து தயாரிக்கப்பட்ட 7789 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 03 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்ட காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: ஏ-00 : ரூ.01 : ப-25.5

அதிலுள்ள மரங்கள், பழ வகைகள் , கட்டடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பாதையைப் பாவிப்பதற்கும் பரிபாலனத்திற்குமான உரிமையுடன் (பதிவிலக்கம் K202/100 - கேகாலை)

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி
2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மக்கள் வங்கியின் மலியதேவ கிளை வளாகத்தில் மு.ப 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID-19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏல விற்பனை நடைபெறும்.

தீர்மான அறிவித்தலுக்கு
தயவு செய்து 2021.05.03ஆம் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையையும் மற்றும் டெய்லி நியூஸ், தினமின, தினகரன் ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

காணிக்கு செல்வதற்கான வழி:
குருநாகல் நகரிலிருந்து கொழும்பு வீதி வழியாக சுமார் 31.4 கி.மீ தூரம் சென்றதும் (நான்கல்ல பாலத்தை தான்டியதும்) குறித்த சொத்தை பாதையின் வலது பக்கத்தில் காண முடியும்.

கொடுப்பனவு செய்யும் முறை:
ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2½% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரியும்.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் மக்கள் வங்கி, மலியதேவ கிளை முகாமையாளரிடம் என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.
தொலைபேசி : 0372 231 323

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படா விட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும் உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் பின்வரும் விலாசத்தில் பெற்றுக்ககொள்ளலாம்.
முகாமையாளர், மக்கள் வங்கி, மலியதேவ கிளை, வத்திமி வீதி, குருநாகல்
தொலைபேசி: 0372 231 323

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'
ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்

facebook

129 வருடகால மகோன்னத சேவை

தலைமை அலுவலகமும் காட்சியறையும்
24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி : 081-2227593
தொலை/பக்ஸ் : 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்
6A, பெயார் பீல்ட் கார்ட்ன், கொழும்பு-08.
தொலைபேசி : 011-2671465 011-2671468
தொலை/பெக்ஸ் : 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணையதளம்: www.sandslanka.com

இயற்கை அனர்த்தங்கள் வழங்கும் செய்தி

உலகின் பல பகுதிகளிலும் அடிக்கடி அனர்த்தங்கள் இடம் பெறுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. இதன் விளைவாக மக்களின் இயல்பு வாழ்வு பாதிக்கப்படுவதோடு பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் அவர்கள் முகம் கொடுக்கின்றனர். அந்த வகையில் இந்நாட்டிலும் மழைக் காலங்களில் சில பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கும் இன்னும் சில பிரதேசங்களில் மண் சரிவும் இடம்பெறுவதையும் அவற்றின் விளைவான உயிரிழப்புகள், காயங்கள் மாத்திரமல்லாமல் சேதங்களும் பாதிப்புக்களும் ஏற்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

அதனால் இயற்கை அனர்த்தங்கள் எவ்வாறு நோக்கப்பட வேண்டும்? அவை ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன? அனர்த்தங்கள் கற்றுத்தரும் பாடங்கள் யாது? அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களை எவ்வாறு அணுகுவது? என்பன தொடர்பில் இஸ்லாம் எமக்கு தெளிவாகக் கற்றுத்தருகின்றது. அவை தொடர்பில் கவனம் செலுத்தப்படுவது அவசியம்.

இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான பௌதீக காரணங்களைப் பல அனுமானங்களை வைத்து பலரும் காரணம் கூறலாம். ஆனால் இயற்கை அனர்த்தங்களை மனிதனுக்கு உலக வாழ்வுக்கான சோதனையாக இஸ்லாம் குறிப்பிட்டிருக்கின்றது. மனிதனை மனிதப் புனிதனாக மாற்றுவதற்கான உணர்வூட்டலாகவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அல்லாஹ்தஆலா தம் அருள்மறையில், 'நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!' (அல் குர்ஆன் 2:155.) என்றும் மற்றொரு வசனத்தில் '(பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, 'நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்' என்று கூறுவார்கள். (அல் குர்ஆன் 2:156.) என்றும் குறிப்பிட்டிருக்கின்றான்.

அதாவது அல்லாஹ்தஆலா தனது அடியார்களை தன்பால் நெருங்கச் செய்தல், ஈமானைப் புதுப்பித்தல், பாவங்களிலிருந்து அவர்களை தவிர்ந்து கொள்ளச் செய்தல், ஏனையவர்களுக்கு இவற்றின் ஊடாக படிப்பினை உண்டாக்குதல், அந்தஸ்தினை உயர்த்தல் போன்றவற்றை சோதனைகள் மூலமும் மேற்கொள்கிறான்.

நபிமார்கள், நமது முன்னோர்களான ஸஹாபாக்கள், இறைநேசர்கள் போன்ற நல்லடியர்கள் பல சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வினால் சோதிக்கப்பட்ட வரலாறுகள் இதற்கு சிறந்த சான்றுகளாகும். சில வேளைகளில் சோதனைகள் வேதனைகளாகவும் மாறும். அதற்கு மனிதர்களின் தீயசெயல்களும் பாவங்களும் காரணமாக அமையும் என்று அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான்.

'மனிதர்களில் கைகள் தேடிக் கொண்ட (தீச் செயல்களின்) காரணத்தால் கடலிலும் தரையிலும் (நாசமும்) குழப்பமும் தோன்றின் (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே (தீவினைகள்) அவற்றில் சிலவற்றை (இவ்வுலகிலும்) அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான்'. **(அல் குர்ஆன் 30:41.)**

'உனக்குக் கிடைக்கும் எந்த நன்மையும் அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கிறது. இன்னும், உனக்கு ஏதாவது ஒரு தீங்கு ஏற்பட்டால் அது உன்னால் தான் வந்தது **(அல் குர்ஆன் 4:79.)**

இவ்வசனங்கள் உலகில் குழப்பங்கள், அழிவுகள், தீங்குகள் ஏற்பட மனிதனும் அவனது செயற்பாடுகளுமே காரணமாக அமைகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

அதனால் மனிதன் பாவச்செயல்களிலிருந்து விலகி சிறந்த செயற்பாடுகள் மூலம் அல்லாஹ்வை நெருங்க வேண்டும்.

சோதனைகளானது இருவிதமாக ஏற்படலாம். ஒன்று சிலரை பாதிப்புக்களுக்கு உள்ளாக்கும் வகையிலும் மற்றையது சிலரை பாதிப்புக்கு உள்ளாக்காத வகையிலும் ஏற்படலாம் என்பதை மறந்து விடலாகாது. அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி ஒத்துழைப்புக்களை நல்கி, அவர்களது துக்கத்தில் பங்குகொள்வது ஒவ்வொருவர் மீதும் கடமையும் பொறுப்புமாகும்.

உண்மையான இறைநம்பிக்கை என்பது நற்கருமங்களுக்கு உதவி ஒத்தாசை புரிவதும், பாவமான காரியங்களுக்கு உதவிடுவதை நிறுத்துவதும் தான். இத்தகையவர்கள் தான் உண்மையான இறைநம்பிக்கையாளர்களாக இருக்க முடியும் என்று தன் அருள் மறையில் அல்லாஹ்தஆலா குறிப்பிட்டிருக்கின்றான்.

'யார் இந்த உலகில் ஓர் இறைநம்பிக்கையாளரின் துன்பங்களில் ஒன்றை அகற்றுகிறாரோ, அவருடைய மறு உலகத் துன்பங்களில் ஒன்றை அல்லாஹ் அகற்றுகிறான்'. என்றபடியும் 'யார் சிரமப்படுவோருக்கு உதவி செய்ய முன் வருகிறாரோ அவருக்கு அல்லாஹ் ஈருலகிலும் உதவி செய்கிறான்' என்றபடியும் 'யார் ஒரு இறைநம்பிக்கையாளரின் குறைகளை மறைக்கிறாரோ அவரின் குறைகளை அல்லாஹ் ஈருலகிலும் மறைக்கிறான்' என்பறடியும் 'ஒருவன் தனது சகோதரருக்கு உதவி செய்து கொண்டிருக்கும் வரை அந்த அடியானுக்கு அல்லாஹ் உதவி செய்து கொண்டிருக்கிறான்' என்றபடியும் நபி (ஸல்) கூறியுள்ளார்கள். **(ஆதாரம்: புகாரி)**

மேலும் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மிகவும் விருப்பமான சிறந்த அமல்கள் தான், முஃமினான சகோதரரின் உள்ளத்திருக்கும் கவலையை போக்கி சந்தோஷத்தை ஏற்படுத்துவதாகும் அல்லது அவருடைய கடனை நிறைவேற்றுவதாகும் அல்லது அவருடைய பசியைத் தீர்க்க உணவுகளை வழங்குவதாகும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

'அமல்களில் மிகச் சிறந்தது நீங்கள் உங்களது முஃமினான சகோதரரின் உள்ளத்தில் சந்தோஷத்தை ஏற்படுத்துவதாகும் அல்லது அவருடைய கடனை நிறைவேற்றுவதாகும் அல்லது அவருக்கு ரொட்டியை உணவாகக் கொடுப்பதாகும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

அதேநேரம் தேவை உடையவருக்கு அவரின் தேவை சார்ந்து உதவமுன் வருவதும், அவருக்காக நடந்து போவதும் ஒரு இபாதத்தாக அங்கீகரிக்கப்படுகிறது. இது குறித்த தகவலை பின்வரும் நபிமொழியின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

'யாரேனும் ஒருவர் தன் சகோதரனின் தேவையை நிறைவேற்ற நடந்து செல்வது பத்தாண்டுகள் பள்ளிவாசலில் தங்கி (இஃதிகாப்) இருப்பதை விடச் சிறந்தது. ஒருவர் இறைவனின் திருப்தியை நாடி ஒரு நாள் அல்லாஹ்வின் இல்லத்தில் தங்கி இருந்தால், அவருக்கும், நரகத்திற்கும் இடையே மூன்று அகழிகளை அல்லாஹ் தடையாக ஏற்படுத்தி விடுகின்றான். ஒவ்வொரு அகழியும் வானம், பூமிக்கிடையே உள்ள தூரத்தை விட விசாலமானது' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: தப்ரானீ)

எனவே இன்றைய சூழலில் நம் நாட்டிலும் சமூகத்திலும் கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல், வெள்ளம், மண்சரிவு, நீரில் மூழ்குதல் என்பன காரணமாக பலர் அசாதாரணமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளார்கள். குறிப்பாக அன்றாடம் தொழில் செய்து வாழ்க்கை நடத்தியவர்கள், சிறுசிறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவர்கள், பிறர் தயவிலே வாழ்ந்து வந்த ஏழை எளியவர்கள் போன்றோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஓரளவு தன்னிறைவாகவே வாழ்ந்தவர்கள் கூட நெருக்கடியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் நாம் ஒவ்வொருவரும் நமது பங்களிப்பை தேவையுடையோர்களுக்கு நிறைவாக செய்வதற்கு முன் வர வேண்டும். ஊர் மட்டங்களில் தேவையுள்ள மக்களுக்கு பலர் நிவாரண உதவிகளை வழங்குகின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு தேவையான எல்லா வசதிகளையும் ஏற்பாடு செய்து கொடுத்திடுவானாக.!

இச்சந்தர்ப்பத்தில் பார்வையாளர்களாக இராது முன்னெடுக்கப்படுகின்ற அனைத்து பணிகளிலும் நாமும் பங்காளர்களாக மாற வேண்டும். ஆண், பெண், இளைஞர், வயதானவர், வசதி படைத்தவர், வசதி குறைந்தவர் என்ற வேறுபாடில்லாமல் இஸ்லாமிய வழிகாட்டல்களின்படி அனைவரும் முடியுமான பங்களிப்புகளை நல்க வேண்டும்.

தர்மம் தலைகாக்கும் என்பார்கள். ஒருவர் தர்மம் செய்கின்ற அளவுக்கு, பிறரின் துயர் துடைக்கும் அளவுக்கு அவர் எதிர்நோக்கும் ஆபத்துக்களும் நீங்கும். அத்தோடு அசாதாரண சூழ்நிலைகளில் அதிகமதிகம் தானதர்மங்கள் செய்வதும், நற்பணிகளில் ஈடுபடுவதும் கூட அல்லாஹ்வின் அருளையும் கருணையையும் பெற்றுக்கொள்ளவும் வழிவகுக்கும்.

இஸ்லாத்தில் திருமணம்

திருமணம் என்பது உலக வாழ்க்கையில் இன்பம் பெறவும், தவறுகள் செய்யாமல் இருக்கவும், வாரிசுகளை உருவாக்கவும் இறைவன் செய்த ஏற்பாடாகும்.

இரு மனங்கள் இணைவதே திருமணம். ஒவ்வொருவரையும் ஒழுக்கக்கேட்டில் இருந்து பாதுகாக்கும் கேடயமாக திருமணம் திகழ்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உருவாகும் அன்பையும் பாசத்தையும் அதிகரிக்கவும், வலுப்படுத்தவும் ஏற்ற வழி திருமணத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

இது குறித்து அல்லாஹ்தஆலா தன் அருள்மறையில் 'நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுவதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களில் இருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும், உங்களிடையே அன்பையும் கிருபையையும் உண்டாக்கி இருப்பதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்திக்கக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன' (அல் குர்ஆன் 30:21) என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

இதேவேளை நபி(ஸல்) அவர்கள், 'இளைஞர்களே! உங்களில் திருமணத்தின் பொறுப்பைச் சுமக்கும் சக்தி படைத்தவர் மணம் புரிந்து கொள்ளட்டும். ஏனெனில் திருமணம் பார்வையைத் தாழ்த்துகிறது. வெட்கத்தலத்தைப் பாதுகாக்கின்றது' என்று கூறினார்கள்.திருமணம் என்பது உலக வாழ்க்கையில் இன்பம் பெறவும், தவறுகள் செய்யாமல் இருக்கவும், வாரிசுகளை உருவாக்கவும் இறைவன் செய்த ஏற்பாடாகும். இதனால்தான் நபி (ஸல்) அவர்கள், 'திருமணம் எனது வழிமுறை. இதைப் புறக்கணிப்போர் என்னைச் சார்ந்தவர் அல்லர்' என்றார்கள்.

'நான்கு விஷயங்களுக்காக ஒரு பெண் மணமுடிக்கப்படுகிறாள். அவளது செல்வத்திற்காக, அவளது குலச்சிறப்புக்காக, அவளது அழகுக்காக, அவளது மார்க்கப்பற்றுக்காக. நீங்கள் மார்க்கப்பற்றுள்ள பெண்களையே மணந்து கொள்ளுங்கள். உங்களுக்கு நலம் உண்டாகட்டும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

மார்க்கப்பற்றுள்ள பெண்களிடம் இறையச்சம், அன்பு, நற்பண்பு, நாணம் ஆகிய குணங்கள் குடிகொண்டிருக்கும் என்பது நபிகளாரின் நம்பிக்கையாகும்.திருமணத்திற்கு முன்பே மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்த்து திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதையும் நபி(ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

நபித்தோழரான முகீரா (ரழி) அவர்கள் 'நான் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ள இருந்தேன். அப்போது நபி (ஸல்) அவர்கள், என்னிடம், 'அந்தப் பெண்ணைப் பார்த்துக் கொள்ளும். ஏனெனில் அது உங்கள் இருவரிடையே நட்பையும் இணக்கத்தையும் ஏற்படுத்தக் கூடும்' என்று கூறியதாகக் குறிப்பிட்டுள்ளாரகள். (ஆதாரம்: திர்மிதீ, நஸாயீ).இஸ்லாமியத் திருமணம் என்பது ஆண்பெண் ஆகிய இருவருக்கு இடையே செய்யப்படும் ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகும். இதைத்தான் அல் குர்ஆனில், 'சந்தேகமின்றி நீங்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து இன்பம் துய்த்திருக்கின்றீர்களே. மேலும் அந்த மனைவியர் உங்களிடம் இருந்து உறுதியான ஒப்பந்தத்தைப் பெற்றிருக்கிறார்களே' (4:21) என்று அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

அதேநேரம் திருமணத்தை வெளிப்படையாகவும் எளிமையாகவும் நடத்த வேண்டும். இது தொடர்பில் நபி(ஸல்) அவர்கள் "திருமணத்தைப் பலர் அறிய வெளிப்படையாகச் செய்யுங்கள். மேலும் அதைப் பள்ளிவாசல்களில் நடத்துங்கள்' என்றும் கூறியுள்ளார்கள். மேலும், 'குறைந்த செலவில் குறைந்த சிரமங்களுடன் செய்யப்படும் திருமணமே சிறந்ததாகும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். திரு மணத்தின் போது பெண் வீட்டாருக்கு எந்தவிதத்திலும் சிரமத்தைக் கொடுக்கக் கூடாது. இதற்காக திருமண

அப்துல்லாஹ்...

விருந்தை மணமகனே ஏற்க வேண்டும். இதுவே 'வலிமா' எனப்படுகின்றது.

'எந்த வலிமாவில் செல்வந்தர்கள் மட்டும் அழைக்கப்பட்டு, ஏழை எளியவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்களோ, அந்த வலிமாவின் உணவே மிக மோசமான உணவாகும். எவர் வலிமா விருந்திற்கான அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர், அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் மாறு செய்தவராவார்' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் மணம் புரிந்து கொண்ட ஆணும், பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் பரஸ்பரம் அன்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டும்.

கணவன்மனைவி எப்படி இருக்க வேண்டும் என்பதை அருள்மறை அழகிய உவமை மூலம் எடுத்துக் கூறுகிறது. 'அவர்கள் (பெண்கள்) உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் (ஆண்கள்) அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்' (அல் குர்ஆன் 2:187). இந்த வசனத்தில் பல பொருட்கள் பொதிந்துள்ளன. ஆடை, மனிதனுக்கு அழகைக் கொடுக்கிறது. ஆடை, மனிதனின் மானத்தைப் பாதுகாக்கிறது. ஆடை மனிதனுக்கு மரியாதையை அளிக்கிறது. அதனால்தான் அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள் என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கின்றது. நபி (ஸல்) அவர்களும், 'பெண்களிடம் நீங்கள் நல்ல விதமாக நடந்து கொள்ளுங்கள். ஒரு பெண், விலா எலும்பில் இருந்தே படைக்கப்பட்டுள்ளாள். விலா எலும்பில் மிகவும் கோணலானது. அதன் மேற்புறத்தில் உள்ளதுதான். அதை நிமிர்த்த நாடினால் அதை உடைத்திடுவாய். அதை விட்டு விட்டால் கோணலாகவே இருக்கும். எனவே பெண்களிடம் நீங்கள் நல்ல விதமாக நடந்து கொள்ளுங்கள்' என்றார்கள். (ஆதாரம்: புகாரி)

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், 'உங்களில் அழகிய குணமிக்கவர்தான் இறைவிசுவாசிகளில் நம்பிக்கையால் முழுமை பெற்றவர். உங்களில் சிறந்தவர், மனைவியிடம் சிறப்பாக நடந்து கொள்பவரே' என்றார்கள். (ஆதாரம்: திர்மீதி)

மற்றொரு தடவை, 'உலகம் சுகமளிக்கும் ஒன்றாகும். இந்த சுகப்பொருட்களில் சிறந்தது நல்ல மனைவியே ஆவாள்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

ஆகவே திருமணத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் மாத்திரமல்லாமல் அதன் அவசியத்தையும் இஸ்லாம் தெளிவாகவே எடுத்துக்கூறியுள்ளது. அதனால் இஸ்லாத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப திருமணத்தையும் அதன் ஊடான வாழ்வையும் அமைத்துக் கொள்ள வேண்டும். இது அல்லாஹ்வின் அன்பையும் கருணையையும் பெற்றுத்தரும் செயற்பாடாக அமையும்.

தரமானவற்றை செலவிடுவதன் சிறப்பு

சமூகத்தின் நலன்களைக் கருத்திற் கொண்டும் இஸ்லாமிய தஃவாவின் மேம்பாட்டுக்காகவும் செலவழித்தல் என்ற கருத்தில் 'பிர்ரு" என்ற பிரயோகத்தை அல் குர்ஆன் பயன்படுத்தியுள்ளது.

'நீங்கள் விரும்புகின்றவற்றிலிருந்து செலவழிக்கும் வரை 'பிர்ரை' அடைந்து கொள்ளமாட்டீர்கள்" (அல்குர்ஆன் 03 : 92)

இவ்வசனம் இறங்கியதைத் தொடர்ந்து இடம்பெற்ற ஒரு நிகழ்வையும் இணைத்து நோக்கும் போது 'பிர்ரு" என்பதின் பொருளை மிகவும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இந்த வசனம் இறங்கிய போது அபூ தல்ஹா (ரழி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! என்னிடமுள்ள எனக்கு மிக விருப்பமான சொத்து 'பைரஹா' என்ற தோப்பாகும். அதனை அல்லாஹ்வுக்காக ஸதகா செய்கிறேன். அதனூடாக அவனிடத்தில் பிர்ரையும் சேமிப்பையும் ஆசிக்கிறேன். அதனால் நீங்கள் அதனை அல்லாஹ் உங்களுக்கு காண்பித்த ஒன்றுக்காக செலவழியுங்கள் என்று கூறிய போது, நபி (ஸல்) அவர்கள் அது ஒரு நல்ல விடயம், அது இலாபமடைந்த சொத்து' என்று கூறினார்கள். இந்த செய்தியை அறிவிக்கும் அனஸ் (ரழி) அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அபூ தல்ஹா (ரழி) அவர்களுக்கு குடும்பத்துக்கு அதனை பகிர்ந்தளிக்குமாறு கூறியதாகவும், அதனை அபூ தல்ஹா (ரழி) அவர்கள் அவ்வாறே செய்ததாகவும் அறிவித்துள்ளார்கள். (ஆதாரம்: புகாரி)

மேற்குறித்த அல்குர்ஆன் வசனமும், அதனோடு தொடர்பான சம்பவமும் சமூக நலனை கருத்திற் கொண்டு தம்மிடமுள்ள தரமானதும் தமக்கு மிகவும் விருப்பத்திற்குரியதுமானவற்றை செலவழித்து 'பிர்ரு" எனப்படும் உயர்ந்த தரத்தையும் சுவனத்தையும் அடைந்து கொள்ளுமாறு எடுத்துரைக்கின்றது.

இந்த நிலையில் 'பிர்ரு" என்பதன் கருத்தை விளக்கும் நவீன தப்ஸீர் ஆசிரியர்கள் மிகவும் சிறந்த தரம் வாய்ந்த செல்வத்தை வழங்கி, அதனை விடச் சிறந்த தரமானதொன்றை அல்லாஹ்விடத்தில் எதிர்பார்ப்பதாகும் என்றார்கள்.

அந்த வகையில் பரோபகாரம், தாராளத் தன்மை பண்புகளை வளர்த்து சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அல்லாஹ்வுக்காக செயற்படும் உயரிய மனிதர்களை 'அப்ரார்' என அல்குர்ஆன் அடையாளப்படுத்துகின்றது.

ஆகவே அப்ரார் மறுமையில் நிரந்தர வெற்றிக்குரியவர்களாக இருப்பர் என்பதோடல்லாமல் அவர்களது பொதுப் பணிகள் அவர்களது மரணத்திற்குப் பின்னரும் பயன்படக் கூடியவைகளாக மாறிவிடுகின்றன. உலகில் அவர்கள் மேற்கொள்ளும் பயன்கொடுக்கும் பணிகளால் அவர்கள் மரணித்த பின்பும் நினைவு கூரப்படத்தக்கவர்களாக மாறி விடுகிறார்கள். அவர்கள் மரணித்தும் வாழும் உயர்ந்த பாக்கியசாலிகளாக அடையாளப்படுத்தப்படுவர். சமூகத்துக்காக சிந்தித்து உயரிய பணிகளை ஆற்றும் அப்ரார்களது இறுதி ஆசையாக தாங்கள் அப்ரார்களாக, அல்லாஹ்விடத்தில் இனங்காணப்பட்ட நிலையில் மரணிக்க வேண்டும் என்று பிரார்த்திப்பார்கள் என்பதாக ஸுறா ஆல இம்றான் குறிப்பிடுகின்றது.

ஆகவே சிறந்தவைகளையும் தரமானவைகளையும் செலவிட்டு பிர்ரு, அப்ரார் என்ற உயர்நிலைகளை அடைந்துகொள்வோம்.

ஏ.எம். முஹம்மத் ஸப்வான்
சீனன்கோட்டை, பேருவளை

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2021 நவம்பர் 26 வெள்ளிக் கிழமை

வான்கதவுகள் திறக்கப்பட்ட பகுதியில் மக்களை அவதானமாக இருக்குமாறு அதிகாரிகள் அவசர கோரிக்கை

மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர்

(வவுனியா விஷேட நிருபர்)

பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரிப்பதால், அதன் நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால், இப்பகுதியிலுள்ள மக்களை தொடர்ந்தும் அவதானமாக இருக்குமாறு மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் கே.இமாசலன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது,

வவுனியாவில் கடந்த சில நாட்களாக தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருவகிறது. இதனால், பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து, வான் பாய்வதுடன் பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர் மட்டமானது அதன் கொள்ளளவான 19.4 அடியை அடைந்துள்ளதால், இரு வான்கதவுகள் ஒரு அடிக்கும், இரு வான் கதவுகள் 9 அங்குலத்திற்குமாக திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்வதால், மேலும் வான் கதவுகளை திறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், ஈரப்பெரியகுளத்தின் நீர்மட்டமும் 13 அடியாக உயர்வடைந்துள்ளது. தொடர்ந்தும் மழை பெய்தால் அக்குளமும் வான் பாயும் நிலை ஏற்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று வியாழக்கிழமை மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். பல்கலை வளாகத்தினுள் இந்நிகழ்வு இடம்பெற்றது. மாணவர்கள் அனைவரும் முழந்தாளிட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (படம்: யாழ். விஷேட நிருபர்)

வவுனியாவில் வீதிச்சமிக்ஞைகள் தெளிவில்லாதமையால் இடையூறு

(ஓமந்தை விஷேட நிருபர்)

வவுனியா ஹொறவப்பொத்தானை வீதியிலிருந்து பஜார் வீதிக்கு செல்லும் பிரதான சந்தியில், உள்ள வீதிச்சமிக்ஞைகள் தெளிவின்றியுள்ளதால் சாரதிகள் பெரும் அசௌகரியத்திற்குட்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வழி போக்குவரத்துக்கு அவ்வீதி அனுமதியளிக்கப்பட்டுள்ள போதிலும், மோட்டார் சைக்கிள்கள் அனுமதிக்கப்பட்டு

ஏனைய வாகனங்களுக்கு தடை விதிக்கப்பட்டு சமிக்ஞைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவை, தெளிவின்றியுள்ளதால், அங்கு கடைமையிலுள்ள போக்குவரத்து பொலிஸார் அவ்வீதிக்கு செல்லும் வாகன சாரதிகளுக்கு தண்டம் அறவிட்டு வருகின்றனர்.

எனவே தெளிவான முறையில் வீதி சமிக்ஞைகளை காட்சிப்படுத்துமாறு சாரதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மன்னார் நகர சபை பட்ஜட் ஏகமனதாக நிறைவேறியது

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் நகர சபையின் (2022) ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேறியது. மன்னார் நகர சபையின் அமர்வு, கடந்த (23) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் தலைவர் ஞா.அன்ரணி டேவிட்சன் தலைமையில் இடம் பெற்றது.இதன்போது சபையின் உப தலைவர் உட்பட சகலரும் வாக்களித்தனர்.

மன்னார் நகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் வெற்றி பெற, ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்த நகர சபை தலைவர், மன்னார் மாவட்டத்தை நல்ல அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்ல அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வீதி விபத்தில் இளம்பெண் காயம்

அவசர சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதி

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

கரணவாய் தெற்கு மண்டான் வீதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியும், மோட்டார் சைக்கிளும் மோதியதில், இளம்பெண் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளானார். பின்னர் இவர், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை (25) முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றது. இவ்விபத்தில், வாதரவத்தை பகுதியைச் சேர்ந்த எஸ்.சிவகலா (வயது 30) என்பரே படுகாயங்களுக்கு உள்ளானோர். உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக

யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் டெங்கு தீவிரம் மூன்று வாரங்களில் 21 பேருக்கு தொற்று

(யாழ். விஷேட நிருபர்)

யாழ். மாவட்டத்தில் மூன்று வாரங்களில் மட்டும் சுமார் 21 பேர், டெங்கு தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை யளிக்கப்பட்டு வருவதாகவும் வைத்தியர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், வேலணை, தெல்லிப்பழை, பளை போன்ற பிரதேசங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனவே, மழையுடனான காலநிலை நிலவும் இன்றைய நாட்களில், டெங்கு பரவாமல் இருப்பதற்கு சூழலை சுத்தமாக வைத்திருக்கு

மாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நுளம்பு பெருகும் இடங்களை அழித்தும், வீதிகளில் கழிவுகளை வீசுவதை நிறுத்தியும் டெங்கு தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாவீரர் நாள் தடை உத்தரவுகளை நீக்க கோரி முல்லை நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம்

(நமது நிருபர்)

மாவீரர் நாளை நடத்துவதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவுகளை நீக்குமாறு, நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த (17) மற்றும் (23) ஆம் திகதிகளில் அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட 69 பேருக்கு இந்த தடை உத்தரவுகள் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்தன.முல்லைத்தீவு,முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி ஐயன்குளம், புதுக்குடியிருப்பு ஆகிய ஏழு பொலிஸ் நிலையங்களால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு அமைவாக இந்த 69 பேருக்கும் தடை உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்கான தடை உத்தரவை நீக்கக்கோரிய நகர்த்தல் பத்திரம் ஊடான வழக்கு விசாரணைகள், தற்போது முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது.

வவுனியாவில் தொடர் மழை, பல குடும்பங்கள் பாதிப்பு, வான்கதவுகளும் திறப்பு

(வவுனியா விஷேட நிருபர்)

வவுனியாவில் பெய்து வரும் மழையால், ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்த 38 பேர் பாதிப்படைந்துள்ளதாக, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த மூன்று தினங்களாக கடும் மழை பெய்து வருகின்றது.இதனால், குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து பல குளங்கள் வான் பாய்கின்றன. இதையடுத்து தாழ் நிலப்பகுதிகளை நோக்கி, வெள்ள நீர் செல்வதால் அப்பகுதிகள் முழ்கும் அபயாம் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கல்குண்ணாமடு கிராமத்தில் வெள்ள நீர் காரணமாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பேர் பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன், செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நேரியகுளம் கிராம அலுவலர் பிரிலில் உள்ள இலுப்பைக்குளம் வான் பாய்வதால், எட்டு குடும்பங்களைச் சேர்ந்த 35 பேர் பதிப்படைந்துள்ளனர். இப்பகுதியின் போக்குவரத்து பாதைகளும் வெள்ள நீரில் முழ்கியுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகள் பிரதேச செயலகங்கள் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மக்களது இயல்பு

வாழ்க்கை பாதிப்படைந்துள்ளதுடன், பாடசாலைகளில் மாணவர்களின் வருகையும் குறைவடைந்துள்ளது.

ஐ.நா. அதிகாரிகள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபருடன் பேச்சு

(யாழ். விஷேட நிருபர்)

ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்தின், இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அப்துர் ராஹிம் சிட்டுஹி மற்றும் அவரின் அதிகாரிகள் ஆகியோர், யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனை சந்தித்து கலந்துரையாடினர்.

யாழ். மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்த இவர்கள், மரியாதை நிமித்தமாக இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். இச்சந்திப்பில், உலக உணவுத்திட்டத்தால் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

உணவுப் பாதுகாப்பு, போஷோக்கு குறைபாடு, பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத் திட்டம் மற்றும் ஜீவனோபாயத்திட்டங்கள் என்பவை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்கால திட்டங்கள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இளைஞனின் சடலம் மீட்பு

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

பருத்தித்துறை முதலாம் கட்டை சந்திப் பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றில், தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று வியாழக்கிழமை (25) அதிகாலை 2.00 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் தும்பளை மேற்கு பருத்தித்துறையைச்சேர்ந்த சண்முகராஜா துஷ்யந்தன் (வயது 21) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா, விசாரணைகளை மேற்கொண்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இயக்கங்கள், சின்னங்களை நினைவுகூராது உறவுகளை மாத்திரம் நினைவுகூர அனுமதி

மாங்குளம் குறூப் நிருபர்

இறந்தவர்களுக்கு பொதுவான நினைவுகூரல்களை மேற்கொள்ள முடியும் என்றும், எவராக இருப்பினும் இறந்தோரை நினைவு கூர்வது மானிடப்பண்பு எனவும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா கட்டளை பிறப்பித்துள்ளார்.

மாவீரர் நாள் நினைவுகளுக்கு தடைவிதித்த உத்தரவுகளை நீக்கக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரம் மீதான விசாரணையின் போதே,நேற்று இந்த கட்டளை பிறப்பிக்கப்பட்டது.இந்த விசாரணையில், இறந்தவர்களை நினைவு கூருவதற்கு எந்த தடையும் இல்லை என்பதாக, திருத்தியமை த்து கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு கடந்த 17ஆம் திகதி மற்றும் 23 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட எழுபத்திரண்டு பேருக்கு தடை உத்தரவுகள் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வுகளுக்கான தடை உத்தரவுகளை நீக்கக்கோரி, நகர்த்தல் பத்திரம் ஊடாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதன் விசாரணைகள் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் இடம் பெற்றபோதே,இந்த புதிய கட்டளை வெளியானது.திருத்திய இந்த கட்டளையை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா வழங்கினார். இந்த கட்டளை தொடர்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

தடை செய்யப்பட்ட இயக்கத்தினுடைய சின்னங்கள், இலட்சினைகள் அல்லது அந்த இயக்கத்தின் நிகழ்வுகளாக, நினைவு கூரல்களை மேற்கொள்ளாமல் இறந்தவர்களுக்கு பொதுவான நினைவு கூரல்களை மேற்கொள்ள முடியும். இறந்தவர்கள் அவர் யாராக இருந்தாலும் அவரை நினைவு கூர்வது மானிடப்பண்பு என்று குறிப்பிட்டு புதிய கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளமை பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல ளிப்பதாக தெரிவித்தார்.

யாழ். முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்திருக்கும் பிரசவ விடுதிக்கு தேவையான சில மருத்துவ உபகரணங்களை யாழ். முஸ்லிம் ஒன்றியம் கையளித்துள்ளது. நல்லூரில் அமைந்திருக்கும் மருத்துவ அதிகாரி காரியாலயத்தில், இந்த உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

தினகரன் THINAKARAN
SLBC Sri Lanka Broadcasting Corporation
இணைந்த கல்விச் சேவை 27.11.2021

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்

திருமதி சாந்தினி செல்வதாஸ்
(Primary Trained, BEd.)
பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி,
கொழும்பு – 04

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி -1

நேரம் : 1 மணித்தியாலம்

1ம் , 2ம் வினாக்களுக்கு முதலில் தரப்பட்டுள்ள உருவோடு தொடர்புடைய பொருத்தமான உருவைத் தெரிவு செய்து கோடிடுக.

1. .

i ii iii

2. .



i ii iii

3ம் , 4ம் வினாக்களுக்கு தரப்படும் விடயங்களுடன் தொடர்புடைய படத்தினை தெரிவு செய்க.

3. முக்கனிகளுள் ஒன்று
குறிப்பிட்ட காலத்தில் மட்டும் பயன் தரும்.
பல இனங்களில் காணப்படும்.

i ii iii

4. நீண்ட தூரம் பயணிக்கும்.
அதிகமான பொருட்களை கொண்டு செல்லும்.
விசேட தரிப்பிடம் மட்டுமே உண்டு.

i ii iii

5. நான்கு மாணவர்கள் புத்தகம் ஒன்றினை வாசித்து முடித்த ஒழுங்கை கடிகாரம் காட்டுகின்றது.

கபிலாஷ் கௌசிக் சாருசா சகானா

வாசித்து முடித்த ஒழுங்கை சரியாகக் காட்டும் விடை யாது?

i. சகானா , கபிலாஷ் , சாருசா , கௌசிக்
ii. கபிலாஷ் , சாருசா , சகானா , கௌசிக்
iii. கௌசிக் , சாருசா , கபிலாஷ் , சகானா

6. மேசன் , தச்சன் , குயவன் , கொடையாளி இவற்றுள் பொருந்தாத சொல்?
i. தச்சன் ii. கொடையாளி iii. குயவன்

7. மழை பெய்தால் சூழல் குளிர்ச்சியடையும் , மழை பெய்யவில்லை எனவே,
i. சூழல் வெப்பமடையும்.
ii. சூழல் வெப்பம் மாற்றமடையாது.
iii. சூழல் குளிர்வடையும்.

8. ஒருவர் பயணம் ஒன்றின் போது வடக்கு , வடகிழக்கு , தெற்கு , கிழக்கு ஆகிய திசைகளுக்கு சென்று பயணத்தை முடித்தார் எனின், அவர் சென்ற திசைகளைக் காட்டும் வரைபடம் யாது?



i ii iii

9. உயர்திணை , பலர்பால் பெயர்ச் சொல்லாக அமையும் படத்தினை தெரிவு செய்க.

i ii iii

10. இவ் உருவவில் செங்கோணமா ? செங்கோணத்தை விட குறைந்த கோணங்களின் எண்ணிக்கையா , அதிகமாக உள்ளது?



i. செங்கோணம்
ii. செங்கோணத்தை விட குறைந்தது
iii. இரண்டும் சமனானவை

11. A பாத்திரத்தினால் 4 தடவையும் , B பாத்திரத்தினால் 3 தடவையும் அளந்து பெரிய பாத்திரத்தினுள் விடப்பட்டது எனின் , பெரிய பாத்திரத்தினுள் உள்ள நீரின் அளவு யாது?



i. 10 l 600 ml
ii. 16 l
iii. 16 l 500 ml

தாயக்கட்டை ஒன்றின் நிலைகளை அவதானித்து விடையைத் தெரிவு செய்க.



12. நான்காவது நிலையில் தாயக்கட்டையின் தோற்றம் எது?



i ii iii

13. 5 இன் எதிர்ப்பக்கம் காணப்படும் இலக்கம் யாது?

i. 3 ii. 1 iii. 4

14. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட வாக்கியத்தை தெரிவு செய்க?

i. செயளாலர் நன்றியுரையை வாசித்தார்.
ii. செயலாளர் நன்றியுறையை வாசித்தார்.
iii. செயலாளர் நன்றியுரையை வாசித்தார்.

15. எண்கள் இடப்பட்ட கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.



i. 9 ii. 4 iii. 13

16. ஓர் ஆடியில் (கண்ணாடி) விம்பமாகக் காட்சி தருகையில் அதே மாதிரித் தெரியும் உருத் தொகுதி எது?



i ii iii

பின்வரும் கவிதையைக் கொண்டு 17ம் , 18ம் வினாக்களுக்கு விடை தருக.

உண்மை வழியில் நடந்தால் - தம்பி
உயர்ந்த வாழ்வை அடையலாம்
பண்பின் குன்றாய் விளங்கினால் - தம்பி
பாரும் வாழ்த்தக் காணலாம்

17. உண்மை வழியில் நடக்கும் போது நாம் அடைவது?

i. உலகத்தின் வாழ்த்துக்கள்
ii. உயர்ந்த வாழ்வு
iii. அழியாத புகழ்

18. இக் கவிதையில் 'பாரும் வாழ்த்தக் காணலாம்' என்பதன் பொருள் யாது?

i. பார்ப்பவர்கள் புகழுவர்
ii. உலகில் உள்ளவர்கள் வாழ்த்துவர்
iii. மலையில் உள்ளவர் வாழ்த்துவர்

19. வகுப்பொன்றில் 40 மாணவர்களில் 20 மாணவர்கள் செல்லப் பிராணியாக நாய் வளர்க்கின்றனர் , 30 பேர் பூனையை வளர்க்கின்றனர். அனைவரும் நாயையோ, பூனையையோ வளர்க்கின்றனர். இரு பிராணிகளை வளர்க்கும் மாணவர்களும் உள்ளனர். எனின் பூனையை மட்டும் வளர்போர் ?

i. 10 ii. 18 iii. 20

20. 1 , 2 , 3 , 4 , 5 ஆகிய இலக்கங்களுக்கு A , B , C , D , E என்னும் எழுத்துக்கள் முறையே பயன்படுத்தப்பட்டுள்ள அதற்கேற்ப இடைவெளிக்கு வரவேண்டிய எழுத்துக்கள்.

A D B C
\+ [ ]
D E C E

i. C A A B
ii. C A A E
iii. C D E A

21. கிராமத்தில் ஏற்படுகின்ற சிறிய பிணக்குகளை தீர்த்து வைப்பவராக கிராம உத்தியோகத்தர் விளங்குகின்றார், இதற்குரிய காரணம் ?

i. கிராம மக்களால் இவர் தெரிவு செய்யப்பட்டமையால்.
ii. இவர் இலவசமாக சேவை செய்வதால்.
iii. கிராமத்திற்கு பொறுப்பான அரச அதிகாரியாக இவர் இருப்பதால்.

22. ஒரு வரிசையில் நண்பர்கள் அனைவரும் சம இடைவெளியில் நிற்கின்றனர். A இற்கும் D இற்கும் இடையில் 5 பேர் நிற்கின்றனர். D இற்கும் F இற்கும் சரி நடுவில் E நிற்கிறார் எனின், அங்கு நின்ற நண்பர்கள் எத்தனை பேர்?

i. 14 ii. 8 iii. 13

(14ஆம் பக்கம் பார்க்க)

தினகரன் THINAKARAN தினகரன்

SLBC Sri Lanka Broadcasting Corporation

இணைந்த கல்விச் சேவை

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்

திருமதி சாந்தினி செல்வதாஸ்
(Primary Trained, BEd .)
பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி,
கொழும்பு – 04

(13ஆம் பக்கத் தொடர்)

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி -1

நேரம் : 1 மணித்தியாலம்

23. இக் கட்டத்தினுள் காணப்படும் இலக்கங்களின் ஒற்றையெண் கொண்ட தொகுதியாக அமைவது?

171	177
175	178
176	174

i. 176 , 171 , 175
ii. 171 , 175 , 179
iii. 171 , 177 , 175

24. இரண்டு தொப்பிகளும் , இரண்டு பந்துகளும் வாங்கத் தேவையான பணம் யாது?

i. ரூபாய் 140.00 ii. ரூபாய் 160.00 iii. ரூபாய் 180.00

25. இரண்டு அடி மட்டங்களின் விலை யாது?

i. ரூபாய் 60.00 ii. ரூபாய் 30.00 iii. ரூபாய் 40.00

26. வீதி ஒன்றின் ஒவ்வொரு மூன்று மீற்றருக்கும் கொடி **நாட்டப்பட்டுள்ளது.** அதன்படி முதலாவது கொடியில் இருந்து எட்டாவது கொடிக்கு உள்ள தூரம் யாது?

i. 21 m ii. 24 m iii. 18 m

பெட்டியொன்றிலுள்ள மஞ்சள் , நீலம் , ஊதா நிறப்பந்துகளின் எண்ணிக்கை வட்ட வரைப்பொன்றில் காட்டப்பட்டுள்ளது. பெட்டியில் நீல நிறப் பந்துகளை விட ஊதா நிறப்பந்துகள் 40 அதிகமாக காணப்படுகின்றன. எனின்,



27. `மஞ்சள் நிறப் பந்துகளின் எண்ணிக்கை யாது?

i. 10 ii. 20 iii. 30

28. பெட்டியில் உள்ள பந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது?

i. 80 ii. 60 iii. 40

பிள்ளையொன்றினால் மூன்று வாரத்தில் சேகரிக்கப்பட்ட முத்திரைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. 29ம் , 30ம் வினாக்களுக்கு விடை தெரிவு செய்க.

வாரம்	சேகரித்த முத்திரைகளின் எண்ணிக்கை
1ம் வாரம்	2ம் வாரத்தைப் போல் 2 மடங்கு
2ம் வாரம்	24
3ம் வாரம்	1ம் வாரம் சேகரித்ததின் 3/4 பங்கு

29. மூன்று வாரங்களிலும் சேகரிக்கப்பட்ட முத்திரைகளின் எண்ணிக்கை யாது?

i. 88 ii. 108 iii. 72

30. 3ம் வாரம் சேகரித்த முத்திரைகள் எத்தனை?

i. 24 ii. 48 iii. 36

வித்தியாசமான சொற்சோடிகளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க

31. .

i. கடல் – வானம் ii. பறவை – விமானம் iii. நிலம் – கப்பல்

32. .

i. நேரம் – மணித்தியாலம் ii. நிறை - அளவு சாடி iii. நீளம் – மீற்றர்

33. இங்கு காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை யாது?

i. 12
ii. 11
iii. 10

34. 3/4 பங்கு நிழற்றப்பட்டுள்ள பகுதியை தெரிவு செய்க?



i. . ii. iii.

35. கோபியின் உண்டியலில் 10 பத்து ரூபாய் நாணயங்களும் பத்து ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கையின் இருமடங்கு ஐந்து ரூபாய் நாணயங்களும், இரு நாணயங்களின் மொத்தப் பெறுமதியின் அரைவாசி இரண்டு ரூபாய் நாணயங்களின் பெறுமதியாகவும் இருந்தது எனின், உண்டியலில் இருந்த இரண்டு ரூபாய் நாணயங்கள் எத்தனை?

i. 150 ii. 100 iii. 50

36. அட்டவணையில் சொற்கள் ஏதோ ஒரு கோலத்திற்கேற்ப அமைந்துள்ளன. அதன்படி வெற்றிடத்துக்கு வரவேண்டிய பொருத்தமான சொல்?

கப்பல்	.....
விமானம்	கடல்
பேரூந்து	வானம்

i. சக்கரம்
ii. தரை
iii. தண்டவாளம்

37. பாடலின் இடைவெளிக்கு பொருத்தமான அடிகள்?

வளர்ந்து பின்னர் நீயுமே

.....

தளர்ந்திடாமல் உழைத்திடு

தக்க வாழ்வு கிடைத்திடும்

i. சோம்பல் மிகுந்த வாழ்க்கையில்
ii. உழைத்தது நீயும் உயர்வாய்
iii. வாலிபத்தை அடைந்ததும்

38. உயிர் மெய் எழுத்துக்களின் மீது புள்ளடி இடுக?

ப	மீ	ட்
டி	கோ	கொ
பூ	சி	இ

39. இவ் எழுத்துக்களில் வந்துள்ள உயிர்க்குறிகளின் எண்ணிக்கை?

i. 5 ii. 6 iii. 7

40. மைதானத்தில் நின்ற விளையாட்டு வீரர்கள் ஒருவருக்கு ஒருவர் தங்களுக்குள் கைகுலுக்கிக் கொண்டனர். அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்கள் 36 எனின் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?

i. 8 ii. 9 iii. 36

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-2

1. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதிலிருந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

வெள்ளைப்பூக்கள் பூத்துக் குலுங்க குடைபோல் வளர்ந்து, உயர்ந்து நின்றது அந்த மரம். எண்ணற்ற பறவைகளும், பிராணிகளும் அதில் தங்கி இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தன. அம்மரத்தின் கீழே சில மனிதர்களும் கை, கால்களை நீட்டி இதமான காற்றை அனுபவித்தபடி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.

1) மரத்தில் தங்கியிருந்தவை எவை? .....

2) பந்தியில் வந்துள்ள சினைப் பெயர் ஒன்றை எழுதுக?.....

3) இங்கு உவமையாக கையாளப்பட்ட பொருள் எது? .....

4) ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவர்கள் யார்? .....

5) முதலாம் வாக்கியத்தில் வந்துள்ள பெயரடைமொழி யாது? .....

6) துன்பத்தை என்பதற்கு பொருத்தமான எதிர்ப்பதம்? .....

7) "எண்ணற்ற" என்பதன் பொருள் யாது? .....
.....

2. பின்வரும் மரபுப் பெயர்களுக்குப் பொருத்தமான உயிரினத்தை எழுதுக.

8) கடுவன், கத்தும், குட்டி - .....
9) ஓலை, கன்று, குலை - .....

3. ஒழுங்கு படுத்தி வசனமாக்குக.

10) ஒரு / ஆமையும் / கொக்கும் / ஓர் / வந்தன / வாழ்ந்து / குளத்தில்
.....

11) எப்போதும் / வேண்டும் / சொற்களை / நாம் / சரியாக / உச்சரிக்க
.....

4. பொருத்தமற்ற சொல்லின் கீழ் கோடிடுக.

12) [மான் / மான்கள்] கூட்டம் ஓடி ஒளிந்து.

13) [தண்ணீர் / தண்ணி] தாகம் தீர்க்கும் பானம் ஆகும்.

14) [பறவை / பறவைகள்] இரை தேடிப் பறந்தது.

(15ஆம் பக்கம் பார்க்க)

தினகரன் THINAKARAN
SLBC Sri Lanka Broadcasting Corporation
இணைந்த கல்விச் சேவை
இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்

திருமதி சாந்தினி செல்வதாஸ்
(Primary Trained, BEd.)
பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி,
கொழும்பு – 04

(14ஆம் பக்கத் தொடர்)

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-2

5. பொருத்தமான நிறுத்தக் குறியின் பெயரை எழுதுக.

15) உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது. .....

16) வாக்கியத்தின் முடிவைக் காட்டுவது. .....

6. பின்வரும் கருத்துத் தொடருக்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.

17) நகைச்சுவையாக கவிதை புனையும் ஆற்றல் படைத்தவன் .....

18) தண்டின் அல்லது அடிப்பாகத்தின் தொடர்ச்சியாக மண்ணில் நேராக இறங்கும் பெரிய வேர். .....

7. சரியான விடையினை தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

19) ஐவைந்து என்பதை பிரித்து எழுதினால்.

[ஐ + ஐந்து / ஐந்து + ஐந்து / ஐம்பது + ஐந்து]

20) **அஃறிணை** பலவின்பாலைக் குறிக்கும் சொல்.

[மாணவர் / குதிரைகள் / கோழி]

21) வழிகாட்டுதல் என்ற கருத்தைத்தரும் உவமைத்தொடர்.

[பசுமரத்தாணிபோல் / கலங்கரை விளக்கு / அடியற்ற மரம்போல்]

8. சரியாக எழுத்துக்கூட்டி எழுதப்பட்ட சொல்லின் கீழ் கோடிடுக.

22) சீயாக்காய் , சிகைக்காய் , சியாக்காய்

23) ஆளுனர் , ஆளுணர் , ஆளுநர்

24) சரணாலயம் , சரனாளயம் , சரணாழயம்

25) கைநூல் , கைந்நூல் , கைனூல்

9. பின்வருவனவற்றின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

26) நான் புத்தகம் வாசிக்கின்றேன். .....

27) மரங்கொத்தி. .....

10. பின்வரும் ஆங்கில சொற்களுக்கான தமிழ் கருத்தை எழுதுக.

28) Tooth brush .....

29) Owl .....

11. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் தமிழ் கருத்தை எழுதுக.

30) கிரீடா பிட்டிய. .....

31) என்ன,இந்தகன்ன. .....

12. பின்வரும் சொற்களுக்குரிய சிங்கள கருத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

32) எப்படி சுகம்? .....

33) எனது இலக்கம் மூன்று. .....

34 தொடக்கம் 49 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை கணித்து எழுதுக.

34. 4000+000+80+0 இவ் எண்ணை சொற்களில் எழுதுக. .....
.....

35. ஒரு தோட்டத்திலிருந்து யூலை மாதத்தில் 2687 தேங்காய்களும், ஆகஸ்ட் மாதத்தில் 4578 தேங்காய்களும் பறிக்கப்பட்டன. இந்த இரண்டு மாதங்களிலும் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வித்தியாசம் யாது? .....

36. 179 பென்சில்களை ஒருவருக்கு நான்கு பென்சில்கள் வீதம் பகிரும் போது மீதியாகும் பென்சில்கள் எத்தனை?.....

37. உருவில் 0.5 பகுதியை நிழற்றிக் காட்டுக.



38. 5m நீளமான ரிபனை நான்கு தடவை வெட்டி சம அளவான துண்டுகள் எடுக்கப்பட்டன. இரு துண்டுகளின் மொத்த நீளம் யாது?.....

39. காலை நிகழ்ச்சியானது பி.ப 7.30 இற்கு ஆரம்பமாகி 4 மணித்தியாலம் 50 நிமிடங்களாக நடைபெற்றது.

i. காலை நிகழ்ச்சி முடிந்த நேரம் யாது?.....

ii. அதனை நியம நேரத்தில் தருக? .....

40. காந்தன் பாடசாலையில் இருந்து 10m தூரம் சென்று பின் வலது பக்கமாக மேற்கு நோக்கி 10m தூரம் சென்று மீண்டும் வலது பக்கம் திரும்பி 10m தூரம் சென்று நூலகத்தை அடைகின்றான். அவன் சென்ற பாதையை வரைபடமாக வரைந்து காட்டுக?

41. வரிப்படத்தில் உள்ள பென்சிலின் நீளத்தை mm இல் கணித்து எழுதுக.
.....



42. என்னிடம் 750 இனிப்புக்கள் உள்ளன. நான் நண்பனுக்கு 76 இனிப்புக்களைக் கொடுத்தேன். இப்போது என்னிடம் உள்ள இனிப்புக்கள் எத்தனை?.....

43. கூட்ட **மண்டபமொன்றில்** 7கதிரைகள் வீதம் 14 நிரைகளில் கதிரைகள் அடுக்கப்பட்டிருந்தன. இந்த கதிரைகளில் 72 பேர் அமர்ந்தனர். இங்கு வெறுமையாக இருந்த கதிரைகள் எத்தனை? .....

44.



i. இரண்டு பாத்திரங்களிலுள்ள நீரின் கனவளவு வேறுபாடு ஏவ்வளவு? .....

ii. A பாத்திரத்தின் கொள்ளளவு 9 l எனின் மேலும் விடக்கூடிய நீரின் அளவு யாது? .....

45. **கருவாடு (300g) = ரூபாய் 150.00**

சீனி (250g) = ரூபாய் 40.50

i. கருவாடு 350g , சீனி 2kg வாங்கிய ஒருவர் செலுத்த வேண்டிய பணம் யாது? .....

ii. மேற்படி பொருள்களை வாங்கிய ஒருவர் கடைக்காரருக்கு கொடுக்க வேண்டிய கிட்டிய நாள் நாணயம் யாது?.....

46. இவ் உருவில் உள்ள செங்கோணங்கள் எத்தனை?.....



47. வட்டத்தில் உள்ள எல்லா இலக்கங்களிலும், தெரிந்து ஆக்கக்கூடிய நான்கிலக்க சிறிய எண் யாது?.....



48.

i. பக்கங்கள் ஒன்றுடன் ஒன்று சேராத திண்ம வடிவம் யாது?.....

ii. பின்வரும் வலைகளில் திண்ம உரு ஒன்றை அமைக்க முடியாத வலையுரு எது? .....



49. ஒரு குவியலில் 256 பூக்கள் உள்ளன. அவற்றில் 3/4 பகுதி பூக்கள் பூமாலை கட்ட பயன்படுத்தப்பட்டது. பயன்படுத்திய பூக்கள் எத்தனை?
.....

50. பின்வரும் தலைப்பில் எழுவாய் பயனிலைகளுடன் கூடிய ஆறு சொற்களுக்கு குறையாத மூன்று வாக்கியம் எழுதுக.

மாலை நேர வயல்வெளி.

i. .....
.....

ii. .....
.....

iii. .....
.....

51 தொடக்கம் 80 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

51. சிறுநீரின் நிறம் மாறுதல், உடலில் தளர்ச்சி போன்ற அசௌகரியங்கள் ஏற்படுவதற்கு பிரதான காரணம்?

i. போதியளவு விற்றமின் c இல்லாமை.
ii. போதியளவு நீர் அருந்தாமை.
iii. போதியளவு கல்சியம் உட்கொள்ளாமை.

(16ஆம் பக்கம் பார்க்க)

தினகரன் THINAKARAN தினகரன்

SLBC Sri Lanka Broadcasting Corporation

இணைந்த கல்விச் சேவை

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

தமிழ் தேசிய சேவையில் தரம் 5 புலமைப் பரிசில்

திருமதி சாந்தினி செல்வதாஸ்
(Primary Trained, BEd .)
பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி,
கொழும்பு – 04

(15ஆம் பக்கத் தொடர்)

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி-2

52. எனது முழு உடலும் தளர்ந்துவிட்டது இக் கூற்று மனதை இதப்படுத்தும் செயற்பாட்டில்,

i. படிநிலை 1.
ii. படிநிலை 5.
iii. படிநிலை 2.

53. 120cm பேழை, பாதவட்டஅடையாளம் அடிவைத்து நடத்தல் போன்ற சொற்கள் பயன்படுத்தப்படும் விளையாட்டு,

i. நண்பனைப் பிடிப்போம்.
ii. பசுவும் புலியும்.
iii. கவனமாக செல்வோம் மகிழ்ந்து.

54. தேசிய மரபுரிமைகளாக கொள்ளப்படும் விடயங்கள் கொண்ட கூட்டம்,

i. நாட்டார் பாடல் , பம்பரகந்த , ஓவியங்கள்.
ii. ஊர்வலங்கள், சிற்பங்கள், கடைத்தொகுதிகள்.
iii. மரச்செதுக்கல்கள், குருத்தோலை, பொம்மலாட்டம்.

55. தொன்புள்ளே, வெதரானை என்ற இயற் பெயர்களால்

i. கொங்காலே கொட பண்டா.
ii. கெப்பெட்டிப்பொலதிசாவ.
iii. மஹிந்த தேரர்.

56. பால் குடித்து வளரும் பறக்கும் உயிரினம்,

i.

ii.

iii

57. ஊன் உண்ணி பிராணிகள் தொடர்பான கூட்டம்,

i. காகம், நரி, புலி
ii. தும்பி, நரி, புலி
iii. புலி, நாய், சிங்கம்

58. 'கலவத்தன்' என அழைக்கப்படும் முலையூட்டி எது?

i. மரநாய்.
ii. சுண்டெலி.
iii. கருங்குரங்கு.

59. இலங்கையின் தேசிய விளையாட்டின் போட்டி ஒன்றில் பங்கு பற்றும் வீரர்களின் எண்ணிக்கை,

i. 12.
ii. 6.
iii. 8.

60. வித்துக்களில் விரைவாக முளைக்கக் கூடிய வித்து,

i. பயறு.
ii. கடுகு.
iii. தேங்காய்.

61. செவ்வரத்தை பூ பானத்திற்கு தேசிக்காய் சாறு சேர்த்த போது பெறப்பட்ட நிறம் யாது?

i. ஊதா.
ii. சிவப்பு.
iii. மஞ்சள்.

62. நகர்ப்புறங்களில் நீர் பெறும் மூலங்களாக அமைவன,

i. நீர்த்தொட்டி, குழாய்நீர்.
ii. குழாய்நீர், குழாய்கிணறு.
iii. குளம், நீர்க்குழாய்.

63. இலங்கையில் சகல இன மக்களும் யாத்திரை செய்யும் இடம்,

i. கதிர்காமம்.
ii. சிவனொளிபாதமலை.
iii. திருகோணமலை.

64. இலங்கையில் கடற்கரை இல்லாத மாகாணங்களில் ஒன்று,

i. வடமத்திய மாகாணம்.
ii. வடக்கு மாகாணம்.
iii. கிழக்கு மாகாணம்.

65. பயிர்களுக்கு தீங்கு செய்யும் பிராணிகளை அழிக்க உதவுவது,

i. செண்பகம்.
ii. நத்தை.
iii. காகம்.

66. ஆசிரியர் கூறுபவற்றைச் சரியாகப் பின்பற்றும் மாணவர்கள்,

i.


ii.

iii

67. உப்பு, நிறச்சாயம் என்பவற்றை நீரில் கலந்து கூடாக்கிய போது ஆவியாவது,

i. உப்பு, நீர்.
ii. நீர்.
iii. எல்லாம்.

68. நீர்ப்பிசாசு பயன்படுவது,

i. பயிர் நிலங்களில்.
ii. எண்ணெய் எடுத்தலில்.
iii. கொல்லன் பட்டறையில்.

69. அசுத்த நீரைப் பருகுவதனால் ஏற்படும் நோய்,

i. நீரிழிவு.
ii. தடிமன்.
iii. செங்கண்மாரி.

70. உப்பு நீரில் தாழும் முட்டையானது,

i. நல்ல முட்டை.
ii. பழுதடைந்த முட்டை.
iii. இரண்டும்.

71. மூலிகைப் பானம் தயாரிக்கப் பயன்படும் பூ வகை,

i. அகத்தி.
ii. முருங்கை.
iii. பொன்னாவரை.

72. பாடசாலையில் உள்ள உபகரணங்கள், பண்டங்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ள உதவும் ஏடு,

i. வரவுப்பதிவேடு.
ii. பொருட்பதிவேடு.
iii. நலன் விரும்பிகள் ஏடு.

73. மழை மானி ஒன்றில் காணப்படும் அலகு யாது?

i. மில்லி லீற்றர்.
ii. மில்லி மீற்றர்.
iii. சென்ரி மீற்றர்.

74. வேலைக்காரன் கம்பு பயன்படுத்தும் தொழில்,

i. மீன்பிடித்தொழில்.
ii. உழவுத்தொழில்.
iii. இரத்தினக்கல் அகழ்வுத் தொழில்.

75. எரிகாயம் ஏற்பட்ட ஒருவருக்கு உடனடியாக செய்யவேண்டிய முதலுதவி அல்லாதது,

i. பற்பசை பூசுதல்.
ii. மஞ்சள் பூசுதல், கற்றாளை பூசுதல்.
iii. குளிர்ந்த நீரில் வைத்தல்.

76. மூலவர்ணங்களைப் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய நிறங்களின் எண்ணிக்கை,

i. 3.
ii. 5.
iii. 6.

77. இப் பாத்திரத்தில் சம இடைவெளியில் ஒரே அளவான துவாரங்கள் இடப்பட்டுள்ளன. எத்துவாரத்தின் ஊடாக நீர் பாய்ச்சும் (பீச்சப்படுகின்ற) அளவு அதிகரித்துச் செல்லும்,



i. B
ii. A
iii. C

78. இறைவழிபாட்டிற்காக வணக்கத்தலத்திற்கு செல்ல முன் நம்மை சுத்தம் செய்து, கை கால்களை கழுவிச் செல்லும் வழக்கத்தைக் கொண்ட சமயத்தவர்,

i. பௌத்தர்கள், இஸ்லாமியர்.
ii. இந்துக்கள், பௌத்தர்கள்.
iii. இஸ்லாமியர், இந்துக்கள்.

79. உலக மரபுரிமைகளை பிரகடனப்படுத்தும் அதிகாரம் பெற்ற சர்வதேச நிறுவனம்,

i. யுனஸ்கோ.
ii. செஞ்சிலுவைச் சங்கம்.
iii. யுனிசெப்.

80. எல்லா காலங்களிலும் பூக்காத தாவரங்களில் ஒன்று,

i. தென்னை.
ii. பனை.
iii. வாழை.

இரட்டைக் கிளவி வாக்கியங்கள்

- கிறுகிறு என்று தலை சுற்றியது.
- குபுகுபு என குருதி கொட்டியது.
- குறுகுறுத்தது குற்றமுள்ள நெஞ்சம்.
- சிலுசிலு என்று காற்று வீசியது.
- சுடசுட தோசை கொடுத்தாள்.
- தடதட என் கதவைத் தட்டினான்
- திபுதிபு என மக்கள் உள்ளே புகுந்தனர்.
- திருதிரு என விழித்தான்.
- தொள தொளவென்ற சட்டை அணிந்தார்.
- நறநற என பல்லைக் கடித்தான்.
- பரபரப்பு அடைந்தது ஊர்.
- பிசுபிசுத்தது போராட்டம்.
- மடமடவென்று தண்ணீர் குடித்தார்
- மலங்க மலங்க விழித்தான்
- மள மள என எல்லாம் நிகழ்ந்தன.
- முணுமுணுத்து அவர் வாய்.
- மொறு மொறுப்பாக சுட்டாள் முறுக்கு.
- விறுவிறுப்பான கதை அது
- வெடவெட என நடுங்கியது உடல்.
- வெதுவெதுப்பான நீரில் குளித்தாள்.

சிறு விளம்பரம்



மோட்டார் வாகனங்கள்

வேலைவாய்ப்பு

106 **கார்கள்** விற்பனைக்கு

SP CAL-5150 Tata Nano, 2015, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714 5 42 958 . 074960

119 **பஸ்கள், லொறிகள்** விற்பனைக்கு

631181 Isuzu Bus, 1990, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 0714542958. 074958

325 **தொழில்துறை** பொது

ஹோமாகம, பனாகொடயிலுள்ள ரெம்பின்பேர்க் கைத்தொழில் உற்பத்திக் கம்பனிக்கு பயிற்சியுள்ள/ பயிற்சி இல்லாதவர்கள் அவர்களின் உற்பத்திப் பிரிவிற்கு தே வை . வயது 18 32. பிறிதான சலு கைகளுடன் சம்பளம். தயவு செய்து 0778869803 என்ற இலக்கத்திற்கு அழைப்பைக் கொடுக்கவும். 074292

காணி/தோட்டம்

612 **கட்டிட நிர்மாணம்/ பொருட்கள்**

நீர்ப்பாதுகாப்பு தயாரிப்புக்கள் நீச்சல் குளங்கள், கூரையுடனான குளியலறைக்கான இரசாயனங்கள் Epoxy உள்ளக, வெளியக பெயின்ட்கள். Reg R14121 CIDA SP 0132. 071-7955307, 0777673528. 074476

Repeat Your ad For Better Offers

இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் கிண்ணியா கிளையை மீளமைப்பதற்குப் பொருத்தமான கட்டடம் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.

உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தலாகாது.
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 40 அடிக்கு உட்பட்டதாக பிரதான வீதிக்கு முகப்பாகவும் நகரத்தின் மத்தியிலும் அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தது 06 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- தரைப் பரப்பு குறைந்தபட்சம் 3000 - 3500 சதுர அடி அளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும். கட்டடமானது இரு மாடிகளைக் கொண்டிருப்பின் கீழ்த் தளமானது குறைந்தது 2500 சதுர அடிகளாக இருத்தல் வேண்டும்.
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் வசதி, இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி சேவை மற்றும் ஆண், பெண் இருபாலாருக்குத் தனித்தனியாக பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப்பகுதிக்கு தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (2' x 2')
- சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு (ஜெனரேட்டர்) 10' X 10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (ஜெனரேட்டரை நகர்த்த தனியான பாதை இருத்தல் வேண்டும்.)
- விசேட தேவையுடையோருக்கான தனிப்பட்ட நடைபாதை இருத்தல் வேண்டும்.
- நிரந்தரமாக வைக்க 1000 லிட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் பின்புறக் கதவு மற்றும் யன்னல்களுக்கு பாதுகாப்பு கிறில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்துக்கான தீ அபாயக்காப்புறுதி இருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ளோர் கட்டட வரைபட பிரதிகள் மற்றும் சகல விபரங்களுடன் 14 நாட்களுக்குள் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையில் இடது மேல் மூலையில் **"கிண்ணியா கிளைக்கு - பொருத்தமான கட்டடம்"** எனத் தயவுசெய்து குறிப்பிடவும்.

உதவிப் பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்),
இலங்கை வங்கி,
கிழக்கு மாகாணக் காரியாலயம்,
இல: 455,
பிரதான வீதி,
திருகோணமலை.

இலங்கை வங்கி

CRM இயந்திரத்துக்கான அறையொன்றை மீளமைப்பதற்கு பொருத்தமான வெற்றுக்காணி அல்லது கட்டடமொன்று நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.

சூரகல சந்தி - தன்ஜன்தென்ன, பலாங்கொடை

குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளப்படும் உத்தேசக் காணி அல்லது கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 08 அடிகளைக் கொண்ட பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருத்தல் வேண்டும்.
- தரைப் பரப்பு குறைந்தபட்சம் 8'x 14' (112 ச.அடியாக) இருத்தல் வேண்டும்.
- 30 அம்பியர் 1 நிலை மின்சார விநியோகம் இருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- இலகுவில் அணுகக் கூடிய சிறந்த சுற்றுச்சூழல் காணப்பட வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்ட உரிமையாளர் கட்ட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"CRM அறை – சூரகல சந்தி"** எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர் (சப்பிரகமுவ மாகாணம்)
இலங்கை வங்கி,
சப்பிரகமுவ மாகாணக் காரியாலயம்,
இல: 227, கொழும்பு வீதி, இரத்தினபுரி.
தொலைபேசி : 045 2222 036
தொலைநகல் : 045 2222 314
மின்னஞ்சல் : bocsbp@boc.lk

it's what you want
www.adz.lk
Login
Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

றிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்

Richard Pieris Finance

30 செப்டெம்பர் 2021 முடிவடைந்த காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள்

30.09.2021 முடிவடைந்த வருடத்திற்கான முக்கிய நிதித் தரவுகள் (கணக்காய்வுக்குட்படாதது)

ரூபா மில்லியன்களில்	நடப்பு காலம் 01/04/2021 முதல் 30/09/2021 வரை	முந்தைய காலம் 01/04/2020 முதல் 30/09/2020 வரை
வட்டி வருமானங்கள்	1,108.38	895.75
வட்டிச் செலவினங்கள்	(609.91)	(874.41)
தேறிய வட்டி வருமானம்	**498.47**	**21.34**
வர்த்தக செயற்பாட்டின் மூலமான வருமானம் / (இழப்பு)	0.89	1.19
ஏனைய வருமானம்	72.58	46.68
செயற்பாட்டு செலவினங்கள் (சேதக்கட்டணம் தவிர்த்து)	(288.61)	(269.96)
சேதக்கட்டணங்கள்	(81.20)	(36.21)
வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)	202.14	(236.96)
வரிச் செலவுகள்	(73.01)	-
வரிக்கு பின்னரான இலாபம்/(நட்டம்)	129.13	(236.96)

30.09.2021 உள்ளவாறான முக்கிய நிதித் தரவுகள் (கணக்காய்வுக்குட்படாதது)

ரூபா மில்லியன்களில்	30.09.2021 உள்ளவாறான	30.09.2020 உள்ளவாறான
சொத்துக்கள்		
காசு மற்றும் வங்கி மீதிகள்	692.52	818.79
அரச பத்திரங்கள்	668.38	444.32
தொடர்புடைய கட்சிகளிடமிருந்து பெறவேண்டியவை	14.13	23.29
கடன்கள் (தொடர்புடைய கட்சிகளிடமிருந்து பெறவேண்டியவை தவிர்த்து)	12,238.39	12,569.38
பங்குகளில் முதலீடு	16.53	10.92
முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் அசையா சொத்துக்கள்	68.96	71.10
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	206.45	233.26
ஏனைய சொத்துக்கள்	3,086.62	3,408.08
மொத்த சொத்துக்கள்	**16,992.20**	**17,579.14**
பொறுப்புக்கள்		
வங்கிக்கு செலுத்தவேண்டியவை	4,161.87	5,684.51
தொடர்புடைய கட்சிக்கு செலுத்தவேண்டியவை	616.52	628.31
வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டியவை	9,395.28	8,933.67
ஏனைய கடன்கள்	-	-
ஏனைய பொறுப்புக்கள்	437.77	512.42
மொத்த பொறுப்புக்கள்	**14,611.44**	**15,758.92**
பங்கு மூலதனம்		
பிரேரிக்கப்பட்ட மூலதனம்	1,610.83	1,260.83
நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம்	76.76	76.76
நிறுத்தி வைத்த வருவாய்கள்	693.76	482.99
ஏனைய ஒதுக்கங்கள்	(0.59)	(0.36)
மொத்த பங்கு மூலதனம்	**2,380.76**	**1,820.22**
பங்கிற்கான தேறிய சொத்து மதிப்பு	17.09	14.93

தெரிவு செய்யப்பட்ட செயல்திறன் குறிக்காட்டிகள்

உள்ளடக்கங்கள்	30.09.2021 உள்ளவாறான உள்ளவாறான	30.09.2021 உள்ளவாறான தேவையானவை	30.09.2020 உள்ளவாறான உள்ளவாறான	30.09.2020 உள்ளவாறான தேவையானவை
ஒழுங்குபடுத்துதல் மூலதனப் போதுமை (%)				
அடிப்படை மூலதனம் போதுமை விகிதம்	7.73%	7.00%	5.30%	6.50%
மொத்த மூலதன விகிதம்	12.28%	11.00%	9.70%	10.50%
மூலதன நிதியிலிருந்து மொத்த வைப்புப் பொறுப்பு விகிதம்	25.34%	10.00%	20.34%	10.00%
சொத்துக்களின் தரம் (%)				
மொத்த செயல்படாத கடன் விகிதம்	27.76%		26.12%	
தேறிய செயல்படாத கடன்கள் விகிதம்	14.05%		13.74%	
அடிப்படை மூலதன விகிதத்திற்கு நிகர செயல்படாத கடன்கள்	95.66%		116.16%	
ஏற்பாட்டு பாதுகாப்பு விகிதம்	31.18%		34.86%	
இலாபத்தன்மை (%)				
தேறிய வட்டி இலாபம்	41.88%		2.34%	
சொத்துக்களிலிருந்தான வருவாய்	16.98%		-26.04%	
பங்கு மூலதனத்திலிருந்தான வருவாய்	12.45%		-27.67%	
வருமான விகிதத்திற்கான செலவு	50.54%		396.86%	
திரவத்தன்மை (%)				
தேவையான திரவ சொத்துகளுக்கு கிடைக்கக்கூடிய திரவ சொத்துக்கள் (குறைந்தபட்சம் 100%)	123.98%		209.73%	
வெளிப்புற நிதிகளுக்கான திரவ சொத்துக்கள்	8.31%		7.48%	
விஞ்ஞாபன தகவல்கள்				
கிளைகளின் எண்ணிக்கை	15		12	
வெளிப்புற கடன் மதிப்பீடு	AA- (lka) Stable		A- (lka) Stable	
ஒழுங்குமுறை வைப்பு கட்டுப்பாடுகள்				
மூலதனத்தில் மொத்த வைப்புக்கள் (ரூபா. மில்லியன்)	-		8,600	
வைப்புத்தொகை குறைத்தல்-மாதம்/காலாண்டு/ஆண்டு (ரூபா. மில்லியன்)	-		-	
வைப்பு முடக்கம்	-		-	
ஒழுங்குமுறை கடன் கட்டுப்பாடுகள்				
மொத்த கடன் வழங்கும் துறைகள் (ரூபா. மில்லியன்)	-		15,500	
கடன் வழங்கும் குறைத்தல்-மாதம்/காலாண்டு/ஆண்டு (ரூபா. மில்லியன்)	-		-	
புதிய கடன் வசதிகளை வழங்குவதற்கும் / அல்லது இருக்கும் கடன் வசதிகளின் விதிமுறைகளை விரிவாக்குவதற்குமான கட்டுப்பாடுகள்	-		-	

உறுதிப்படுத்தல்

மீது கையொப்பமிட்டிருக்கும் றிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட் இன் பிரதான நிறைவேற்று அலுவலராக, நிதிக் கட்டுப்பாட்டாளராக மற்றும் இணங்குவிப்பு அலுவலராகவுள்ள நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகிறோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் ஏற்ப இணங்கி செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

எமது மக்களின் கல்வி, கலை கலாசாரம் என அனைத்து துறைகளையும் வலுவாக்க வேண்டுமாக இருந்தால் முதலில் எமது மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். கடந்த 62 வருடங்களாக அரசியல் பேசிப் பேசி தமிழ் மக்களை வறுமையில் தள்ளியிருக்கின்ற அரசியல் தலைமைகளுக்கு மத்தியில், எமது மக்களின் வலுவான எதிர்காலத்திற்கு பொருளாதாரம் அத்தியாவசியமாக அமைகிறது.

பொருளாதாரம் பலமாக இல்லாததன் காரணமாக எல்லாவற்றிற்கும் மாற்று அரசியல் தலைமைகளையும் மாற்று சமூகக் கட்டமைப்பிடமும் கையேந்த வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது நிலவளம், நீர்வளம் மற்றும் மனித வளம் என அனைத்து வளங்கள் உள்ளபோதும் ஏனைய மாவட்டங்களையும் ஏனைய நாடுகளையும் பொருளாதாரத்திற்கும் நாளாந்த வாழ்க்கைத் தரத்தினை நடத்துவதற்காகவும் எதிர்பார்த்து நிற்கவேண்டிய துர்ப்பாக்கி நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அரச நிறுவனங்களும் அரசியல் தலைவர்களும் மக்களை பற்றி சிந்திக்கின்ற போது மக்களும் அதற்கு ஏற்றாற்போல் தங்களை மாற்றிக்கொண்டு செயற்பட தகுதியானவர்களாக மாறுவதற்கு பாடுபட வேண்டும். ஆளும் கட்சியுடன் இணைந்து இணக்க அரசியலை மேற்கொள்கின்ற கட்சி என்ற வகையில் எமது மக்களுக்கு அனைத்து சேவைகளையும் வழங்குவதற்கு தயாராக இருக்கின்றோம்.

வெற்றுக்கோச வெறும் ஊடக வீரப்பேச்சுக்களைப் பேசி எமது மக்களை தொடர்ந்தும் அரசியல் அதிகாரமற்ற அடிமைகளாக வைத்திருக்கின்ற ஆசனத்தை மாத்திரம் சூடாக்குவதற்காக அரசியல் வந்தவர்களல்ல நாங்கள். எமது மக்களின் எதிர்காலம் குறித்து திடமான சிந்தனையுடன் பயணிப்பவர்கள் என்றார்.

படகு விபத்தில் மரணித்த உறவுகளுக்காக

கிண்ணியா முழுதும் நேற்று துக்கதினம்

ரொட்டவெவ குரூப் நிருபர்

திருகோணமலை – கிண்ணியா குறிஞ்சாக்கேணி இழுவை படகு விபத்தில் மரணித்த உறவுகளுக்காக நேற்று கிண்ணியா முழுவதும் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

படகுப்பாதை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபங்களை தெரிவிக்கும் வகையிலும் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடைய வேண்டியும் இத் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுவதாக கிண்ணியா பிரதேச சிவில் அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று (25) அனைத்து வீடுகள்,கடைகள்,அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிட்டு அமைதியான முறையில் துக்க தினத்தை அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

பாடசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை மூடி துக்க தின அனுஷ்டிப்புக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கிண்ணியா சிவில் சமூக ஒன்றியம் கோரியிருந்தது.

ஒன்று கூடல்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை தவிர்த்து அனைவரும் தங்களின் வீடுகளிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்காக விசேட பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதேச சிவில் அமைப்புகளின் ஒன்றியம்,பள்ளிவாயல்கள் சம்மேளனம்,உலமா சபை, ஸுரா சபை மற்றும் வர்த்தக சங்கங்கள் ஆகியன ஒன்றிணைந்து இந்த கோரிக்கையை விடுத்து துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மகா ஓயாவில் 83.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி

வாச்சிக்குடா விஷேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மகா ஓயா பிரதேசத்தில் அதிகூடிய 83.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொத்துவில் வானிலை அவதான நிலைய கடமைநேர அதிகாரி எம்.ஏம்.எம். அக்மல் தெரிவித்தார்.

நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் ரூபஸ்குளத்தில் 61.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பாணம பிரதேசத்தில் 56.9 லாகுகல 46.7 தீகவாபி 45.0 அம்பாறை 39.3 அக்கரைப்பற்றில் 24.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய பிரதேசங்களிலும் குறிப்பிட்டளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் கூறினார்.

பெய்து வரும் அடை மழையினால் மாவட்டத்தின் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், கல்முனை, நிந்தவூர், அம்பாறை, உள்ளிட்ட பிரதேசங்களின் தாழ் நில பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது.

வீதிகளும் குடியிருப்புக்களும்; வெள்ளத்தால் மூழ்கியுள்ளதுடன் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இரு தினங்களுக்கு முன்னர் ஆரம்பித்த மழை வீழ்ச்சி நேற்றுக் காலை வரை நீடித்து வரும் நிலையில் சில குடியிருப்புகளிலும் நீர் புகுந்துள்ளது.

இதேநேரம் ஆலையடிவேம்பு பிரதேசத்திலும் தாழ் நிலப்பகுதிகளும் சில வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.வெள்ள நிலை தொடர்பில் பிரதேச செயலகமும் பிரதேச சபையும் கண்காணித்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

'கிழக்கின் நூறு சிறு கதைகள்' நூல் வெளியீட்டு நிகழ்வு

துறைநீலாவணை நிருபர்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 'கிழக்கின் நூறு சிறு கதைகள்' தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு 28.11.2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு கல்முனை உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலையின் நல்லதம்பி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் பிரதம விருந்தினராகவும், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாகத் அலி, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா. முரளீஸ்வரன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ. ஜே. அதிசயராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரை தலைமையுரை என்பவற்றை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதனும், அறிமுக உரை, தொகுப்புரை என்பவற்றை எழுத்தாளர் சிவ வரதராஜனும், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடுகள் பற்றிய கருத்துரையினை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், முன்னாள் தமிழ்த்துறை தலைவருமான பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலைப் பதிவாளர் மன்சூர் ஏ. காதர் ஆகியோர் நிகழ்த்துவர். நன்றியுரையினை இத்திணைக்களத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் வீ. கோணேஸ்வரன் நிகழ்த்துவார்.

மட்டு. மாவட்டத்தில் கடும் மழை

119.9 மில்லிமீற்றர் மழை பதிவு

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்து வரும் நிலையில் நேற்று அடை மழை காரணமாக பல இடங்களில் பாதைகள், தாழ் நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

நேற்றுக் காலை 8.30 மணிவரையான 48 மணித்தியாலங்களில் இம் மாவட்டத்தில் 119.9 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

புதிய காத்தான்குடி, நாவற்குடா, ஆரையம்பதி, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, கிரான் உட்பட பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.பாதைகளில் நீர் தேங்கியுள்ளால் போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் கடல் கொந்தளிப்பான நிலையும் காணப்படுகிறது.

கிண்ணியா நகர சபை தவிசாளருக்கு விளக்க மறியல்

ரொட்டவெவ குரூப் நிருபர்

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு விபத்துடன் தொடர்புடையதாக நான்காவது சந்தேக நபரான கிண்ணியா நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீமை எதிர்வரும் டிசம்பர் மாதம் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவு பிரப்பித்துள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் நேற்று (25) மாலை ஆஜர்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதிக்கு படகை பாவனை செய்வதற்கு அனுமதி வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் குறித்த தவிசாளர் அனர்த்தம் இடம்பெறுவதற்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நான்காவது சந்தேக நபர் என பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்

இதேவேளை தண்டனைச் சட்டக்கோவை 298,273 , 275 ஆகிய அடிப்படையில் கிண்ணியா பொலிஸார் குற்றச்சாட்டுகளை முன் வைத்தனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட மூன்று நபர்களும் விளக்க மறியலில் இருப்பதாகவும் நான்காவது நபரான கிண்ணியா நகர சபை தவிசாளரான எஸ்.எச்.எம். நளீம் விளக்கமறியலில் வைக்குமாறும் கிண்ணியா பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் பரிசீலனை செய்த திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளையிட்டார்.

சர்வதேச செய்திகள்

ஆங்கிலக் கால்வாயில் அகதி படகு மூழ்கியதில் 27 பேர் பலி

இரப்பர் படகில் ஆங்கிலக் கால்வாயைக் கடக்க முயன்ற அகதிகள் மற்றும் தஞ்சக் கோரிக் கையாளர்கள் படகில் காற்று வெளியேறி, மூழ்கியதில் குறைந்தது 27 பேர் உயிரிழந்துள் ளனர்.

பிரான்ஸ் மற்றும் பிரிட் டனை பிரிக்கும் இந்தக் கால் வாயில் குடியேறிகளுடன் தொடர்புபட்டு இடம்பெற்ற மிக மோசமான விபத்தாக இது உள்ளது.

ஐந்து பெண்களும் குழந்தைகள் இருவரும் உயிரிழந்தவர்களில் அடங் குவர். படகில் 34 பேர் இருந்திருக்க லாம் என்று கூறப்படுகிறது. இருவர் காப்பற்றப்பட்டனர். மேலும் ஒருவ ரைக் காணவில்லை.

படகில் செல்ல உதவிய சந்தேகத் தின் பேரில் பிரான்ஸில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். வெற்று இரப்பர் படகு ஒன்று இருப்ப தாகவும் அருகில் பலர் உணர் வின்றி மிதப்பதாகவும் மீட்பு சேவைக்கு அழைப்பு கிடைத் துள்ளது. இதனை அடுத்து குறைந்தது மூன்று படகுகள் மற்றும் மூன்று ஹெலிகொப் டர்களை கொண்டு பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் கூட்டாக மீட்பு நடவடிக்கையில் ஈடுபட் டது.

ஆபத்திற்கு மத்தியில் சிறிய படகுகள் அல்லது இரப்பர் படகுக ளில் இந்த கால்வயை கடக்க முயல்ப வர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

கறுப்பின ஆடவரைக் கொன்ற மூவர் குற்றவாளிகளாக தீர்ப்பு

அமெரிக்காவில் உடற் பயிற்சிக்காக ஓடிக்கொண் டிருந்த கறுப்பின ஆடவர் ஒருவரை கொலை செய்த மூன்று வெள்ளை இனத் தவர்களும் குற்றவாளிகள் என நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

கடந்த 2020 பெப்ரவரி 23 ஆம் திகதி 25 வயதான அஹமவுத் ஆர்பெரி என் பவர் ட்ரவிஸ் மற்றும் ஜோர்ஜ் மைக்கல் மற்றும் அவர்களின் அண்டை வீட்டாரான வில்லியம் ப்ரியான் ஆகியோருடன் மோதலில் ஈடுபட்ட நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தற்பாதுகாப்பிற்காக நடவடிக்கை எடுத்ததாக பிரதிவாதிகள் கூறிய நிலையில் இந்த சம்பவத்தில் இனவா தம் தாக்கம் செலுத்தி இருப்பதாக வழக் குத்தொடுநர்கள் வாதிட்டுள்ளனர்.

இந்நிலையில் குற் றங்காணப்பட்டிருக்கும் இந்த மூவரும் குறைந் தபட்சம் ஆயுள் தண்ட னையை எதிர்கொண்டுள் ளனர்.

வெள்ளை இனத்த வர்களை பிரதானமா கக் கொண்ட 12 பேர் கொண்ட நடுவர் சபை சுமார் 10 மணி நேரம் ஆலோசனை நடத்திய பின் கடந்த புதன்கிழமை நண்பகல் இந்தத் தீர்ப்பை வழங்கினர்.

இந்தத் தீர்ப்புக்கு ஆதரவாக நீதிமன் றத்திற்கு வெளியில் திரண்ட கறுப்பின ஆதரவாளர்கள் கரகோசமிட்டனர்.

சுவீடனின் முதல் பெண் பிரதமர் சில மணி நேரத்தில் விலகினார்

சுவீடனில் முதலாவது பெண் பிரதமராக மக்டெ லேனா அன்டர்சன் நியமிக்கப்பட்டு சில மணி நேரங்க ளிலேயே பதவி விலகியுள்ளார்.

கடந்த புதன்கிழமை மக்டெலேனா பிரதமராக அறி விக்கப்பட்ட நிலையில், அவரது கூட்டணி கட்சி அரசில் இருந்து விலகி, வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற் றுவதில் தோல்வி அடைந்ததை அடுத்தே அவர் பதவி விலகியுள்ளார். பதிலாக, குடியேற்ற எதிர்ப்பு தீவிர வல துசாரியினர் உட்பட எதிர்க்கட்சி மூலம் வரையப்பட்ட பட்ஜெட் ஒன்றுக்கு பாராளுமன்றம் ஆதரவாக வாக்க ளித்தது.

"நான் பதவி விலக விரும்புவதாக சபாநாயகரிடம் கூறினேன்" என்று மக்டெலேனா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். "தீவிர வலதுசாரிகளுடன் முதல்முறை வரையப்பட்ட பட்ஜெட் ஒன்றை ஏற்க முடியாது என்று அவரது கூட்டணியில் இருந்து விலகிய பசுமைக் கட்சி குறிப்பிட்டது. ஒரு ஒற்றை கட்சி அரசின் தலைவராக மீண்டும் பிரதமர் பதவிக்கு வர முயற்சிப்பேன் என்று மக்டெலேனா குறிப்பிட்டார்.

அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி கட்சி தலைவர்களு டன் தாம் பேசவிருப்பதாக சபாநாயகர் தெரிவித்தார்.

சீனாவில் குளிர்கால ஒலிம்பிக்கை புறக்கணிக்க பொம்பியோ ஆதரவு

மனித உரிமை விவகாரங்கள் கார ணமாக அடுத்த ஆண்டு சீனாவில் இடம்பறவிருக்கும் பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியை புறக்கணிப் பதற்கான அழைப்புக்கு அமெரிக்க முன்னாள் இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ ஆதரவு அளித்துள்ளார்.

"வூஹான் வைரஸ் பற்றி எழுதும் செய்தியாளர்கள், சீன கம்யூனிச கட்சி (சி.சி.பீ) ஆய்வுகூடங்கள் பற்றிய உண்மையை கூறிய ஆவணங்களை எழுதியவர்கள், தொழில்முறை டென்னிஸ் வீரர் ஒருவர், உய்குர்கள், ஹொங்கொங் குடிமக்கள் மற்றும் இன்டர்போல் தலைவரை சி.சி.பீ காணாமல் செய்கிறது. அவர்களிடம் இருந்து ஒலிம்பிக்கை காணாமல் செய்து, உலகம் பெருமைப்படும் நிலையை ஏற்படுத்துங்கள்" என்று பொம்பியோ ட்விட்டரில் குறிப்பிட் டுள்ளார்.

பீஜிங்கில் இடம்பெறும் 2022 குளிர் கால ஒலிப்பிக்கை இராஜதந்திர ரீதியில் புறக்கணிப்பதற்கு அமெரிக்க ஜனாதி பதி ஜோ பைடன் நிர்வாகம் ஆலோ சித்து வரும் நிலையிலேயே இந்த அறி விப்பு வெளியாகியுள்ளது.

ஜெர்மனியில் கொரோனா பலி 100,000ஐ தாண்டியது

ஜெர்மனியில் கொரோனா தொற்று பரவல் ஆரம்பித்ததில் இருந்து, வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 100,000ஐத் தாண்டியுள்ளது.

கடந்த 24 மணிநேர இடை வெளியில் அங்கு மேலும் 351 பேர் வைரஸ் தொற்றால் உயி ரிழந்துள்ளனர். ஜெர்மனியில் வைரஸ் தொற்று ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை உச்சநிலையை எட்டும் வேளையில், அங்குள்ள மருத்துவம னைகளின் தீவிர சிகிச்சை வார்டுக ளும் மிக விரைவில் நிரம்புகின்றன.

இதனால் சில மருத்துவமனை களில் நெருக்குதல் ஏற்பட்டுள் ளது. அவற்றில் சிகிச்சை பெறும் சிலரை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, கடந்த வாரம் ஜெர்மனி, மேலும் கடுமையான கட் டுப்பாடுகளை அறிவித்திருந்தது. அங்கு வைரஸ் பரவலால் கடுமையா கப் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் முடக்கநிலை நடப்புக்கு வந்துள்ளது.

இந்தியாவில் பூஸ்டர் தடுப்பூசி தற்போதைக்கு தேவையில்லை

கொவிட்-19 தொற் றுக்காக இந்தியாவுக்கு இப்போது பூஸ்ட் தடுப் பூசி தேவையில்லை என்றும் கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் பாரிய மூன்றாவது அலை ஒன்றுக்கான வாய்ப்பு குறைந்து வருவதாகவும் அகில இந்திய மருத்துவ விஞ்ஞான நிறுவன பணிப்பாளர் டொக்டர் ரன்தீப் குலேரியா தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை டெல் லியில் இடம்பெற்ற புத்தக வெளியீடு ஒன்றில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய தொற்றுகள் அதிகரிக்காதது, கொரோனாவுக்கு எதிரான நோய் எதிர்ப்பாற்றல் கணிசமாக ஏற்பட்டிருப் பது உள்ளிட்டவற்றை வைத்து பார்க்கும் போது தற்போதைக்கு 3ஆவது தவணை தடுப் பூசி தேவையில்லை என ரன்தீப் குலேரியா தெரி வித்தார். எனினும் எதிர் காலத்திலும் 3ஆவது டோஸ் தேவையில்லை என்பது குறித்து இப்போது உறுதிப்பட எதுவும் கூற முடியாது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் 3ஆவது டோஸ் தடுப் பூசி செலுத்துவது குறித்து தொற்று நோய்களுக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக்குழு அடுத்த வாரம் பரி சீலிக்க உள்ள நிலையில் இக்கருத்து முக்கியத்துவம் பெறுவதாக கூறப்படு கிறது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முஅம்மர் கடாபி மகனுக்கு தடை

காலஞ்சென்ற லிபியத் தலைவர் முஅம்மர் கடாபியின் மகன் சயிப் இஸ்லாம் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனாதி பதி தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்.

சட்டக் காரணங்களை காட்டி சயிப் அல் இஸ்லாம் கடாபி உட்பட பல விண்ணப்பதாரர்க ளின் வேட்புமனுக்களை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளதாக உள்ளூர் ஊடகம் செய்தி வெளி யிட்டுள்ளது.

டிசம்பர் 24ஆம் திகதி நடை பெறவிருக்கும் தேர்தலில் சயிப் இஸ்லாம் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்தது பெரும் சர்ச் சையை ஏற்படுத்தி இருந்தது. போர் குற்றத்திற்காக சர்வதேச நீதிமன்றத் தால் தேடப்படுபவராக அவர் உள்ளார்.

நாட்டின் பலம்மிக்கவராக உள்ள காலிபா ஹப்தர் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் அமெரிக்க நீதிமன்றங்க ளில் குற்றவியல் குற்றச்சாட்டு களுக்கு முகம்கொடுத்துள்ளார். நிராகரிக்கப்பட்ட வேட்பும னுக்களில் அவரது பெயரும் உள்ளதா என்பது உறுதி செய் யப்படவில்லை.

இந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட அறுபது பேர் விண்ணப்பித்துள்ளனர். இதில் 46 வயது பெண் உரிமை செயற் பாட்டாளர் லெய்லா பென் கலிபா ஒரே பெண் வேட்பாளராக உள்ளார்.

சோமாலியத் தலைநகரில் கார் குண்டு தாக்குதல்: எண்மர் பலி

சோமாலியத் தலைநகர் மொக டிசுவில் பாடசாலை ஒன்றுக்கு அருகில் நேற்று இடம்பெற்ற கார் குண்டு தாக்குதலில் எட்டுப் பேர் பலியானதோடு மேலும் பலர் காயமடைந்துள்ளனர். அல் சபாப் ஆயுதக் குழு இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது.

ஐ.நா பாதுகாப்பிற்காக ஒப்பந் தம் செய்யப்பட்ட டுகுப் என்ற தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றின் வாகனத் தொடரணி ஒன்றை இலக்கு வைத்து வெடிபொ ருட்களை நிரப்பிய வாகனத்தை ஓட் டிவந்த தற்கொலைதாரி வாகனத்தை வெடிக்கச் செய்துள்ளார்.

இதில் 13 மாணவர்கள் உட்பட சுமார் 17 பேர் காயமடைந்துள்ளனர். பரபரப்பான காலை நேரத்தில் இந்த குண்டு வெடிப்பு இடம்பெற்றிருப்ப தாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராணுவ பயிற்சியாளர்களை இலக்கு வைத்து இந்தத் தாக்கு தலை நடத்தியதாக அல் ஷபாப் குறிப்பிட்டுள்ளது.

2011 ஆண்டு வரை தலைந கர் மொகடிசுவை கட்டுபாட் டில் வைத்திருந்த அல் ஷபாப் குழுவை ஆபிரிக்க ஒன்றிய படைகள் துரத்தியது. எனினும் கிராமப்புறங்களை தொடர்ந்தும் தனது கட்டப்பாட்டில் வைத்திருக்கும் அல் ஷபாப் தலைநகரில் அரசு மற்றும் சிவில் இலக்குகள் மீது தொடர்ச்சி யாக தாக்குதல் நடத்தி வருகிறது.

பொம்மையென நினைத்து நிஜ முதலையிடம் சிக்கிய ஆடவர்

பிலிப்பைன்ஸ் நாட்டில் பொம்மை முதலை என நினைத்து செல்பி எடுக்க குழியில் இறங்கியவரை உண் மையான முதலை தாக்கியதில் படுகா யமடைந்தார்.

நெஹிமியாஸ் சிப்பாடா என்ப வர் தனது 68ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு ககாயன் என்ற இடத்தில் உள்ள கேளிக்கைப் பூங்கா விற்குச் சென்றார்.

அங்கு 12 அடி நீளத்தில் இருந்த முத லையைக் கண்ட அவர், அது பொம்மை என நினைத்து அது இருந்த குழிக்குள் இறங்கி செல்பி எடுக்க முயன்றார். ஆனால் எதிர்பாராதவிதமாக அந்த முதலை நெஹிமியாசின் கையைக் கடித்துப் பிடித்துக் கொண்டது.

தனது குடும்பத்தினர் பார்த்திருக்கு அந்த முதலை அவரை இழுத்து நீருக் குள் செல்ல முயன்றது. அவர் உதவி கேட்டு கூச்சலிடுவது அங்கு எடுக்கப் பட்ட வீடியோவில் பதிவாகியுள்ளது.

அதிர்ஷ்டவசமாக அவர் முதலையி டம் இருந்து விடுவித்துக் கொண்டு உயிர் தப்பியுள்ளார். தொடர்ந்து அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல் லப்பட்டார்.

இந்த சம்பவத்தை அடுத்து பூங்கா அதிகாரிகள் முதலை இருக்கும் இடத் தில் எச்சரிக்கை அறிவிப்பு ஒன்றை வைத்துள்ளனர்.

திருமண இசையால் 63 கோழிகள் பலி

இந்தியாவின் ஒடிஷா மாநிலத்தில் நடைபெற்ற பாரம்பரியத் திருமண நிகழ்ச்சியில் ஒலித்த இசை, வாண வேடிக்கை ஆகியவை 63 கோழிகள் இறப்பதற்கு காரணம் எனக் கூறப்ப டுகிறது.

அந்தத் திருமண ஊர்வலம் தமது கோழிப் பண்ணையைக் கடந்து சென் றபோது செவிகளைப் பிளக்கும் அள வுக்குச் சத்தமாக இருந்ததாக ரஞ்சித் குமார் பரிடா கூறினார்.

கோழிகள் பயந்ததாகவும், சத்தத் தைக் குறைக்கும்படி கேட்டுக்கொண் டதாகவும் அவர் ஏ.எப்.பி செய்தி நிறு வனத்திடம் தெரிவித்தார். ஆனால், அவர்கள் கேட்கவில்லை என்றார் பரிடா.

கோழிகள் மாரடைப்பால் மாண்ட தாகக் கால்நடை மருத்துவர் ஒருவர் பரிடாவிடம் கூறினார். திருமண ஏற் பாட்டாளர்கள் இறந்த கோழிகளுக்கு இழப்பீடு கொடுக்க மறுத்ததால், அவர் பொலிஸாரிடம் புகார் அளித் தார்.

இரு தரப்பினரும் பிரச்சினைக் குத் தீர்வுகாண ஒப்புக்கொண்டதால் பரிடா புகாரை மீட்டுக்கொண்டார். அதிகச் சத்தம், பறவைகளிடையே இதய நோயின் அபாயத்தை அதிகரிக் கலாம் எனக் கூறப்படுகிறது.

ஜெர்மனியில் மேர்கலின் அரசை முடிவுக்கு கொண்டுவர கூட்டணி

ஜெர்மனியில் எங்கலா மேர்க்கல் தலைமையிலான 16 ஆண்டு கால ஆட்சியை முடிவுக்குக் கொண் டுவரும் வகையில் மூன்று கட்சி கூட்டணி அரசு ஒன்றுக்கு ஒலாப் ஸ்கோல்ஸ் தலைமை வகிக்கவுள் ளார்.

ஸ்கோல்ஸின் சமூக ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்ற கூட்டாட்சித் தேர்தல்கள் இடம்பெற்று இரண்டு மாதங்கள் கடந்த நிலையில், பசுமை யாளர்கள் மற்றும் வணிக நட்பு சுதந்திர ஜனநாயகவாதிகளுடன் அவர் கூட்டுச் சேர்ந்துள்ளார்.

காலநிலை பாதுகாப்பு அம்சங்கள் இந்த கூட்டணி உடன்படிக்கையில் முக்கிய அங்கம் வகிக்கிறது.

திட்டமிடப்படுவதை விடவும் எட்டு ஆண்டுகளுக்கு முன்னதாக 2030இல் நிலக்கரி பயன்பாட்டை முடிவுக்குக் கொண்டுவர இந்த கட்சிகள் இலக்கு வைத்துள்ளன. ஜெர்மனியில் 2 வீதம் காற்றாலை மின்சாரத்தை பயன்படுத்த வும், ஹைட்ரஜன் அடிப்படையிலான ஆற்றல் பற்றியும் இந்த கூட்டணி அவ தானம் செலுத்தவுள்ளது. 2030 இல் 80 வீத மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இருந்து பெறுவதற்கும் ஜெர்மனி வீதிகளில் 15 மில்லியன் மின்சார கார்களை ஈடுபடுத்தவும் இந்த கட்சிகள் விரும்புகின்றன.

அர்ப்பணிப்புடன் தொடரும் சமூக சேவை

அகில இலங்கை சமாதான நீதவான் வேலுப்பிள்ளை சிதரம்பரநாதன்

சமூக சேவை செயற்பாடானது மிக விசாலமானது. அதற்குள் யார் தூண்டலும் இல்லாமல் வெறும் உந்துதல் மூலம் தானாக ஈர்க்கப் பட்டவன் நான். யாராவது வந்து வாழ்வியல் அவலங்களையும் சோகங்களையும் துன்பங்களையும் சொல்லும்போது அவர்களுக் காக மனம் நெகிழ்ந்து ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்ற உத்வேகம் என்னைப் பீடித்துவிடும். யாருக்கும் தெரியாமல் குறித்த மனிதனைச் சந்தித்து அம்மனிதனின் தேவையை மறைமுகமான முறையில் நிறைவேற்றி வைப்பேன். இப்படி பல தரப்பட்ட தனிப் பட்ட சேவைகளை மனமுவந்து செய்து வருகின்றேன் என அகில இலங்கை சமாதான நீதவான் வேலுப்பிள்ளை சிதரம்பரநாதன் தின கரனுக்கு தெரிவித்தார்.

கலந்துரையாடியவர்
இக்பால் அலி

அகில இலங்கை சமாதான நீதவான் வேலுப்பிள்ளை சிதரம்பரநாதன். மனித உரிமை நிறுவனத்தின் முன்னாள் கண்டி மாவட்ட அமைப்பாளர், செஞ்சி லுவை சங்கத்தின் ஆயுட் கால அங்கத் தவர். மாத்தளை காந்தி சாபாவின் ஆயுட் கால அங் கத்தவர் மற்றும் மாத்தளை காந்தி சபாவின் நிதி நிர்வாக சபை உறுப்பினரும், இலக்கிய ஆர்வலர், சமூக செயற்பாட்டா ளர் என பல் துறைக ளில் தனது தடத்தை பதித்தவர்.

சுமார் அரை நூற் றாண்டு காலத்திற்கு மேலாக சமூகப் பணிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற் றியமைக்காக சில அரச விருதுகளையும் பாராட்டுக்களையும் தனதாக்கிக் கொண் டவர். 2014 இல் தெலுங்கு காங்கிரஸ் அமைப்பினால் தேசகீர்த்தி எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர். 2016 இல் மனித உரிமை அமைப்பின் விருது. 2017 விவேகானந்த தமிழ் வித்தியால யத்தின் சமூகச் சுடர் விருது. 2018 இல் நடைபெற்ற மலையக தமிழ் சாஹித்திய விழாவில் சமூக சேவைக்கான விருது, 2016 இல் மாத்தளை சுவாமி விபுலா னந்தர் கலா மன்றத்தின் முத்தமிழ் விழா விருது. ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக இரத்தின தீப விருது வழங்கும் விழாக்க ளின் போது தொடர் தேர்ச்சியான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். நா. வை. குமரிவேந்தன் (மகேந்திரராசா) எழுதிய நூல்வெளியீட்டு விழாவின் சான்றோர்க ளுக்கான விருது. 2018 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் மாத்த ளையில் நடத்தப்பட்ட தேசிய தமிழ் மொழி தின விழாவில் சமூக சேவைக்கான விருது என இன்னும் பல சமூக சேவைக்கென பல்வேறு உயர் சிறப்பு விருதுகளைப் பெற்ற வர்.

வாழ்க்கையில் பல சாவல்க ளுக்கும் மன அழுத்தங்களுக் கும் உள்ளாக்கப்பட்டாலும் அதையும் தாண்டி ஒரு நல்ல மனிதனாக வாழ வேண்டும். அடுத்தவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதுதான் தனது நோக்கம் என்று கூறும் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் தினக ரன் பத்திரியையுடனான கலந்துரையாட லில் தெரிவித்த கருத்துக்கள்...

கே. வாழ்க்கையின் ஆரம்பக்க கட்டம் தொடர்பான உங்கள் கருத்து,...

ப. நான் புசல்லாவையில் பிறந்தேன். 1952-1957 ஆம் ஆண்டு வரையி லும் ஹொலி திரித்துவக் கல்லூரியில் ஆரம்பக் கல்வினைப் படித்தேன். அதன் பின்னர் கம்பளை சாஹிராக் கல்லூரி வுக்குச் சென்றேன். அப்பொழுது அப் பாடசாலையின் அதிபராக கலாநிதி பதி யுதீன் மஹ்மூத் இருந்தார். ஒரு விபரம் தெரியாத ஒரு காலப்பருவமாக இருந்த போதிலும் அவர் ஒரு கல்வி அமைச்ச ராக வருவார் என்று நான் அப்பொழுது கொஞ்சம் கூட எதிர்பார்க்க வில்லை. அவர் உரைகளையும் படத்தையும் பத்திரி கைகளில் பார்த்து அறிந்து கொள்வேன். அவரைக் காணாமல் விட்டாலும் எங்கள் அதிபர் தான் கல்வி அமைச்சராக இருக் கிறார் என்ற வகையில் மனதிற்குள் புள காகிதம் அடைந்து கொள்வேன். அவர் பாடசாலையில் காலைக் கூட்டம் நடக்கும் போது அதிகம் ஆங்கிலத்தில் தான் உரை யாற்றுவார். தமிழில் பேசுவது ரொம்பக் குறைவு. ஆனாலும் தமிழில் உடனுக்கு டன் மொழி பெயர்த்து கூறுவார்கள்.

திடீர் திடீரென வகுப்பறைகளுக்கு வந்து செல்வார். இவரது அந்த வருகை யானது மாணவர்களுக்கு மனத்திற்கு சற்று பயங்கலந்த மரியாதையாகவும் சந்தோசமாகவும் இருக்கும். அவருடைய நிர்வாக ஒழுங்கு ஒரு கட்டுக்கோப்பைக் கொண்டது. அவர் பெயரையும் பள்ளிக் கூடத்தின் பெயரையும் பாதுகாக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அவர் இன, மத, சமய வேறுபாடுளின்றி எல்லா மாணவர்களுடனும் சரி சமனா கப் பழகுவார். அவரிடம் இயல்பாகவே சிங்கள, தமிழ், கிறிஸ்தவ சமய வேறு பாடுகளின்றி எல்லா மனிதர்களோடும் ஒருங்கிணைந்த உறவுப்பாலத்துடன் நெருங்கிப் பழகும் தன்மையை வெளிப் படையாகக் காணக் கூடியதாக இருந்தது. இன்று காணப்படும் வேறுபாடுகளெல் லாம் அன்று காண முடியாது. நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாகவும் ஒன்றாக வும் தான் இருந்தோம்.

அதிபர் எங்களை கம்பளை நகரில் கண்டால் அடுத்த நாள் ஏன் இந்த நேரத் தில் சுற்றித்திரிகின்றாய் என கூப்பிட்டு கேட்பார். நாங்கள் அவரைக் கண்டால் ஓடி ஒளிந்து விடுவோம். இப்படியான தொரு கட்டுக்கோப்பான ஒழுங்கு விதிமு றைப் பேணி தம் அதிபர் கடமைகளைச் செய்தவர் தான் கலாநிதி பதியுதீன் முஹ்மூத். இன்று இதை நான் ஞாபகப் படுத்தக் காரணம் இன்றுள்ள அதிபர்மார் கள் அவரிடமிருந்து நல்ல குணங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்கா கவேயாகும்.

எனது வகுப்பாசிரியராக நூன் என்ப வர் இருந்தார். வகுப்பில் முஸ்லிம் மாண வர்கள் அதிகம். அவர்கள் தான் நண் பர்களாகவும் இருந்தார்கள். ஆனாலும் படிப்பிப்பதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியமார்கள் தான் அதிகம்.

எனது தந்தை பிரித்தானிய இராணு வத்தில் வேலை செய்தவர். ஆதலால் அவருக்கு புசல்லாவைப் பிரதேசத்தில் நாய்களைப் பிடிக்கும் தொழில் வழங் கியிருந்தார்கள். நான் ஆரம்ப பிரிவில் கல்வி பயிலும் போது என்னை சக மாண வர்கள் அப்பெயரை வைத்து பட்டம் சூடி கிண்டலும் கேலியும் செய்வார்கள். அம் மாணவர்கள் அப்பாவை வைத்து கேலி செய்யும் போது எனக்கு பாடசாலைக்கு செல்லக் கூட மனம் வராது. பாடசாலை செல்லாமல் அதிகம் வீட்டிலேயே இருப் பேன். என்றாலும் வீட்டவர்களின் முயற் சியால் மனதை சமாளித்துக் கொண்டு பாடசாலை சென்ற நாட்கள் தான் கூட.

காலதேவன் சிறுவயதில் அம்மா வின் உயிரைப் பறித்துக் கொண்டான். நான் ஒரு வயதாக இருக்கும் போது உயிர் இழந்து விட்டார். அம்மா பற்றி ஞாபகமே இல்லை. அம்மாவின் அக் காவின் அரவணைப்பிலேயே நான் வளர்ந்தேன். எனக்கு இரு அண்ணன் மார்கள். அவர்கள் இருவரும் தொழில் ரீதியாக குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்று விட்டனர். தந்தை வேறு திரும ணம் செய்து கொண்டார். தொடர்ந்து படிக்க வசதியில்லை. எனக்கு வழிகாட்டக் கூடியவர்கள் யாரும் இருக்க வில்லை.

துரதிருஷ்டவசமாக என்னுடைய பள்ளிப் பருவத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்படு கிறது. பின்னர் நான் அப்பாவினால் ஒரு கடையில் கூலித் தொழிலுக்கு அமர்த்தப் பட்டேன். அத்தொழிலின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டே அத்தொழில் மூலம் உயர் நிலை அடைந்தேன்.

கே. சிறு வயதில் நீங்கள் வேலைக்கு அனுப்பப்பட்ட அனுபவம் தொடர்பில்,...

ப. அக்கால கட்டத்தில் தம் குடும்ப கஷ்டத்தை போக்குவதற்காக மிகவும் சாதாரணமான சம்பளம் கிடைத்தாலும் போதும் என்கிற நிலைப்பாடும் எத்த கைய தொழிலாக இருந்தாலும் சரி என்ற மனப்பாங்குடன் கூலித் தொழிலுக் கும் அமர்த்தி விடப்படும் நிலைமை தமிழ் தோட்டப்புறங்களில் ஒரு பழக்கமாகவே இருந்து வருகிறது. அது இன்றும் இருக் கிறது.

இதுவே நமக்கு பெரும் பாதிப்பை ஏற் படுத்தியுள்ளது. வேலைக்கு அமர்த்தப் பட்ட பல தரப்பட்ட தோட்டப்புற பெண்கள், சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத் திற்கு நிர்ப்பந்த ரீதியாக உள்ளாக்கப்பட் டுள்ளார்கள். பிழையாக வழிநடத்தப்பட் டுள்ளார்கள் என்பதை நாம் அறிவோம். இதனால் ஏற்படும் விளைவு விபரீதங்கள் வியப்புக்கள் எல்லாம் சமகாலங்களிலும் கேட்டறிந்து வருகின்றோம். இது ஒரு கவ லையான செய்தியாகும்.

மலையக சமூகம் தனித்தன்மை பெற்ற சமூகம். நற்பண்பு கூறுகளைப் பெற்றுள்ளது. எனினும் மலையகம் சமூகம் இன்னும் பல சீர்திருத்தங்களு டன் கல்விக்கான முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி இளந்தலைமுறை யினரின் நலன் கருதி முன்னோக்கி நகர வேண்டி இருக்கிறது. இதற்காக வர்த்தக சமூகம் நிறையப் பங்காற்ற வேண்டிய தேவை இருக்கிறது.

கே. உழைப்பால் உயர்ந்தவர் என்ற வகையில் எவ்வாறான சமூகப் பங்களிப்பை முதன் முதலில் நல்கினீர் கள்,..

ப. மூன்று தசாப்த கால கொடிய யுத்த காலத்தில் மனிதாபின மான உதவிகளைச் செய் தவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினர். போரினால் காயப்பட்டவர்களையும் உயிர் இழந்தவர்களை யும் வைத்தியசாலையி லும் உறவினர்களிடம் ஒப்படைப்பத்தல், இரு தரப்பினர்களுக்கிடையே சமாதான முன் னெடுப்புக்களையும் கருத்துப் பரிமாறல் களையும் மேற்கொள்வதற்காக முழு மூச்சுடன் மிகவும் தியாக அர்ப்பணிப்பு டன் செயற்பட்டவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தினர் என்பது பலராலும் அறிந்த, மறக்க முடியாத உண்மை. இந்தச் சங்கத் தின் நான் ஆயுட் கால அங்கத்தவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் செஞ்சிலுவை அமைப்பில் சிங்கள. தமிழ் முஸ்லிம் எனப் பல எண்ணிக்கையிலான தொண் டர்கள் பணிபுரிந்தார்கள்.யுத்த பிரதேசங் களில் தம்முடைய உயிரையும் பொருட் படுத்தாது மிகவும் கஷ்டத்துடன் போர் நடக்கும் களங்களுக்குச் சென்று தொண் டாற்றினார்கள். அவர்களுக்கான சம்ப ளம் வழங்க உதவி செய்ய வேண்டுமென என்னிடம் கோரிக்கை யொன்றை விடுத்தார் கள். அந்த வகையில் தினசரி ஆறு தொண்டு சேவையாளர்களுக்கு தொடர்ச்சியாக நான் உதவி செய்தேன். இது தான் நான் முதன் முதலில் செய்த மனி தாபிமான உதவியா கும்.

அடுத்து சுனாமி கால கட்டத்தில் அதி களவிலான உதவி கள் செய்துள்ளேன். முல்லைத்தீவு மாவட் டத்திலுள்ள 500 குடும்பங்கள் கடுமை யாகப் பாதிக்கப்பட் டிருந்தார்கள். அம் மக்களுக்கு உடனடி நிவாரண உதவிக ளையும் தற்காலிக இருப்பிட இடர் முகாம் கள் அமைப்பதற்கும் உலருணவுகள் என்று அடிப்படை வாழ்வாதார வசதிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தேன். இந்த உதவி யினை பனை அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகளின் கவனத் திற் கொண்டு வந்து பெற்றுக் கொடுத் தேன். இன்றைக்கும் அந்த வன்னிப் பிர தேசத்திலுள்ள மக்களுக்கு தேவையான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் நான் வழங்கி வருகின்றேன்.

கே. நீங்கள் கண்டிக்கு இடம்பெயர்வ தற்கான காரணம்

ப.1977 களில் நாங்கள் குடியிருந்த வீட்டின் மேல் பாரிய கல்லொன்று வீழ்ந்து வீடு சேதமுற்றது. பின்னர் அந்த அனர்த்தத்தோடு நாங்கள் குடும்பத் தோடு கண்டி வந்து விட்டோம். அன்று முதல் இன்று வரையிலும் கண்டியில் தான் வசித்து வருகின்றேன்.

கே. கண்டியில் நடைபெறும் எந்த வொரு கலை கலாசார நிகழ்வுக ளாக இருந்தாலும் அதைப் புறக் கணிக்காமல் நீங்கள் கலந்து கொள்வதை நாங்கள் அவதா னித்து வந்துள்ளோம். அந்த வகையில் உங்களுக்கு அந்த ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன?

ப.அன்பு நடமாடும் கலைக்கூ டமாகவே ஒவ்வொரு கலாசார நிகழ்வுகளும் எனக்கு அமைந் திருக்கும். கலை இலக்கியத்தை நேசிக்கின்ற ஒரு வட்டம் இருக் கிறது. அந்நிகழ்வுகளை நேரில் பார்த்து ரசித்து சுவைத்தால் மட்டுமே கலை இலக்கியத்தின் மகத்து வம் புரியும். மனதிற்கு ஆறுதலையும் தரும்.

நண்பர் இரா அ. இராமனின் நட்பு கலை இலக்கிய உலகில் பிரகாசிக்கும் எழுத்தாளர்களை யும் கண்டியிலுள்ள பெரியதொரு கலை, கலாசார சங்கத் தையும் அறிமுகம் செய்தன. கண்டி கலை, கலாசார சங்கத்தின் ஸ்தாபக தலைவர் ராஜா ஜெய்கின்ஸ் தலை மையில் மாதத் திற்கு ஒரு தடவை கண்டி கெப்பொட்டிப் பொல மண்டத்தில் விழாக்கள் நடைபெ றும்.

குறிப்பாக எம். ஜி. ஆர். ஞாபகார்த்த விழா, பாடகர் ஏ. எம். ராஜா, ஜிக்கி, காமினி பொன்சேகா தென்னிந்திய பல நடிகர் நடிகர்களின் ஞாபகார்த்த நிகழ் வுகள் மற்றும் மகாத்மா காந்தி விருது, அறிஞர் சித்திலெப்பை விருது, ஆறுமுக நாவலர் விருது என ஒவ்வொரு பெரியார் களது ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு கண்டியில் பல விழாக்கள் தொடர்ந்து நடைபெறும்.

அந்நிகழ்வில் என்னையும் ஒரு முக்கிய பிரதிநிதியாக அவர் அழைப்பு விடுப்பார். அவருடைய கலை, கலாசார முயற்சிகளுக்கு உந்து சக்தியாக இருக்க வேண்டுமெனக் கருதி நான் தவறாமல் கலந்துகொள்வேன். இந்த விழாக்க ளில் நான் கலந்து கொள்ளும் முக்கிய நோக்கம் எமது இளைய சமுதாயத்திற்கு எமது கலை கலாசாரத்தை மேலும் மேம் படுத்துவதற்கும். அதேவேளை ராஜா ஜெய்கின்ஸின் ஆக்கபூர்வமான முயற் சிக்காக கைகொடுத்து உதவவேண்டும் என்பதுமாகும்.

இந்த அமைப்பின் மூலம் இலை மறைகாய்களாக உள்ள எழுத்தாளர் கள், பிரபல்யமான இலக்கியவாதிகள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள், கல்வியலாளர்கள், புத்திஜீவிகள் என சுமார் 2000 பேர் வரை பாராட்டி இரத்தின தீபம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கலாம் என நான் கருதுகின்றேன். இது விசேடமாக ஒரு சாதனை என்றே கூற வேண்டும். உண்மையிலேயே நடிகரும் கலைஞரு மான ராஜா ஜெய்கின்ஸ் பாராட்டத் தக்க ஒருவர்.

அதே போன்று நண்பர் இராமன் மூலம் கண்டியில் முன்னெடுக்கும் கலை, இலக்கிய நிகழ்வுகளுக்கு கைகொடுத்து உதவி வருகின்றேன். என்னையொரு சமூகச் செயற்பாட்டாளராக அடையாளப் படுத்தி அதிகளவு கௌரவப்படுத்தியவர் ராஜ ஜெய்கின்ஸ் ஆவார். இந்தச் சந்தர்ப் பத்தில் மனம் நிறைந்த நன்றிகளை அவ ருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கே. ஏனைய சமூகப் பணிகள் தொடர்பில்,..

ப.ஒவ்வொரு வருடமும் வறிய குடும் பத்தைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளை களுக்கு பாதணிகள், பாடப் புத்தகங்கள், பாடசாலை பைகள், கற்றல் உபகரணங் கள் வழங்கி வருகின்றேன். கொத்மலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு திரு வள் ளுவர் சிலையொன்றை நிர்மாணித்து

வழங்கியுள்ளேன். பாடசாலைகளின் வேண்டுகோளுக்கு இணங்க குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்று அவர்களின் தேவையை கருத் திற் கொண்டு உதவி செய்துள்ளேன்.

மாத்தளையில் மிகப் பிரமாண்டமான முறையில் காந்தி கேட்போர் மண்டபம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் அதற்கு ஒரு பிரத்தியேகமான சிற்றுண்டிச்சாலை இருக்கவில்லை. காந்தி சபையினரின் வேண்டுகோளுக்கு இணங்க அதன், அங்கத்தவர் என்ற வகையில் அதன் நிர் மாணப் பணிக்காக உதவிகள் செய்துள் ளேன்.

கண்டி மாவட்ட மனித உரிமை அமைப் பின் அமைப்பாளராக நானும் நண்பர் சண்முகநாதனும் இணைந்து செயற்பட் டோம். கண்டி பேராதனை ஹோட்டலில் மனித உரிமை தொடர்பான கருத்தாட லும் பெரிய பாராட்டு நிகழ்வினையும் நடத்தினோம். இவை போன்ற பல சமூக இயக்க செயற்பாடுகளிலும் பங்கேற்று செயற்பட்டுள்ளேன்.

ஐ.நா சபையிலிருந்து வருகை தந்துள்ள அதன் மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களுக்குரிய அரசியல் மற்றும் சமாதான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் காலித் ஹையரி மற்றும் இலங்கைக்கான ஐ.நா வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் உள்ளிட்ட உயர்மட்ட தூதுக்குழுவினர், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை, புதன்கிழமை (24) ஷங்கரில்லா ஹோட்டலில் சந்தித்து, முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சமகால அரசியல் சூழ்நிலை என்பன தொடர்பில் கலந் துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

காடுகளை மீண்டும் உருவாக்கும்

இலங்கை விமானப்படையின் வான் வழி விதைக்குண்டு வீச்சு செயல்திட்டம்

இலங்கையில் வன அடர்த்தியை அதி கரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன வின் தலைமையின் கீழ் இலங்கை விமானப்படையினர் இலங்கை வன பாதுகாப்பு திணைக்க ளம், பேராதெனிய பல்கலைக்கழக விவ சாயபீடம், மத்திய சுற்றுச்சூழல் ஆணை யகம் மற்றும் மாஸ் கெபிடல் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றுடன் இணைந்து செவ்வாய்க்கிழமை (23) வத்தேகம கெபிளித்த வனப்பகுதியில் 06வது முறையாக வான் வழிமூலம் விதைகுண் டுவீச்சு செயற்திட்டம் இடம்பெற்றது.

விமானப்படை கட்டளை வேளாண்மை பிரிவின் கட்டளை அதிகாரி குருப் கேப்டன் ரஜீவ் கொடிப்பிலி மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் தலை மையில் கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் அமைத்துள்ள வேளாண்மை பிரிவினால் இந்த விதைக்குண்டுகள் செய்யப்பட்டன. 2030 ஆம் ஆண்டில் பசுமைக் விரிவாக்கத்தை 27% முதல் 32% ஆக உயர்த்துவதன் மூலம் நாட்டின் நிலையான அபிவிருத்தி இலக் குகளை அடைவதற்காக இலங் கையின் வன அடர்த்தியை மேம்படுத்தும் நோக்கத்தை அடைவதாகும்.

இதன் முதலாவது செயற் திட்டமாக ரணுறவ தேசிய வனப்பகுதியின் 5 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 5,000 விதைக்குண்டுகளும், 2 வது கட் டமாக அம்பாறை லகுன வனப் பகுதியின் 60 வனப்பகுதியில் 67,000 விதைக்குண்டுகளும் 3வது கட்டமாக லகுன தேசிய பூங்காவில் 2020 டிசம் பர் காலப்பகுதியில் 25 ஏக்கர் நிலப்ப ரப்பில் 30,000 விதைக்குண்டுகளும் நான்காவது முறையாக மீண்டும் லகுன தேசிய பூங்காவில் 60 ஏக்கர் நிலப்ப ரப்பில் 67,000 விதைக்குண்டுகளும் 5 வது முறையாக கெபிளித்த தேசிய வனப்பகுதியில் 75 ஏக்கர் நிலப்பரப்பில் 80,000 விதைக்குண்டுகள் இதுவரை விமானப்படையினால் வான் வழிமூலம் வீசப்பட்டுள்ளது. வீரவெல இலங்கை விமானப்படை தளத்தை மையமாக கொண்டு எம்ஐ 17 ஹெலிகாப்டர் உதவி யுடன் கிட்டத்தட்ட65,000 விதைகுண்டு கள் சுமார்70 ஏக்கர் நிலப்பரப்பில் வான் வழிமூலம் தெளிக்கப்பட்டன. இவற்றுள், கூலன், வேம்பு, ஆத்தி, நாகை, புளி, பருத்தி, பாலை, வீரை, மருது, கித்துள் போன்றவை ஆகியன உள்ளடங்குகின் றன. இந்த திட்டத்திற்கு விமானிகளாக விங் கமாண்டர் சேனக கூரகமுவ மற்றும் துணை விமானியாக பிளைட் லேப்ட்டி னால் சுதார அமரதேவ ஆகியோர் செயற் பட்டனர்.

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2021 நவம்பர் 26 வெள்ளிக்கிழமை

மேற்கிந்தியதீவுகளின் போராட்டம் வீண் ;

முதல் டெஸ்ட் போட்டியில் வென்று 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் இலங்கை

மேற்கிந்தியதீவுகள் அணிக்கு எதிரான ஐசிசி டெஸ்ட் சம்பியன் ஷிப்புக்கான முதல் டெஸ்ட் போட்டியில், 187 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற, இலங்கை அணி தொடரில் 1-0 என முன்னிலைபெற்றுள்ளது.

போட்டியின் நான்காவது நாள் ஆட்டரே நிறைவில் 52 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில், துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்தியதீவுகள் அணி, இலங்கை அணியின் பந்துவீச்சாளர்களுக்கு கடுமையான நெருக்கடியை கொடுத்தது.

குரூமா போனர் மற்றும் ஜசுவா டா சில்வா ஆகியோர் மிகவும் நுணுக்கமாகவும், நிதானமாகவும் ஓட்டங்களை குவித்தனர். இதில், இலங்கை அணியின் பந்துவீச்சாளர்களுக்கு விக்கெட்டுகளை கைப்பற்றுவதற்கான பாரிய வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

தொடர்ந்தும் நெருக்கடி காட்டிய மேற்கிந்தியதீவுகள் அணிசார்பில், மிக அற்புதமாக ஆடிய ஜசுவா டா சில்வா அரைச்சதத்தை பதிவு செய்தார். எனினும் இவர் 54 ஓட்டங்களை பெற்றிருந்த போது, லசித் எம்புல்தெனியவின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க, மதியபோசன இடைவேளையின் போது, மேற்கிந்தியதீவுகள் அணி 125 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

மதியபோசன இடைவேளைக்கு பின்னர் களமிறங்கிய மேற்கிந்தியதீவுகள் அணி விக்கெட்டுகளை விட்டுக்கொடுக்காமல் ஆட முற்பட்ட போதும், இலங்கை அணியின் சுழல் பந்துவீச்சாளர்களின் அற்புதமான பந்துவீச்சின் மூலமாக 79 ஓவர்கள் நிறைவில் 160 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது.

மேற்கிந்தியதீவுகள் சார்பாக குரூமா போனர் இறுதிவரை போராட்டமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். இவர், இறுதிவரை ஆட்டமிழக்காமல் 220 பந்துகளுக்கு 68 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்திருந்தார். இலங்கை அணியின் பந்துவீச்சில், லசித் எம்புல்தெனிய தன்னுடைய 4வது ஐந்து விக்கெட் பிரதியை பதிவுசெய்து 5 விக்கெட்டுகளையும், ரமேஷ் மெண்டிஸ் 4 விக்கெட்டுகளையும், பிரவீன் ஜயவிக்ரம ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

போட்டியை பொறுத்தவரை, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 386 ஓட்டங்களை பெற்றிருந்ததுடன், மேற்கிந்தியதீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 230 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்திருந்தது. பின்னர், இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்து 191 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்த, 348 என்ற வெற்றியிலக்கை நோக்கிய மேற்கிந்தியதீவுகள் அணி 160 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது.

ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றதன் ஊடாக, புள்ளிப்பட்டியலில் 12 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது. குறிப்பாக வெற்றி சதவீதத்தை அடிப்படையாகக்கொண்டு தரவரிசை அமைக்கப்படும் என்பதால், 100 சதவீத வெற்றி பிரதியுடன் இலங்கை அணி முதலிடம் பிடித்துள்ளது. பட்டியலின், இரண்டாவது இடத்தில் இந்திய அணியும், மூன்றாவது இடத்தில் பாகிஸ்தான் அணியும் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

43rd OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2021
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

43வது ஒப்சவர் SLT-மொபிடெல்
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2021

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் ஒப்சேவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2021
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2021
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2020/2021 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது :.....
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை :.....
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை :.....
வாக்களித்தவர் பெயர் :.....
முகவரி :.....
மொபைல் இல. :.....

Sunday Observer

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

43வது ஒப்சவர் SLT-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT-மொபிடெல் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 27-11-2021 இல. 08

தற்போது உங்களுக்கும்,
இலங்கையின் முதன்மையான,
அதிவேகமான மற்றும் விஸ்தரிக்கப்பட்ட
Premium Fibre வலையமைப்பு.
Fibre இணைப்பினைப் பெற்றிட, அழையுங்கள் 1212
FIBRE | தேசத்தின் நிகரில்லா பைபர் இணைப்பு
www.sltmobitel.lk
SLTMOBITEL திகரற்ற இணைப்பு

திருக்கோவில் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி: வெற்றி பெற்ற இளைஞர் கழக வீரர்கள் பாராட்டி கௌரவிப்பு

திருக்கோவில் தினகரன் நிருபர்

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையில் இளைஞர் விவகார விளையாட்டுதுறை அமைச்சினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற கழக வீர வீராங்கனைகள் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வு இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் கே.பிரபாகரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமைமலை இடம்பெற்று இருந்தன.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள இளைஞர் கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட குழு மற்றும் சுவட்டு நிகழச்சி விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப்பெற்ற 15 கழகங்களைச் சேர்ந்த சுமார் 65 வீர வீராங்கனைகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் 33வது தேசிய மட்ட கிரிகெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ள திருக்கோவில் பிரதேச பெண்கள் கிரிகெட் கழக வீராங்கனைகளுக்கான சீருடை மற்றும் காலணிகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இருந்ததுடன் நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். அனோஜா மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி ஏ.முபாரக் அலி மற்றும் நன்கொடையாளர்கள், விளையாட்டுதுறை பயிற்றுப்விப்பாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், விளையாட்டு வீர வீராங்கனைகள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

திருகோணமலை அலெக்ஸ் அணி சம்பியன்

கிண்ணியா மத்திய நிருபர்

சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கோடு திருகோணமலை எஹெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்று கடந்த (14) திருகோணமலை மெக்கெய் சர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

10 அணிகள் பங்குபற்றியிருந்த இந்த தொடரின், இறுதிப்போட்டிக்கு லிவர்பூல் அணியும் அலெக்ஸ் அணியும் தகுதி பெற்றிருந்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய லிவர்பூல் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 25 ஓட்டங்களைப் பெற்றது.

26 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அலெக்ஸ் அணியினர் மூன்று ஓவர் 4 பந்துகளில் வெற்றி இலக்கை அடைந்தனர்.

இப் போட்டித் தொடரை திருகோணமலை யுனைட்டட் கிங்ஸ் விளையாட்டுக்கழகம் ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஹிஜ்றா இளைஞர் கழகம் சம்பியன்

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அக்கரைப்பற்று பிரதேச செயலக இளைஞர் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவில் ஹிஜ்றா இளைஞர் கழகம் 134 புள்ளிகளைப் பெற்று சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

கிங் வொரியஸ் இளைஞர் கழகம் 61 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் சூசிற்றி இளைஞர் கழகம் 31 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டதாக அக்கரைப்பற்று பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி சமீலுல் இலாஹி தெரிவித்தார். இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் விளையாட்டு விழாவில் பதிவு செய்யப்பட்ட மொத்தம் 18 இளைஞர் கழகங்கள் பங்குபற்றின.

அக்கரைப்பற்று பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி சமீலுல் இலாஹி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எல்.பி.முஹைமின் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களின் தலைவர் எம்.எம்.றுக்ஷான் தலைமையில் அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் இறுதி நாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் அஸ்மி அப்துல் கபூர், தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் கங்கா சாகரிக்கா,அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளான ஏ.முபாறக் அலி, சிறிவர்தன, அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் சேவைகள் அதிகாரி பீ.எம்.றியாத், தேசிய சம்மேளனப் பிரதிநிதி சிப்னாஸ் அஸீஸ் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

அதிதிகள் வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைத்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 நவம்பர் மாதம் 26ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

அறிவித்தல்

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

2007, 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனிகளை கூட்டிணைப்பதற்கான அச்சட்டத்தின் 05(01)(இ) அத்தியாயத்தின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

இந்த பத்திரிகை அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்படுவதானது, 2021 ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி முதல் செப்டெம்பர் 30ஆம் திகதி வரை கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் ஆவணங்கள் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

இல	பதிவிலக்கம்	கம்பனியின் பெயர்	விலாசம்	திகதி
1	PV00242955	குளோரியா இன்ஸ்டிடியூட் என்ட் நேசரி (பிவிடி) எல்டிடி	17/2, ஏ, நவரத்தின ஜயவீர மாவத்தை, கித்தம்பஹுவ, வெல்லம்பிட்டிய., 10600	8/1/2021
2	PV00242948	ஸஹன ஜபான் லங்கா (பிவிடி) எல்டிடி	இல: 31/G/1, குருந்துவத்த வீதி, அளுத்கம, போகமுவ, யக்கலை, 11870	8/1/2021
3	PV00242945	ஒன்லைன் பார்மசி (பிரைவேட்) லிமிடெட்	96, அக்குருபிட்டிய வீதி, களனி, 11300	8/1/2021
4	PV00242940	சிலோன் கொக்கோ ஸப்ஸ்ட்ரேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	இல: 32, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, குடியிருப்புவ, வவுனியா, 43000	8/1/2021
5	PV00242941	எலைன் கோச்சிங் (பிரைவேட்) லிமிடெட்	சூட் 11/1, பிரின்ஸ் அல்பிரட் கோபுரம், இல. 10, அல்பிரட் கவுஸ் தோட்டங்கள், கொழும்பு 3, 00400	8/1/2021
6	PV00242946	பிரேமசிரி கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவேட்) லிமிடெட்	162/15, செத்சிறி இடம், பன்னிபிட்டிய, 10280	8/1/2021
7	PV00242942	எஸ் 2 எஸ் குரூப் (பிரைவேட்) லிமிடெட்	நிடெல்ல தோட்டம், களுகல்ல வீதி, தீகம, நிகதலுபொத, 60580	8/1/2021
8	PV00242943	எல்பொக் ஹோல்டிங்ஸ் (பிவிடி) எல்டிடி	இல: கே 40, பங்களாவத்தை, 11850	8/1/2021
9	PV00242950	கெரி ∴பூட் எக்ஸ்பிரஸ் (பிரைவேட்) லிமிடெட்	இல: 59/15, ஓயா பஹல, மாத்தளை. 21000	8/1/2021
10	PV00242944	கனிது இம்போர்ட் என்ட் எக்ஸ்போர்ட் (பிவிடி) எல்டிடி	இல. 548, மாஹிம்பிட்டிய வீதி, தண்டகமுவ, குளியாப்பிட்டிய, 60200	8/1/2021
11	PV00242949	கிங்ஸ்வே ஹெல்த்கெயார் (பிவிடி) எல்டிடி	28/1, பெல்லந்தர வீதி, நெதிமால, தெஹிவளை, 10350	8/1/2021
12	GA00242947	வீ ஸோல்வ் பவுன்டேஷன்	இல.06, கிளேசன் இடம், கெப்பிட்டிபொல மாவத்தை முன்னால் கொழும்பு 05, 00500	8/1/2021
13	PV00242951	∴பிரஷ்நட் எக்ஸ்போர்ட்ஸ் (பிவிடி) எல்டிடி	இல: 342/B/4, அக்பர் டவுன், வத்தளை, 11720	8/1/2021
14	PV00242952	டேக் இட்.எல்கே (பிரைவேட்) லிமிடெட்	இல. 7சி, கெட்டமன்ன வீதி, பெலியத்த, 82400	8/1/2021
15	PV00242953	டொப் நொட்ச் பியூட்டி எக்ஸ்பேர்ட் (பிவிடி) எல்டிடி	354/1, காலி வீதி, பாணந்துறை, 12500	8/1/2021
16	PV00242954	ஒநெக்ட்டோ குரூப் (பிவிடி) எல்டிடி	இல. 106, கோவில் வீதி, களுத்துறை வடக்கு, 12000	8/1/2021
17	PB00242956	ஸதாஹரித்த எஸெட் மெனேஜ்மன்ட் லிமிடெட்	இல. 06A, ஆல்பிரட் இடம், கொழும்பு 03, 00300	8/1/2021
18	PV00242971	ஆஸ்.எல்கே (பிரைவேட்) லிமிடெட்	85/19 சென்ட்ரல் வீதி, கொழும்பு-12, 00120	8/1/2021
19	PV00242957	ஸ்கிள்ளிஜன்ஸ் (பிவிடி) எல்டிடி	இல. 93/E கிரீன் பார்க், ஜயந்தி வீதி, ஹல்ஒலுவ, 20032	8/1/2021
20	PV00242958	லெம்டா (பிவிடி) எல்டிடி	247/2, இலுக்கேவல, வேஉட, மாவத்தகம, 60060	8/1/2021
21	PV00242982	வீ ஜே டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	473/1, வதுரபாத, ஹெய்யந்துடுவ. 11618	8/1/2021
22	PV00242959	லாவிஷ் கொஸ்மெட்டிக்ஸ் (பிவிடி) எல்டிடி	இல:L1- 21, ரியாலிட்டி பிளாசா, ஜாஎலா., 11350	8/1/2021
23	PV00242972	ஏன்ட் கோப்பரேஷன் (பிவிடி) எல்டிடி	இல.564/B, ஜயா மாவத்தை அகுரேகொட வீதி, பெலவத்தை, 121387	8/1/2021
24	PV00242960	பிலக் எப்பள் (பிவிடி) எல்டிடி	249, சிலாபம் வீதி, நீர்கொழும்பு. 11500	8/1/2021
25	PV00242961	ரிஷ் பொய்ன்ட் டெக்ஸ்டைல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	இல: 172/A, கெய்சர் வீதி, கொழும்பு 11, 01100	8/1/2021
26	PV00242979	ஜெனதி ஆயுர்வேத (பிரைவேட்) லிமிடெட்	இல: 139/15, புலிநதலாராம வீதி, மாகம்மான, ராகம, 11010	8/1/2021
27	PV00242962	ஏ என்ட் ஏ கொலபரேட்டிவ் பன்ட் (பிவிடி) எல்டிடி	9/2, சோவிஸ் மாவத்தை, கலா-எலியா, ஜா-எலா, 11350	8/1/2021
28	PV00242973	நிக்கல் ரெட் சொலூஷன்ஸ் (பிவிடி) எல்டிடி	இல: 09, பார்க் கார்டன்ஸ், கொழும்பு 05, 00500	8/1/2021
29	PV00242963	ரஜரட்ட நேச்சர்ஸ் இன்டர்நெஷனல் (பிவிடி) எல்டிடி	இல: 2/B, ஜெயவிமன, நில்பனாகொட, மினுவாங்கொட, 11550	8/1/2021
30	PV00242964	சினோனி டிரேடிங் (பிவிடி) எல்டிடி	இல: 5D, உடுமுல்லை, குருபிட, பொல்கம்பொல, 12136	8/1/2021
31	PV00242965	டேடாலிங் ஒட்டோமேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	22/1 A, பட்டண்டுவன, மினுவாங்கொடை, 11550	8/1/2021
32	PV00242974	எஸ் எம் ஹன்ஸ லொஜிஸ்டிக்ஸ் என்ட் டிரான்ஸ்போர்ட் கம்பனி (பிவிடி) எல்டிடி	இல: 1/126, அத்தரகம, பட்டியாவத்தை, கண்டி, 20000	8/1/2021
33	PV00242966	ரூபி இன்ஜினியரிங் (பிவிடி) எல்டிடி	115, சத்நாதர் சிவன் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், 40000	8/1/2021
34	PV00242967	ஹொட்டல் நோர்த் வே (பிவிடி) எல்டிடி	இல: 515, மூன்றுமுறிப்பு, கண்டி வீதி, வவுனியா., 43000	8/1/2021
35	PV00242968	லைப் அக்ரோ சிலோன் சேர்விசஸ் (பிவிடி) எல்டிடி	577/D/2/E, லெப்டினன்ட் அசோகா மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்ல, 10120	8/1/2021
36	PV00242975	ரன்சிலு எப்பரல்ஸ் சொலூஷன்ஸ் (பிவிடி) எல்டிடி	7/65, நிவ்டவுன் வீதி, பல்லேகம, எம்பிலிப்பிடிய, 70200	8/1/2021
37	PV00242969	சீ டி ஏ குளோபல் எக்ஸ்ஸொட்டிக் (பிவிடி) எல்டிடி	577/D/2/E, லெப்டினன்ட் அசோக மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்ல, 10120	8/1/2021
38	PV00242970	ஸ்பைசலன்ட் ∴புட் லங்கா (பிவிடி) எல்டிடி	இல. 59/3, கெப்பெட்டிபொல்ல தோட்டம், கொலொன்னாவ, 10600	8/1/2021
39	PV00242980	யம் கெ.∴பே (பிவிடி) எல்டிடி	310/1 ஷீலானந்த மாவத்தை, கொட்டிகாவத்தை, 10600	8/1/2021
40	PV00242976	கெட்டலிஸ்ட் எட்வைஸர்ஸ் (பிவிடி) எல்டிடி	இல. 145/1, பழைய வீதி, நாவின்ன, மஹரகம, 10280	8/1/2021
41	PV00242977	டர்ப்போலக்ஸ (பிவிடி) எல்டிடி	23 பி- 1/1, புகையிரத நிலைய வீதி, கொழும்பு 06, 00600	8/1/2021
42	PV00242984	பிரேன்ட் குரு லங்கா (பிரைவேட்) லிமிடெட்	15/1B, ஸ்ரீ சங்கபோ வீதி, கவுடான, தெஹிவளை, இலங்கை, 10350	8/1/2021
43	PV00242978	சம்பத் சுப்பர் குரூப் ஒப் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்	207/A, ''சம்பத்", விலிம்புல, ரதவான, 11725	8/1/2021
44	PV00242983	லீப் மீடியா (பிரைவேட்) லிமிடெட்	ஹட்ச், இல: 14, சேர் பாரொன் ஜெயதிலக மாவத்தை, கொழும்பு 1, 00100	8/1/2021
45	PV00242981	வீ.எஸ். அய்யன் அக்குவா பார்மிங் (பிவிடி) எல்டிடி	940/19, துறைமுக வீதி, அரியாலை கிழக்கு, யாழ்ப்பாணம், 40000	8/1/2021
46	PV00242985	சாரா குளோபல் ஹோல்டிங்ஸ் (பிவிடி) எல்டிடி	இல: 214/3/2/10, கேம்வே பிளாசா, ஸ்ரீமத் பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு - 12,01200	8/1/2021
47	PV00242986	லாசரஸ் பி. ஆர் (பிரைவேட்) லிமிடெட்	இல: 11/B/1, இசுரு உயன, பாடசாலை வீதி, போகுந்தர, பிலியந்தலை, 10300	8/1/2021
48	PV00242987	2020 டிரேடர்ஸ் குரூப் (பிவிடி) எல்டிடி	இல: 20, ஜுட் லேன், ஏத்துக்கால, நீர்கொழும்பு, 11500	8/1/2021
49	PV00243006	சி ஐ டி குரூப் (பிவிடி) எல்டிடி	செனவிரத்ன கட்டிடம், மடகல்ல சந்தி, பொல்பிதிகம, 60620	8/2/2021
50	PV00242992	மேன்குரோ பி என் ஜி (பிவிடி) எல்டிடி	இல: 70/61, ஸ்ரீ சித்தார்த்த வீதி, கிருலபன, கொழும்பு - 05, 00500	8/2/2021
51	PV00242993	சரித் ஜே சி குரூப் ஒப் கம்பனீஸ் (பிவிடி) எல்டிடி	உலக வர்த்தக மையம், மேற்கு கோபுரம், நிலை 04, கொழும்பு 01, 00100	8/2/2021
52	PV00242988	ஹஸ்தி லேன்ட்ஸ் (பிவிடி) எல்டிடி	இல. 310, கொழும்பு வீதி, அமுனுகம, பொத்துஹெர, 60330	8/2/2021
53	PV00242994	லைப் வெயார் (பிவிடி) எல்டிடி	469B, கண்டி வீதி, கடவத்தை, 11850	8/2/2021
54	PV00243007	காகோ சொலூஷன் சேர்விசஸ் (பிவிடி) எல்டிடி	இல. 323-B-3, செயின்ட் மேரிஸ் வீதி, வெலிவிட்ட, கடுவெல, 10640	8/2/2021
55	PV00242995	நேச்சர்பெல் ஹோம்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	இல. 9A/3, மத்தேகொட வீதி, பெலென்வத்த, பன்னிபிட்டிய, 10320	8/2/2021
56	PV00242990	ஹெட்ரொஜன் (பிவிடி) எல்டிடி	525/1, தர்மபால மாவத்தை, கலபலுவாவ வீதி, அக்கொன, 10620	8/2/2021
57	PV12547	ஜெ. கே. இட்டலி லங்கா (பிரைவேட்) லிமிடெட்	,,	8/2/2021
58	GA00242996	ஸவுத் ஏசியன் இன்டர்நெஷனல் எஸோசியேஷன் போ ஏர்லி ஷைல்ட்ஹுட் கெயா என்ட் டிவலொப்மன்ட்	இல. 91, ரப்பர்வத்த வீதி, கங்கொடவில, நுகேகொட, 10250	8/2/2021
59	PV00242997	ஏ.யூ.எஸ். சொலுஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	இல.07, கந்தே வீதி, கண்டி, 20000	8/2/2021
60	PV00243008	ரோயல் டெக் இன்டஸ்ட்ரீஸ் (பிவிடி) எல்டிடி	232 G, ஹொரகஹகந்தே வீதி, பத்தரமுல்ல, 10120	8/2/2021
61	PV00242998	டெப்ரோபேன் ஓர்கெனிக் புரடக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	62/E, ஜனதா மாவத்தை, கொஸ்னதொட்ட, கொடகவெல, 70160	8/2/2021
62	PV00242999	ஹோட்டல் 888 (பிரைவேட்) லிமிடெட்	இல.109/4, யடவத்த வீதி, பியகம, 11650	8/2/2021
63	PV00243000	கிரீன் லை.∴ப் இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிடெட்	இல. 195/6, சிரிவர்தன வீதி, குருகுலவ, ராகம, 11010	8/2/2021
64	PV00243001	பர்கர் ஹேங் ஓவர் (பிவிடி) எல்டிடி	இல.20A, அபய மாவதா, பொருபன வீதி, இரத்மலான, 10390	8/2/2021
65	PV00243002	டக் டிக் மீடியா (பிரைவேட்) லிமிடெட்	இல. 680/A/2, துஷார, கித்துலாவ, களுத்துறை தெற்கு., 12000	8/2/2021
66	PV00242991	ஸொய்ல் ஒ.∴ப் பியுஷர் (பிவிடி) எல்டிடி	இல. 356/S/5 சன்ரே கார்டன், படுவத்த, ராகம, 11010	8/2/2021
67	PV00243003	எக்ஸ்சோன்ஸ் (பிவிடி) எல்டிடி	175/P, புதிய கண்டி வீதி, கடவத்தை., 11850	8/2/2021
68	PV00243004	மெடப் சேர்விசஸ் லங்கா (பிவிடி) எல்டிடி	இல. 177/1, மாகம்மன, ஹோமாகம, 10200	8/2/2021
69	PV00242989	ஆர் டி எஸ் கேன்னிங் (பிவிடி) எல்டிடி	இல.17, அம்பகஹவத்த வீதி, கங்கொடவில, நுகேகொட, 10250	8/2/2021
70	PV00243005	இநோவா எனிமல் கெயா (பிவிடி) எல்டிடி	33A, மூன்றாம் தளம், கரவனெல்ல வீதி, வரகாபொல, 71600	8/2/2021
71	PV00243051	ரோயல் ஹோம்ஸ் ஹாட்வெயார் என்ட் இலெக்ட்ரிகல் (பிவிடி) எல்டிடி	232 G, ஹொரகஹகந்த வீதி, பத்தரமுல்ல, 10120	8/3/2021
72	PV00243044	மிஸ்ட.கொத்து கிரான்ட் (பிரைவேட்) லிமிடெட்	இல. 293/17A, புதிய வைத்தியசாலை வீதி, தலபத்பிட்டிய., 10250	8/3/2021
73	PV00243009	எலியன்ஸ் ஒட்டோகெயா (பிவிடி) எல்டிடி	203, கடுவெல வீதி,, தலங்கம, பத்தரமுல்ல.,10120	8/3/2021
74	PV00243014	சூர கொவியா எக்ரி பார்ம் ஹோல்டிங்ஸ் (பிவிடி) எல்டிடி	இல. 280, கஜமங்கம, பட-அத்த - வடக்கு, ஹுங்கம, 82120	8/3/2021
75	PV00243010	சிலோன் பிரைம் எக்ஸ்போர்ட்ஸ் இன்டர்நெஷனல் (பிவிடி) எல்டிடி	445/B, கொஹல்வில வீதி, கோனவல, களனி, 11630	8/3/2021
76	PV00243011	இக்கோன் லங்கா (பிவிடி) எல்டிடி	இல. 367/2, நாவலர் வீதி, இலுப்பையடி சந்தி, யாழ்ப்பாணம், 40000	8/3/2021
77	PV00243043	ஐ எம் எல் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட்	209/2 யூனியன் பிளேஸ், கொழும்பு 2, 00200	8/3/2021
